


கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

நியூ செஞ்சுரியின்

# உங்கள் நூலகம்

மாத இதழ்

*திருவள்ளுவராண்டு 2051*

*மலர் - 13 இதழ் - 8 - நவம்பர் 2021*

ஆசிரியர்

**த.ஸ்டாலின் குணசேகரன்**

பொறுப்பாசிரியர்

**சண்முகம் சரவணன்**

ஆசிரியர் குழு

*எஸ். சண்முகநாதன்*

*தி.ரத்தினசபாபதி*

*அ.கிருஷ்ணமூர்த்தி*

இதழ் வடிவமைப்பு

*கா. குணசேகரன்*

நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்

பதிவு எண் : 21/2005/ 11/2/2005

16 (142), ஜானி ஜான்கான் ரோடு,

இராயப்பேட்டை, சென்னை - 600 014

ungalnoolagam@gmail.com | www.ncbhpublisher.in

இணைய தள முகவரி: **www.keetru.com**

தனி இதழ் ₹ 30.00, ஆண்டு சந்தா ₹ 360.00

மாணவர்களுக்கு ₹ 300.00

ஆயுள் சந்தா ₹ 3000.00

அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 2750.00

*சந்தா தொகையை*

**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch, Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**

*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**பொறுப்பாசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**


## உள்ளே...


1
படித்துப் பாருங்களேன்...
ஆ.சிவசுப்பிரமணியன்........ 04

2
நீட் தேர்வா? நாம் பயப்படத் தேவையில்லை
டாக்டர். சு.நரேந்திரன்........ 13

3
பேண்டமிக் டு எண்டமிக்
க. பழனித்துரை........ 19

4
படக்காரன் சொன்ன கருடபுராணம்
அ.கா.பெருமாள்........ 25

5
அதிகார வர்க்கத்தில் கூமுட்டைகள்
ச. சுபாஷ் சந்திரபோஸ்........ 31

6
நேரு குறித்த ஓர் அர்த்தமுள்ள நூல்
ந. முத்துமோகன்........ 37

7
கி.ரா.வின் படைப்புகளில்
விவசாயமும் விவசாயிகளும்
சு. அழகேஸ்வரன்........ 41

8
வசைச் சொற்களில் ஒளிந்திருக்கும் சாதிகள்
தீ.ஹேமமாலினி........ 47

9
சைவப் புலமைப் பாரம்பரியம்
சைவ அச்சுப்பண்பாடு - ஆவணம், ஆய்வு
வீ. அரசு........ 51

10
வெண்கல் அமிர்தம்
ஆ.கார்த்திகேயன்........ 57

11
பாம்புபட இடிக்கும்
பொ. சிவசங்கரன், இ.ஆ.ப.,........ 61

12
மொழிவழி மாநிலம் ஏன் இந்தக் குழப்பம்?
உதயை மு. வீரையன்........ 65

13
கொள்ளை போன ஒரு பேரரசு
வேலு.ராஜகோபால்........ 69



படித்துப் பாருங்களேன்...

ஆ.சிவசுப்பிரமணியன்

# வரலாற்றிலும் பண்பாட்டிலும் பண்ட்கள்

சுரேந்திர ராவ்.பி.(2010)

**Surendra Rao(2010) Bunts in History and Culture .**
**World Bunts' Foundation Trust(R), S.R.S.Home, Mangalore-575 003**

இந்த நூல் தென் கர்நாடகத்தில் வாழும் பண்ட்களின் வரலாறு மற்றும் பண்பாட்டின் வளமையை ஆய்வு செய்யும் முயற்சியாகும் (நூலின் அறிமுக இயலில் நூலாசிரியர்).

கர்நாடக மாநிலத்தின் தெற்குப் பகுதியில் வாழும் பண்ட்கள் என்ற முக்கிய சமூகத்தைக் குறித்த நூல்இது. இச் சமூகம் குறித்த ஓர் அறிமுக நூலாகவும் ஆய்வு நூலாகவும் இந்நூல் எழதப்பட்டுள்ளது. அதே நேரத்தில் இந்நூலானது முற்றிலும் இச் சமூகத்தின் வரலாறாக அமையாமல் துளு நாட்டின் வரலாற்றிலும் பண்பாட்டிலும் பண்ட்களின் பங்களிப்பை ஆராய்கிறது. பண்ட் என்ற சொல் அண்மைக் காலமாகத்தான் பயன்படுத்தப் படுகிறது. நாடவர் *(Nadava)* ஒக்கிலிம் *(Okkelme)* என்ற சொற்களாலேயே இவர்கள் முன்னர் அழைக்கப்பட்டனர். தற்போது வழங்கும்.*Bunts* என்ற ஆங்கிலச்சொல்லை *Bant* என்று எட்கர் தர்ஸ்டன் தமது தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் நூலில் குறிப்பிட்டுள்ளார். *Bunts* என்ற பன்மைச் சொல்லை கன்னடத்தில் பண்டரு என்று அழைப்பதாகக் குறிப்பிட்ட நண்பர் சீனிவாசன் (தேரேகால்புதூர்) தமிழில் பண்ட்கள் என்றழைக்கலாம் என்றார். இவர் துளு மொழி அறிந்தவர். தர்ஸ்டன் நூலின் தமிழ் மொழிபெயர்ப்பில் பண்டர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பண்ட்கள் வாழும் பகுதி துளுநாடு என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. பரவலாக அறியப்பட்ட மங்களூர், உடுப்பி என்ற ஊர்கள் இப் பகுதியில்தான் உள்ளன. துளுநாடு என்ற நிலப்பகுதி

கர்நாடக மாநிலத்திற்குள் இருந்தாலும் இப்பகுதி மக்களின் பேச்சு மொழியாகத் துளு மொழிதான் உள்ளது. துளுமொழி குறித்து கால்டுவெல் தமது திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். திராவிட மொழிக்குடும்பத்தைச் சேர்ந்த இம்மொழிக்கு வரிவடிவம் இல்லை. ஆயினும் வாய்மொழி வடிவிலான நாட்டார் வழக்காறுகள் உள்ளன. குறிப்பாக பர்தானா என்ற கதைப்பாடல்கள் வாய்மொழிக் காவியங்களாக வழக்கிலுள்ளன.


**துளுநாடு**

துளு நாடு குறித்த தொன்மைச் சான்றுகள் சங்க இலக்கியத்தில் உள்ளன. ஆய்வறிஞர் மயிலை சீனி.வேங்கடசாமி துளு நாட்டு வரலாறு என்ற தலைப்பில் ஆய்வு நூல் ஒன்றை எழுதியுள்ளார். அவரது கருத்துப்படி, கொங்கண நாடு என்று சங்க இலக்கியங்களில் இந்நிலப்பகுதி குறிப்பிடப் பட்டுள்ளது என்று குறிப்பிடும் அவர் "பழைய சேர நாடு பிற்காலத்திலே மலையாள நாடாக மாறித் தனியாகப் பிரிந்து போய்விட்டது போலவே பழைய தமிழகத்துடன் இணைந்திருந்த துளுநாடும் பிற்காலத்திலே பிரிந்து தனியாகப் போய்விட்டது" என்கிறார்.

மாமூலனார் என்ற சங்க காலக் கவிஞர் எழுதிய அகநானூற்றுக் கவிதை ஒன்றில் (15: 5- 7)துளு நாடு என்ற சொல்லாட்சி இடம் பெற்றுள்ளதுடன் அங்கு கோசர்கள் என்போர் வாழ்வதாகவும் துளு நாட்டு மக்கள் வறியோரைப் பேணும் பண்புடையோர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. துளு நாட்டின் தொன்மைக்கு இது சான்றாகும்

**நூல்**


பண்ட்களின் தாய்மொழியான துளு எழுத்து வடிவம் பெறாத மொழி என்பதன் அடிப்படையில் இவர்கள் பண்பாட்டு நிலையில் பின்தங்கியவர்கள் என்று கருதினால் அது முற்றிலும் தவறு என்பதை வெளிப்படுத்தும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது. இம்மக்களின் தொன்மையான வரலாற்றில் தொடங்கி அவர்களது இன்றைய வாழ்க்கை வரையிலான பல்வேறு செய்திகளைக் கூறிச் செல்கிறது. பண்ட்கள் என்ற மக்கள் பிரிவினரின் இனவரலாற்றைக் கூறும் நூல் என்று இந்நூலின் எல்லையை இந் நூலாசிரியர் சுருக்கிக் கொள்ளவில்லை. அயற் பண்பாட்டுக் காரர்களுக்கான காட்சிப் பொருளாக இவர்களை முன் நிறுத்தவுமில்லை. தொன்மையான ஒரு மக்கள் பிரிவினரின் வரலாற்று வரைவு எவ்வாறு எழுதப்பட வேண்டும் என்பது குறித்த ஒரு தெளிவான வரலாற்றுப் பார்வை ஆசிரியரிடம் காணப்படுகிறது. பண்ட்களின் தொன்மைக்குள் முகம் புதைக்காமலும் அதைப் புறக்கணிக்காமலும், நவீனத்துவம் இந்தியதேசிய இயக்கம் என்பனவற்றின் தாக்கத்தை இச்சமூகம் எவ்வாறு, உள்வாங்கிக் கொண்டுள்ளது என்பதை அறிமுகம் செய்வதுடன் ஆராயவும் செய்கிறது.




**நூலாசிரியர்**

இந் நூலாசிரியர் பி.சுரேந்திர ராவ் (1948-2019) மங்களூர்ப் பல்கலைக் கழகத்தின் வரலாற்றுத் துறையில்(1982-2008):இணைப் பேராசிரியராகவும் துறைத் தலைவராகவும் பேராசிரியராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றவர். அதற்கு முன் புத்தூரில் உள்ள விவேகானந்தா கல்லூரியின் வரலாற்றுத் துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளார். வரலாற்று நூல்கள் எழுதியதுடன் துளு மொழியின் வாய்மொழி வழக்காறுகளையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். 2015 ஆவது ஆண்டில் ராஷ்டிர கவிகோவிந் பை சம்சோதன மையம் வழங்கும் ராஷ்டிர கவி கோவிந்த பாய் விருது இவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இச்சிறிய அறிமுகத்துடன் இனி நூலுக்குள் நுழைவோம்.



### பண்ட்களின் தொன்மை:

பண்ட்களின் தொன்மையை சிந்துச் சமவெளியின் ஹரப்பா நாகரிகத்துடன் தொடர்புபடுத்திப் பார்க்கும் போக்கை ஷீரூர் சிவராம ஷெட்டி என்பவர் தொடங்கி வைத்துள்ளார். இது 1995இல் இவர் எழுதிய நூலிலும் 2002இல் எழுதிய கட்டுரையின் வாயிலாகவும் வெளிப்பட்டது. ஹரப்பா அகழ் ஆய்வில் கிடைத்த முத்திரைகளில் ஒன்று எருது உருவம் பொறித்த முத்திரையாகும். துளுப் பகுதியில் உள்ள காவாலி குகையில் பொறிக்கப் பட்டுள்ள கூனுடைஎருதின் ஓவியத்துடன் ஹரப்பாவில் கண்டெடுக்கப்பட்ட முத்திரையில் இடம் பெற்றுள்ள எருதின் உருவத்தையும் இணைத்து நோக்கி பண்ட்களின் தொன்மை சிந்துச் சமவெளி நாகரிகத்துடன் இணைத்துப் பார்க்கப்படுகிறது.

ஆனால் நூலாசிரியருக்கு இதில் உடன்பாடில்லை. ஹரப்பா நாகரிகத்திற்கு முன்னர் பண்ட்கள் எங்கிருந்தனர் என்ற கேள்வியை எழுப்புகிறார். இதையடுத்து பூதலப்பாண்டியன் என்ற பாண்டிய மன்னனை மையமாகக் கொண்டு பண்ட்களின் தொன்மையைச் சற்று விரிவாக ஆராய்ந்துள்ளார். மருமக்கள் தாயமுறையை இவன் மரபைச்சேர்ந்த தேவபண்டியன் அறிமுகம் செய்ததாக கணபதி ராவ் என்பவர் பதிப்பித்த பூதலப் பாண்டிய ராயன் சரித்திரம் குறிப்பிடுவதைச் சுட்டுகிறார். அத்துடன் இதன் நம்பகத்தன்மையை விமர்சனத்திற்கு உட்படுத்தியுள்ளார்.

அடுத்து அசோகரது கல்வெட்டுக்களில் இடம்பெற்றுள்ள சத்தியபுத்திரர்கள் சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் கோசர்கள்தான் என்ற கருத்தை ஆராய்கிறார். இக் கோசர்கள் என்போர் சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளனர். இவர்கள் தமிழ்நாட்டில் இருந்து துளு நாட்டிற்கு இடம் பெயர்ந்துள்ளனர் என்ற கருத்து உள்ளது. துளு நாட்டிறகு இடம் பெயர்ந்து வந்த கோசர்கள் அங்குள்ள காட்டுவாசிகளைப் பயன்படுத்தி காட்டைத் திருத்தி விளைநிலங்களாக மாற்றியுள்ளனர். இவ்வாறு காடை நாடாக்கியமையால் ‘நாடாவாஸ்’ என்று பெயர் பெற்றுள்ளனர்.

இவை தவிர அசோகரது கல்வெட்டுக்களில் இடம் பெற்றுள்ள சத்தியபத்திரர் என்ற சொல்லாட்சி சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள கோசர் என்போரைக் குறிக்கிறது என்ற கருத்தை ஆராய்கிறார். வரலாற்றறிஞர்களிடையே இது தொடர்பாக மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. அகநானூறில்(281) வடவர் என்ற பொருளில் வடுகர் குறிப்பிடப் பட்டுள்ளனர். ரமேஷ் என்ற வரலாற்றியலர் கோசர்களும் வடுகர்களும் துளு நாட்டவர் என்று கருதுகிறார். அத்துடன் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படும் மோரியர் கொங்கன் பகுதியில் உள்ள மௌரியர் என்றும் வடபுல மௌரியர் அல்லர் என்றும் குறிப்பிடுகிறார். இது ஆய்வுக்குரியது.

இவ்வாறு ஏராளமான வரலாற்றுச் செய்திகளை முன்வைத்து பண்ட்களின் வரலாற்றை ஆராய்ந்துள்ளார். இச் செய்திகளுக்குள் நுழைந்தால் பண்ட்களின் பண்பாடு குறித்த செய்திகளை அறிமுகம் செய்ய இயலாது போய்விடலாம். எனவே பண்ட்களின் பண்பாட்டு வாழ்க்கை குறித்து ஆசிரியர் குறிப்பிடும் செய்திகளைக் காண்போம். அதன் முதற்படியாக பண்ட் சமூகத்தின், நாட்டார் வழக்காறுகள் குறித்த சில அடிப்படைச் செய்திகளைக் காண்போம்.

### நாட்டார் வழக்காறுகள்:

பண்ட்களின் நாட்டார் வழக்காறுகளை அறிமுகம் செய்யும் முன்னர் நாட்டார் வழக்காறுகளைக் குறித்து அவர் பொதுவான சில செய்திகளைக் குறிப்பிட்டுள்ளார். அவற்றின் முக்கியத்துவம் கருதி அவர் கூறியுள்ள செய்திகளின் சாரம் இங்கு அறிமுகம் செய்யப்படுகிறது:

- வெற்றி பெற்றவர்களின் கதையை மட்டுமே கூறுவதால் வரலாறு மதிப்பிழந்து போகிறது.
- ஆட்சியாளர்கள் தம் வரலாற்றைத் தாமே எழுதிக் கொள்கிறவர்கள். தம்மைக் குறித்த மதிப்பீடுகளாக எவை அமையவேண்டும் என்பதையும் தன் சார்பில் யார் பேசவேண்டும் என்பதையும் முடிவு செய்கிறார்கள்
- வெற்றியாளர்கள் அல்லது அதிகாரத்தில் உள்ளவர்களின் ஊதியப்பட்டியலில் வரலாற்றாசிரியர்கள் இருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு பழமையான ஒன்று.

- ஆளுவோர் தமக்கென வரலாறு எழுதுவோரைக் கொண்டிருந்தனர். இன்றும் அது தொடர்கிறது.
- இன்று அரசியலில் ஏற்பட்ட மாற்றங்களும் அதிகாரப் பரவல்களும் மன்னர்களைப் பின்னடைவிற்கு ஆளாக்கி நூல்களிலும் அல்லது கல்லறைகளிலும் மட்டிலுமே வாழ்வோராக்கி விட்டன.

வரலாற்றை மறு கட்டமைப்புச் செய்யும்போது நாட்டார் வழக்காறு பெரும்பாலும் பாரம்பரிய அதிகார அமைப்பிற்கு வெளியே நின்று செயல்படுகிறது. வினா எழுப்புகிறது. அத்துடன் தனக்கெனத் தனித்துவமான மாற்று அதிகாரமையங்களை உருவாக்கிக் கொள்கிறது. அதிகாரப் பூர்வமான பனுவல்களில் ஆளுவோர் குறித்துப் பதிவாகியுள்ள செய்திகளுக்கு மாற்றுவடிவங்களை வழங்குகிறது என்று குறிப்பிடும் நூலாசிரியர் பண்ட்கள் குறித்த வரலாற்று வரைவுக்கு நாட்டார் வழக்காறுகள் துணைபுரியும் என்கிறார். தம் கருத்துக்குச் சான்றாக 'பதானா' 'சந்தி' என்ற பெயர்களில் வழங்கும் இரு வகையான நாட்டார் கதைப்பாடல்களைக் குறிப்பிடுகிறார்.

இவை மைய நீரோட்டத்தில் இடம் பெறாத சமூக அரசியல் செய்திகளை வெளிப்படுத்தும் தன்மை கொண்டவை. நாட்டார் காவியங்களான பதானாக்கள் பல்வேறு சமூகப் பிரிவுகளைச் சேர்ந்த மாவீரர்கள், எதிர்நிலைத் தலைவர்கள் ஆகியோரின் வீரச்செயல்கள், நயவஞ்சகச் செயல்கள், அர்ப்பணிப்பு, உயிர்த்தியாகம். என்பனவற்றை வெளிப்படுத்துகின்றன.அத்துடன் ஒடுக்கப்பட்ட சமூகப் பிரிவினருக்கு ஓர் இடத்தை வழங்கி அவர்கள் எதிர்கொண்ட அநீதியை வெளிப்படுத்துவதுடன் அவற்றை அவர்கள் வெற்றிகொள்ளவும் செய்கின்றன.

பண்ட்களின் கதைப்பாடல்கள் குறித்த செய்திகளை அடுத்து அவர்களது நாட்டார் வழக்காறுகளுள் முக்கிய கூறாக இடம் பெற்றுள்ள இரு விளையாட்டுப் போட்டிகளை அறிமுகம் செய்துள்ளார்.இவற்றுள் ஒன்று கம்பலா என்னும் எருமைப் பந்தய விளையாட்டு. மற்றொன்று கோரிகட்டா என்னும் சேவற்சண்டை.

**கம்பலா:**

வரலாற்று அடிப்படையில் நோக்கினால் கம்பலா நிகழும் வயல் குறித்து இடைக்காலக் கல்வெட்டுகளில் பதிவுகள் உள்ளன. 1691 ஆவது ஆண்டுக் காலத்திய செப்பேடு ஒன்றில் கம்பலா நிகழும் வயல் குறித்த பதிவு இடம் பெற்றுள்ளது. அறுவடை முடிந்த காலத்திற்கும் அடுத்த வேளாண்மை தொடங்கும் காலத்திற்கும் இடையில்(திசம்பர்/சனவரி) இது நிகழும்.

இது பெருநிலக்கிழார்களால் பாரம்பரியமாக சேறு கலக்கிய வயலில் நிகழ்த்தப்படும்.இதன் புரவலர்கள் அவர்கள்தான். அவர்களது மதிப்பு மற்றும் அதிகாரத்தின் குறியீடாக இது அமையும்.

பண்ட்களின் பொழுது போக்குத் தன்மையுடன் கூடிய போட்டி விளையாட்டு என்று கம்பலா காட்சி அளித்தாலும் அதற்கும் மேலான சில செய்திகளை அது தன்னுள் அடக்கி உள்ளது என்பது நூலாசிரியரின் கருத்தாக உள்ளது. அவரது ஆய்வு சார்ந்த கருத்தை அறிந்து கொள்ளுமுன்பு இது நிகழும் முறை குறித்து அறிந்து கொள்வது அவசியமாகிறது.

கம்பலா நிகழும் களமாக நன்செய் நிலம் அமையும். பெரும்பாலும் மூன்றில் இருந்து பத்து ஏக்கர் பரப்பளவு நிலத்தில் இது நிகழும்.

பொதுவாக நான்கு வகையான எருதுப் பந்தயங்கள் நடைமுறையில் இருந்ததாக ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். முதலாவது முறையில் இரு எருமைகள் நுகத்தடியில் பூட்டப் பட்டிருக்கும். நுகத்தடியின் நடுவில் கட்டப் பட்டிருக்கும் கயிற்றை ஒருவன் பிடித்தவாறு அவற்றை விரட்டிச் செல்வான். இரண்டாவது முறையில் இரண்டு எருமைகள் கலப்பையில் பூட்டப் பட்டிருக்கும் நிலையில் ஒருவன் அவற்றை விரட்டி ஓட்டுதல் நிகழும். மூன்றாவது முறையில் நுகத்தடியில் கலப்பைக்குப் பதிலாக வயலைச் சமப்படுத்து உதவும் பலகை(பரம்புப் பலகை) பொருத்தப் பட்டிருக்கும். இப் பலகையில் நின்றவாறு ஒருவன் எருமைகளை விரட்டிச் செல்வான். நான்காவது முறையானது மூன்றாவது முறையை ஓரளவுக்கு ஒத்ததாகும். ஆனால் பந்தயக் களமான நஞ்சை நிலத்தில் சேறை நன்றாகக் கலக்கி (தொளி கலக்கி)வைத்திருப்பார்கள். இதனால் மாடுகள் ஓடும்போது கலங்கிய சேறு வாரி இறைக்கப் படும். அது எவ்வளவு உயரத்திற்கு வீசி எறியப் படுகிறது என்பது வெற்றியை முடிவு செய்யும் காரணிகளில் ஒன்றாகும். அடிப்படையில் இது அதிக அளவில் பொருள் தேவைப்படும் விளையாட்டு. கம்பலா போட்டியில் கலந்து கொள்ளும் ஆற்றல் பெற்ற எருமைகளை அதிக விலை கொடுத்து வாங்குவதும் அவற்றை நல்ல முறையில் பராமரித்தலும் வளம் படைத்த நிலக்கிழார்களாலேதான் முடியும்.

போட்டியில் வெற்றி பெற்ற எருமைகளுக்கு நன்றாகத் தீனி கொடுத்து மேளதாளத்துடன் ஊர்வலமாக அழைத்து வருவர். அவற்றின் உரிமையாளருக்கு பொற்பதக்கம் வழங்கப்படும். தற்போது பணமும் வழங்கப்படுகிறது. ஒரு வகையில் திருவிழா போன்றே கம்பலா நிகழுகிறது. தற்போது கம்பலா போட்டிக்கென்று அரங்கங்கள் உருவாக்கப்படுவதும், பயணத்தொகை கட்டுதலும் நிகழ்கின்றன. சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் விளையாட்டாகவும் மாறிவிட்டது. கம்பலாவைத் தடை செய்ய வேண்டும் என்ற குரலும் எழுந்துள்ளது.

தொடக்கத்தில் நாட்டார் சமய நெறியில் இணைந்திருந்ததுடன் நிலவுடைமையாளர்களின் அதிகாரத்தை வெளிப்படுத்துவதாகவும் செயல்பட்ட கம்பலா காலப்போக்கில் இத்தகைய மாறுதல்களை ஏற்றுள்ளது.

எருமைப் பந்தயத்திற்காக நன்றாகப் பேணி வளர்க்கப்பட்ட எருமைகள் பழைய சமூக அமைப்பில் அதை வளர்ப்பவருக்கு உயரிய சமூக மதிப்பை வழங்கியுள்ளன. இன்று அச் சமூக அமைப்பு மறைந்துவிட்ட போதிலும் தேவையற்ற ஒன்றாகக் கம்பலாவை ஆக்கிவிடவில்லை.

இவ்வாறு கம்பலா என்ற எருமைப் பந்தயம் குறித்த செய்திகளைப் பதிவு செய்ததுடன் ஆசிரியர் தம் பணியை நிறுத்திவிடவில்லை . அவ்வாறு நிறுத்தியிருந்தால் போட்டித் தன்மையுடன் கூடிய விலங்கு விளையாட்டு ஒன்றைக் குறித்த விவரணத் தன்மையடன் கூடிய பதிவாக மட்டுமே இது சுருங்கிப் போயிருக்கும். மாறாக இவ் விளையாட்டு நிகழ்வுடன் இணைந்துள்ள சில நிகழ்வுகளை வெளிப்படுத்துவதன் வாயிலாக, துளு நாட்டில் நிலவிய, நிலமானியச் சமூக அரசியல் சூழல் குறித்த கடந்த கால நினைவுகளைப் பாதுகாத்து வருகிறது என்ற முடிவுக்கு வந்துள்ளார். இது தொடர்பாக அவர் முன்வைத்துள்ள கருத்துக்களின் சுருக்கம் வருமாறு.

- நிலக்கிழார்களின் மேற்பார்வையில் இப் போட்டி நிகழ்கிறது.
- தாம்பூலத்தை அவருக்கு வழங்கி மரியாதை செலுத்தப் படுகிறது.
- புனிதமான இடமாக இப் போட்டி நிகழும் இடம் கருதப்படுகிறது.
- தம் எருமைகளுடன் போட்டியில் கலந்து கொள்வோரின் பெயர்கள் பெரு நிலக்கிழாராலேயே அறிவிக்கப் படுகிறது,
- தற்போது நிலமானிய அடையாளங்களில் இருந்து விடுபட்டு ஒரு பண்பாட்டு அடையாளமாக கம்பலா உள்ளது.





**கோரிகட்டா:**

துளுநாட்டவரும் பண்டீகளும் பேரார்வம் காட்டும் ஒரு பொழுது போக்கு விளையாட்டு சேவற்சண்டை. இது துளு நாட்டின் பண்பாட்டில் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது.கோவில் திருவிழாக்களிலும், திருமணம், சீமந்தம் ஆகிய வாழ்க்கைவட்டச் சடங்கு நிகழ்வுகளிலும் இது இடம் பெறுகிறது. கோரிக்கட்டா என்று துளுமொழியில் கோழிச் சண்டை அழைக்கப்படுகிறது. (கோரி-கோழி).

உள்ளூர்க் கடவுள்களை மையமாகக் கொண்டு நிகழும் ஊர்த் திருவிழாக்களின் போது கோழிச்சண்டை முக்கிய இடம் பெறுகிறது.கோழிச் சண்டையில் வெற்றி பெரும் கோழி 'பந்தே கோரி' என்றும் தோற்ற கோழி 'ஒட்டி கோரி' என்றும் அழைக்கப் படுகிறது. கோழிச் சண்டையின் போது இறந்து போன கோழிகளின் இறைச்சி சமைக்கப்பட்டு பிரசாதமாக வழங்கப்படும்.

நாட்டார் அறிவு நுட்பத்துடன் தொடர்புடைய ஒன்றாகக் கோழிச் சண்டை விளங்குகிறது. சண்டைக் கோழியைத் தேர்வு செய்தல், ஊட்டச்சத்து கொண்ட உணவை அதற்கு வழங்கல், அதன் காலில் கத்தியைக் கட்டும் முறை, நம்பிக்கைகள் என்பன இவற்றுள் குறிப்பிடத் தக்கவை ஆகும். இச் சண்டையின் நுட்பங்களை அறிந்தவர்கள் உரிய முறையில் அங்கீகரிக்கப் படுவதுடன் அவர்களுக்குப் பணமும் வழங்கப்படும். பந்தயக் குதிரை வளர்ப்பின் கிராமிய வடிவம் என்று கோழிச்சண்டையைக் குறிப்பிடலாம். இச் சண்டையானது கிராம மக்களை மட்டுமின்றி நகர வாசிகளையும் ஈர்ப்பதாக விளங்குகிறது.

தனித்துவமான போக்குகளை இது கொண்டுள்ளது. பணம் மரியாதை, பொழுது போக்கும் விளையாட்டு, என்பன இதில் இடம் பெற்றுள்ளன. ஆனால் ஆங்கில ஆட்சியில் இது குறித்த எதிர்க் கருத்துக்களும் வெளிப்பட்டன. துணை ஆட்சியர் ஒருவர், பண்ட் குடியானவர்கள் கோழிச் சண்டையிலும் கம்பலாவிலும் தம் பணத்தை வீணாக்குகிறார்கள் என்று 1909 ஆவது ஆண்டில் அறிவுரையாகக் கூறிய செய்தி சுதேசபிமானி என்ற கன்னட நாளிதழில் வெளியாகி உள்ளது. ஆனால் இத்தகைய விமர்சனங்கள் எவ்விதத் தாக்கத்தையும்

பண்ட்களிடம் ஏற்படுத்தவில்லை. மாறாகக் கோழிச் சண்டையின் மீதான ஈர்ப்பு அதிகரிக்கவே செய்தது. தற்போது ஒரு நல்ல சண்டைக் கோழியின் விலை ஒரு லட்சம் ரூபாய் வரை உள்ளது. கோழிச் சண்டையில் ஆர்வம் கொண்ட வளம் படைத்தோர் சண்டைக் கோழிப் படையையே பராமரிக்கிறார்கள். அவற்றை வளர்க்க அதிக முதலீடு தேவைப்படுகிறது. தொலைவிலுள்ள கேரளத்தின் கொச்சி நகரில் இருந்து சண்டைக் கோழிகளை வாங்கி வருகிறார்கள். இது அரேபியாவில் இருந்து குதிரகளை இறக்குமதி செய்ததை ஒத்ததாக உள்ளது. பண்ட்கள் சிலர் தாம் வளர்க்கும் சண்டைக் கோழிகளின் காதில் பொன்னால் ஆகிய காதணியையும் கால்களில் மின்னும் வெள்ளிக் கொலுசையும் அணிவிப்பதுண்டு.

கோழிச் சண்டையின் மீது கொண்டுள்ள ஆர்வம் பண்ட்கள் சிலரைத் திவாலாக்கி உள்ளது.தேசியம் சீர்திருத்தம் என்ற இரண்டின் மீதும் பற்றுக்கொண்டிருந்த கே.கே.ஷெட்டி என்பவர் இதைப் பொறுக்கமுடியாத நிலையில் புலம்பலும் கண்டிப்பும் கலந்த கவிதை ஒன்றை எழுதியுள்ளார்.

இந்நூலாசிரியர் தமது கருத்தாக கோழிச் சண்டையானது பெரும்பாலும் தனிப்பட்ட மதிப்புடனும் குடும்ப மதிப்புடனும் இணைந்துள்ளது இதுவே சில நேரங்களில் தனிப்பட்ட சண்டைகளுக்கும் குடும்பச் சண்டைகளுக்கும் ஏதுவாய் அமைவதும் உண்டு. சண்டைக்குப் பதிலியாக விளயாட்டு அமைவது கடந்த காலத்தில் மட்டுமின்றி இப்போதும் உள்ளது.கோழிச் சண்டை நிகழ்ச்சிக்குப் புரவலர்களும் உருவாகி உள்ளார்கள். உள்ளூர்த் தலைவர்கள் அரசியல்வாதிகள் ஆகியோரின் இடையீடும் உண்டு என்று கூறியுள்ளார்.

**பண்ட்களின் வழிபாடு:**

பாம்பு வழிபாட்டாளர்களாகவும் கணக்கற்ற தெய்வங்களை வழிபடுபவர்களாகவும் துளு மக்கள் இருந்துள்ளனர். பின்னர் ஆகம மரபு சார்ந்த தெய்வங்கள் இவர்களிடையே நுழைந்தன. பிராமணிய மேலாண்மை வளர்ச்சியுற்ற பின் சைவ வைணவ வழிபாட்டு முறையில் இருந்து இவர்களின் வழிபாட்டு முறையை வேறுபடுத்திக் காட்டும் வகையில் 'நாட்டார் *(Folk)* நம்பிக்கைகளும் வழிபாடும்' என்ற வகைமைக்குள் அடக்கினர்.

அய்ரோப்பியர்களில் சிலர், இந்தியாவின் சமயம், மொழி, பண்பாடு குறித்து அறிய ஆர்வம் கொண்டு இவற்றைக் கற்றறிந்ததுடன் புலமை மிக்கவர்களாகவும் விளங்கினர். இவர்களைக் 'கீழைத்தேயவாணர்' *(Orientalist)* என்பர். இவற்றை இவர்களுக்குக் கற்றுக்கொடுத்த பிராமணப் பண்டிதர்கள் நாட்டார் வழிபாட்டு முறைகள் மதிப்புக் குறைந்தவை, போற்றுதலுக்குரிய வேதங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டவையல்ல என்று கற்பித்தனர். 'தேவபாஷை' ஆன சமஸ்கிருதத்தைப் பயன்படுத்தாது செய்யும் வழிபாடுகள் இழிவானவை என்றும் கூறினர். கிறித்தவத்தைப் பரப்ப வந்த கிறித்தவ மறைப்பணியாளர்களும் நாட்டார் தெய்வ வழிபாடானது பேய் வழிபாடு என்ற கருத்தைக் கொண்டிருந்தனர்.

சிவன், விஷ்ணு என்ற தெய்வங்களின் பாதுகாவல் தெய்வங்களே நாட்டார் தெய்வங்கள் என்றழைத்ததன் வாயிலாகப் பிராமணிய சமயத்திற்குள் நாட்டார் தெய்வங்களை உள் இழுத்துக் கொண்டனர். நாட்டார் தெய்வ வழிபாட்டிற்குள் பிராமண பூசாரிகளின் நுழைவும் நாட்டார் சமயத்தின் தனித்துவத்தைச் சிதைத்தது. அரசியல் இந்துத்துவமானது பெருமரபு என்று குறிப்பிடப்படும் மேட்டிமையோரின் மரபுக்குள் நாட்டார் சமய மரபை இழுத்துக் கொண்டது. இனக்குழு நம்பிக்கைகளும் வழிபாடுகளும் மேலாண்மைத் தன்மை கொண்ட பிராமணிய வழக்காறுகளாலும் வழிபாட்டு வகைமைகளாலும் உறிஞ்சப் பட்டுவிட்டன. இந்திய சமய அனுபவத்தில் காணப்படும் நெகிழ்ச்சியும் பன்முகத்தன்மையும் புதிய செமிட்டிக் சமயநெறியை உண்டாக்கும் முயற்சியில் அதிகார இந்துத்துவத்தால் *(Syndicated Hinduism)* அழிக்கப்பட்டுவிட்டன.

நூலாசிரியரின் இக் கூற்றுகள் நாட்டார் சமய நெறியின் மீது அவர் கொண்டுள்ள மதிப்பீட்டை வெளிப்படுத்துவனவாயும் சமய அரசியல் குறித்த அவரது புரிதலை உணர்த்துவதாயும் உள்ளன. இத்துடன் நின்றுவிடாமல் பண்ட்களின் நாட்டார் தெய்வங்கள் சிலவற்றைக் குறித்தும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பண்ட்களின் சமயம் குறித்த அவரது அறிமுகமானது அவர்களது வழிபாட்டு மரபு குறித்த வெறும் பதிவாக அன்றி அவர்களது சமயவாழ்வில் நிகழ்ந்த ஊடுறுவல்கள் குறித்தும் விமர்சன நோக்குடன் எடுத்துரைக்கிறது.


இவ்வாறு தொன்மையான பண்ட் சமூகத்தின் வரலாறும் பண்பாடும் பெரும்பாலும் வாய்மொழிச் சான்றுகளின் துணையுடன் எழுதப்பட்டுள்ளது. வரிவடிவம் பெறாத ஒரு மொழி பேசும் மக்களின் வரலாற்றையும் பண்பாட்டையும் விவரணைத் தன்மையுடன் மட்டுமின்றி ஆய்வு நோக்குடனும் வெளிப்படுத்தி உள்ளார். மேற் கூறிய செய்திகள் மட்டுமின்றி நவீனத்துவம் தொடர்பான இம் மக்களின் எதிர்வினை, இந்தியாவின் தேசிய இயக்கத்தில் இம் மக்களின் பங்களிப்பு, துளு மக்களின் தாய் மொழியான துளு மொழி வரிவடிவம் இழந்த வரலாறு எனபன இந்நூலின் இறுதிப்பகுதியில் இடம் பெற்றுள்ளன. வேளாண் குடிகளான பண்ட்கள் வாணிபம், வங்கித் தொழில், தொழிற்சங்க இயக்கம் என்பனவற்றில் தடம் பதித்துள்ளதையும் இந்நூல் நாம் அறியச் செய்துள்ளது.


●




18.11.2021 அன்று மதுரை சிம்மக்கல் மாவட்ட மைய நூலகத்தில் 36வது தேசியப் புத்தகக் கண்காட்சியை மதுரை மாவட்ட நூலக அலுவலர் திருமதி சு.யசோதா அவர்கள் திறந்து வைத்தார். இதில் பேராசிரியர் பா.ஆனந்தகுமார், பேராசிரியர் உ.கருப்பத்தேவன், திரு. S.செந்தூரன், திரு ஞா.சந்திரன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் மதுரை மண்டல மேலாளர் அ.கிருஷ்ணமூர்த்தி மற்றும் மேலாளர் கு.பாலசுப்ரமணி ஆகியோர் கலந்துகொண்டனர்.

## உங்கள் நூலகம் சந்தாதாரர்களுக்கு ஒரு வேண்டுகோள்!







**உங்கள் நூலகம் சந்தாவினைப் புதுப்பிக்காதவர்கள் தொடர்ந்து உங்கள் நூலகம் இதழினைப் பெற புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்**

**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**

### நவம்பர் மாதத்துடன் முடிவடையும் சந்தாதாரர்களின் ரசீது எண்கள்


| | | | | |
|---|---|---|---|---|
| 308 | 6115 | 4455 | 876 | 7907 |
| 875 | 6116 | 4586 | 6172 | 960 |
| 2877 | 6119 | 6167 | 7582 | 4385 |
| 2878 | 6122 | 7906 | 4468 | 7768 |
| 2879 | 7586 | 7588 | 6170 | 7760 |
| 2880 | 7766 | 7589 | 4469 | 2884 |
| 2881 | 2883 | 6164 | 6176 | |
| 4255 | 6168 | 6165 | 4247 | |
| 4256 | 6166 | 910 | 6173 | |

தனி இதழ் ₹ 30.00,
ஆண்டு சந்தா ₹ 360.00
மாணவர்களுக்கு ₹ 300.00.
ஆயுள் சந்தா ₹ 3000.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 2750.00
*சந்தாத் தொகையை*
New Century Reader's Sangam
Central Bank of India
Ambattur Branch, Chennai - 600 050
A/c.No. 1035249018
IFSC Code : CBIN0282161
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*


# நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் புதிய வெளியீடுகள்




₹ 490/-




₹ 140/-




₹ 1500/-




₹ 390/-




₹ 200/-





₹ 145/-





₹ 195/-




₹ 65/-




₹ 85/-




₹ 125/-





₹ 140/-




₹ 240/-


# நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் புதிய வெளியீடுகள்





₹ 750/-





₹ 260/-





₹ 200/-





₹ 175/-





₹ 145/-




₹ 135/-





₹ 135/-





₹ 140/-





₹ 295/-




₹ 225/-




₹ 155/-




₹ 375/-



கட்டுரை

# நீட் தேர்வா?

## நாம் பயப்படத் தேவையில்லை

டாக்டர். சு.நரேந்திரன்

தமிழகத்தில் தமிழ்மொழி வளர்ச்சிக்கெனத் தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டும் என்ற முதல் குரல் 1920ஆம் ஆண்டு தொடக்கத்தில் எழுந்தது. அவ்வப்போது தமிழறிஞர்களால் வைக்கப்பட்ட வேண்டுகோள் 1981இல் செயல்வடிவம் பெற்றது. தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தராக வ.அய்.சுப்பிரமணியம் பொறுப்பேற்ற பின் தமிழ்வளர்ச்சி இயக்ககம் என்ற பிரிவை உருவாக்கினார். இவ்இயக்ககம் பொறியியல், மருத்துவம் பாடநூல்களைத் தயாரித்து வெளியிடுவதை முதன்மை நோக்கமாகச் செயல்பட்டு, பயிற்சி மொழித் திட்டத்தைக் கல்லூரி நிலையிலிருந்து உயர் தொழில்நுட்பக் கல்வியை (Professional Studies) நோக்கி நகர்த்தியது.

நாளிதழ்களில் வெளியிடப்பட்ட விளம்பரத்தைத் தொடர்ந்து நூலாசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டு பொறியியல் 14 நூல்களும், மருத்துவம் 14 நூல்களும் எழுதி வாங்கப்பட்டன.

திராவிட முன்னேற்றக் கழக அரசு 1997ஆம் ஆண்டு பதவியேற்ற பிறகு தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுக்காகத் தனி அமைச்சகத்தைத் தோற்றுவித்தது. இது 1997-1998ஆம் ஆண்டு முதல் தமிழ்வழிப் பொறியியலைக் கற்பிக்க அரசாணை வெளியிட்டது.

தமிழில் பொறியியல் கற்பிப்பதற்கான முயற்சிகளின் முதல் பணியாகப் பொறியியல் ஆசிரியர்களுக்குப் பயிற்சி வகுப்புகள் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்டன. இப்பயிற்சி வகுப்புகளுக்கான தொடக்க விழாவில் தொடக்கவுரை நிகழ்த்திய சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ப.க.பொன்னுசாமி, "இத்திட்டம் 150 ஆண்டுகால போராட்டத்தின் வெற்றி. தமிழில் பொறியியல் பட்டப்படிப்பு என்பது சரியான முயற்சி. இதில் வெற்றி பெற ஆசிரியர்கள் கடினமாக உழைக்க வேண்டும். இம்முயற்சி வெற்றி பெறாவிட்டால் தமிழைப் பலிகடா ஆக்கியவர்களாவோம்'' என்று கூறினார். (தினமணி. 23. 06. 1997)

தமிழ்வழிப் பொறியியல் கல்வி வகுப்புகளுக்கான அரசு வெளியிட்டிருந்த விளம்பரத்தில் மொத்த இடங்கள் 350 என அறிவிக்கப்பட்டது. ஆனால் சுமார் 700க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் வந்தன. விண்ணப்பங்களின் அடிப்படையில் மாணவர் பட்டியல் தயாராகிக் கொண்டிருக்கும்போது அனைத்திந்தியத் தொழில் நுட்பக் கல்விக்குழு (AICTE) ஒப்புதல் தரவில்லை என அரசு அறிவித்தது.

இதனைத் தொடர்ந்து மறுமுறை கலைஞர் கருணாநிதி முதல்வரான பிறகு தமிழ்நாட்டில்

பொறியியல் படிப்புகள் தமிழில் தொடங்கப்பட்டன. அண்ணா பல்கலைக்கழகக் கல்லூரிகளில் (சென்னை, அரியலூர், பண்ருட்டி, இராமநாதபுரம், திருக்குவளை, திண்டுக்கல், பட்டுக்கோட்டை, நாகர்கோவில், திண்டிவனம், திருச்சி, தூத்துக்குடி) மட்டும் சிவில், மெக்கானிக் ஆகிய பிரிவுகளில் 2008இல் தமிழ்வழிப் பொறியியல் படிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டு அதில் 900 மாணவர்களை அனுமதிக்க ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால் அடுத்த ஆண்டில் தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. எனினும் கல்லூரிகளில் தமிழ்வழிப் பொறியியல் 2010இல் தொடங்கப்பட்டது. ஆனால் இக்காலகட்டத்தில் பாடப்புத்தகங்கள் தயாராகவில்லை. தயாரித்த நூல்களும் கையேடுகளைப் போல் இருந்தன. அவைகளை நகல் எடுத்து மற்றவர்களும் படிக்க நேர்ந்தது.

தற்பொழுது எந்த இந்திய தொழில்நுட்பக் குழு ஒருமுறை தமிழகத்திற்கு பொறியியலைத் தொடங்க அனுமதி மறுத்ததோ அதே கல்விக்குழு பொறியியல் கல்லூரிகளில் தமிழ் உள்ளிட்ட பிராந்திய மொழிகளில் பாடங்களைத் தொடங்க கல்லூரிகளுக்கு அனுமதி அளித்துள்ளது. இதையொட்டி இக்கல்வியாண்டு முதல் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், குஜராத்தி, பெங்காலி, அசாமி, பஞ்சாபி, ஒரியா, இந்தி ஆகிய 11 பிராந்திய மொழிகளில் பி.டெக் பயிற்றுவிக்க ஒப்புதல் வழங்கியுள்ளதை IACTணியின் தலைவர் அனில்சகஸ்புரதே அறிவித்துள்ளார்.

தற்பொழுது தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு முதல்வர் மு.க.ஸ்டாலின் அரசு (2021) தமிழ் வழிக் கல்லூரி மாணவர்களை ஊக்கப்படுத்த வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் கோவைக் கல்லூரியில் ஒரு வகுப்பில் தமிழ்வழியில் பாடம் நடத்தப்படும் என்று அறிவித்துள்ளது. இதனைத் தொடர்ந்து பொறியியல் பட்டயப் படிப்பில் (டிப்ளமோ) முதல்கட்டமாக அடுத்த ஆண்டு முதல் சிவில், மெக்கானிக்கல் இன்ஜினியரிங் ஆகிய பொறியியல் பட்டயப் படிப்புகள் தமிழ்வழியில் தொடங்கப்படும் என்பதும், படிப்படியாக இதர பட்டயப் படிப்புகளும் தமிழ்வழியில் தொடங்கப்படும் என்ற அரசின் அறிவிப்பும் நம் நாதுகளில் தேனாகப் பாய்கிறது.

அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக்குழு பொறியியல் படிப்புகளை தமிழ் உட்பட வட்டார மொழிகளில் நடத்த ஒப்புதல் அளித்ததோடு இதற்கான பாடநூல்களையும் தயாரித்து வழங்கவிருப்பதாகவும் அறிவித்த நிலையில் மருத்துவக் கல்வி தொடங்குவதில் எந்த சிக்கலும் தமிழ்நாட்டிற்கு ஏற்படாது என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. எனினும் இது முடியுமா? என்ற கேள்விக்கு இலங்கையில் 190 ஆண்டுகளுக்கு முன் ஒரு தனிமனிதன் டாக்டர் ஃபிஷ்கிறீன் மேலை மருத்துவத்தைத் தமிழில் கற்பித்த வரலாறு உண்டு.

இதற்கு முன்னேற்பாடாக 1983ஆம் ஆண்டு ஆணைப்படி தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் 9 மருத்துவ நூல்கள் வெளிவந்துள்ளன. மருத்துவ அகராதிகளும் மிகுதியாகவே உள்ளன. சான்றாக மணவை முஸ்தபா மருத்துவக் களஞ்சிய பேரகராதி, அ.கி.மூர்த்தி அறிவியல் அகராதி, டாக்டர் சம்பத் குமாரின் மருத்துவ அகராதி, டாக்டர் சாமி சண்முகத்தின் மருத்துவ, கால்நடை சட்ட சொற்கள் அகராதி, தமிழ் இணைய இயக்ககத்தின் மருத்துவ அகராதி ஆகியவைகளைக் கூறலாம்.

தாய்மொழியில் மருத்துவக்கல்வி பயிற்றுவிக்கப்படும் என்று தமிழக பா.ஜ.க. தேர்தல் வாக்குறுதி தந்திருக்கிறது. தேசிய கல்விக்கொள்கை குறித்த மாநாடு ஒன்றில் உரையாற்றிய பிரதமர் மோடி "மொழி என்பது வெறும் கருவிதான். அதுவே கல்வியாகிவிடாது. மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட தொழிற்படிப்புகளைத் தாய்மொழியில் கொண்டுவருவது தான் எங்கள் இலக்கு" என்று சொன்னதையும் இங்கு நினைவு கூர வேண்டியதாக உள்ளது. இப்படிப்பட்ட எண்ணம் ஒன்றிய அரசை ஆளும் பா.ஜ.க.விற்கு இருக்கும் நிலையில் 12ஆம் வகுப்பு மதிப்பெண் அடிப்படையில் மருத்துவக்கல்வி, கற்க தகுதிபடைத்தவர் என்பது போய் நாட்டில் உள்ள அனைவரும் நீட் தேர்வு எழுதியே அதனடிப்படையில் மருத்துவக்கல்வி பயில முடியும் என்ற நிலை தற்போது நடைமுறைக்கு வந்துவிட்டது.

இதன் விளைவாகத் தனியார் பயிற்சி மையங்கள் ஊக்குவிக்கப்பட்டுள்ளன. பழங்குடி, தமிழ்வழி கிராமப்புற மாணவர்கள் வாய்ப்புகளை இழந்தார்கள். இதன் காரணமாக மாணவி அனிதா போன்ற 19 மாணவர்கள் உயிரை மாய்த்துக் கொண்டனர். இதற்கான காரணம் என்ன? என்பதைக் கண்டறிய தற்பொழுது பொறுப்பேற்றிருக்கும் தமிழ்நாடு அரசு ஓய்வு பெற்ற நீதிபதி ஏ.கே.ராஜன் தலைமையில் ஒரு குழுவை அமைத்து ஆராய பரிந்துரைத்தது. அந்த அறிக்கையில் உள்ள கணக்கீடுகள் கிராமப்புற மற்றும் ஏழ்மை நிலையில் உள்ள தமிழ்வழி மாணவர்களை எவ்வாறு பாதித்துள்ளது? என்பதைப் புள்ளி விபரத்துடன் விவரித்துள்ளது. அதன் 165 பக்க அறிக்கையின் சுருக்கம் இதுதான்.

நீட் தேர்விற்கு முன்பாக 2016-2017 கல்வியாண்டில் எம்.பி.பி.எஸ்., சேர்க்கையில் 537ஆக இருந்த



தமிழ்வழிப் படித்த மாணவர்களின் எண்ணிக்கை நீட் தேர்வு வந்த பிறகு 2017-2018 கல்வியாண்டில் 56ஆகக் குறைந்துள்ளது. 2020-2021 கல்வியாண்டில் (92.5%) 82 பேரும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்பட்ட (7.5%) இடஒதுக்கிட்டின்படி 217 பேரும் என மொத்தம் 209 மாணவர்களே தமிழ்வழிப் படித்தவர்கள். நீட்டுக்கு முன்பாக 500க்கும் மேற்பட்ட தமிழ்வழி மாணவர்கள் படித்து வந்த நிலையில் இடஒதுக்கீடு வழங்கியும் பாதியை மட்டுமே நெருங்க முடிந்து இருக்கிறது.

மாநில பாடத்திட்டம் மற்றும் சி.பி.எஸ்.இ. பாடத்திட்டப் பிரிவில் பார்த்தால், 2016-2017ஆம் ஆண்டில் 3544 மாணவர்கள் என மாநிலப் பாடத்திட்டத்தின் கீழ் படித்தவர்களின் எண்ணிக்கை நீட் தேர்விற்குப் பிறகு 2017-2018இல் 2303, 2109-2020இல் 2762 என குறைந்து இருக்கிறது. ஆனால் சி.பி.எஸ்.இ-அய் எடுத்துக் கொண்டால், நீட்டுக்கு முன்பாக இரட்டை இலக்கத்தை தாண்டாமல் இருந்தது. நீட் தேர்விற்குப் பிறகு ஆயிரத்திற்கும் மேல் சென்றுள்ளதைப் பார்க்கலாம்.

நீட் தேர்விற்கு முன்பாக 2016-2017இல் அரசு மருத்துவக் கல்லூரிகளில் மாநில பாடத்திட்டத்தில் பயின்றவர்கள் 65.66%ஆக இருந்த நிலையில் நீட் தேர்விற்குப் பிறகு 2020-21இல் 43.13%ஆகக் குறைந்துள்ளது. அதே நேரத்தில் 0.309ஆக இருந்த சி.பி.எஸ்.இ. மாணவர்களின் எண்ணிக்கை 26.83%ஆக உயர்ந்து இருக்கிறது.

நீட் தேர்வுக்குப் பிறகு தமிழ்வழியில் படித்தவர்கள் மருத்துவப் படிப்பில் சேருவது குறைந்து உள்ளது. 2016-2017இல் அரசு மருத்துவக் கல்லூரிகளில் 12.14%ஆக இருந்த தமிழ் வழியில் பயின்றவர்களின் சதவீதம் 2020-2021இல் வெறும் 17%ஆக இருக்கிறது. அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகளின் மொத்த சதவீதத்தில், நீட்டிற்கு முன்பாக ஆங்கில வழி பயின்றவர்கள் 84.12% மற்றும் தமிழ் வழி பயின்றவர்கள் 14.88%ஆக இருந்த நிலையில் நீட்டுக்குப் பிறகு 2020-2021இல் ஆங்கில வழி பயின்றவர்கள் 98.01%ஆக அதிகரித்தும் மற்றும் தமிழ் வழி பயின்றவர்கள் 19.9%ஆகக் குறைந்தும் உள்ளது.

நீட்டிற்கு முன்பாக 2016-2017இல் அரசு மருத்துவக் கல்லூரிகளில் 65.17%ஆக இருந்த கிராமப்புற மாணவர்களின் சதவீதம் தேர்விற்குப் பிறகு 49.91%ஆக குறைந்துள்ளது. அதே நேரம் 34.83%ஆக இருந்த நகர்ப்புற மாணவர்களின் சதவீதம் 50.09%ஆக உயர்ந்துள்ளது.

தமிழ்நாட்டில் நீட் தேர்வு அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு முதல் தலைமுறை பட்டதாரிகளின் மருத்துவப் படிப்பு சேர்க்கை எண்ணிக்கை குறைந்துள்ளது. 2016-2017இல் அரசு மருத்துவக் கல்லூரிகளில் 18.26%ஆக இருந்தது, 2020-2021இல் 10.46%ஆக குறைந்துள்ளது.

பெற்றோரின் ஆண்டு வருமானம் 2.5 லட்சத்துக்கும் குறைவாக இருக்கும் மாணவர்கள் நீட் தேர்வுக்கு முன் 2016-2017இல் 47.42%இல் இருந்தது. இந்த சதவீதம் நீட் தேர்வுக்குப் பிறகு 30% அளவிற்கும் குறைந்து சென்றதைப் பார்க்கலாம்.

நீட் தேர்விற்கு முன்பாக, அதே ஆண்டில் பள்ளிப் படிப்பை முடித்த 87.53% மாணவர்கள் மருத்துவக் கல்லூரிகளில் நுழைந்தனர். மீண்டும் முயற்சித்தவர் 12.47%ஆக உள்ளனர். இது நீட் தேர்விற்குப் பிறகு மீண்டும் மீண்டும் முயற்சிப்பவர்கள் மட்டுமே மருத்துவப் படிப்பில் இடங்களைப் பெறமுடிகிறது என்பதைக் காட்டுகிறது.

நீட் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களில் மூன்றில் இரண்டு பகுதி மூன்றாவது நான்காவது தேர்வு எழுதியவர்கள். அவர்களும் எப்படித் தேர்வு எழுதியவர்கள் என்றால் இரண்டு இலட்சம் ரூபாயிலிருந்து பத்து லட்சம் ரூபாய் வரை செலவு செய்து கார்பரேட் கோச்சிங் சென்டரில் பயிற்சி பெற்றவர்கள். (விடுதலை. 25.09.2021)

இதனையொட்டி தமிழ்நாட்டரசு நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டுக்கு விலக்கு பெறவேண்டும் என்று தவியாய்த் தவிக்கிறது. ஒரு உண்மையை நாம் இப்பொழுது உணரவேண்டும். கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைகிற கதையாக உள்ளதை அறிய வேண்டும். ஒன்றிய அரசின் அறிக்கை, சுதேச மொழியிலும் தொழில்நுட்பக் கல்வியைக் கற்பிக்கலாம் என்று சொல்லும் நிலையில் நாம் ஏன் மருத்துவக் கல்வியைத் தமிழில் தொடங்கக் கூடாது? தமிழ்நாட்டில் மருத்துவக் கல்வியைத் தொடங்கும் நிலையில் நிச்சயமாக வெளிமாநிலத்தவர்கள் நீட் எழுதி தமிழ்வழியில் படிக்க முன்வர மாட்டார்கள். 100 விழுக்காடு இடங்களும் நமக்கே கிடைத்துவிடும். இக்காலகட்டத்தில் தமிழ் நாட்டிற்கு நீட் தேர்வுக்கு விலக்கு கிடைத்தாலும் அதையும் மனமுவந்து ஏற்றுக் கொள்வோம்.

தற்பொழுது தமிழக அரசு அறிவிப்பின்படி வெவ்வேறு பாடப் பிரிவுகளில் 100 பாடநூல்கள் 2 கோடி செலவில் தமிழில் மொழிபெயர்க்கப்படும் என்பதோடு நில்லாது இன்னும் சில கோடிகளை ஒதுக்கி மருத்துவ அறிஞர் குழுவைக் கூட்டி தக்க நூல்களை விரைவாக எழுதிவாங்கி அதைத் தமிழறிஞர், மொழியியல் அறிஞர், மருத்துவ நுண் ஆய்வாளர் துணையுடன் திருத்தம் செய்து தரமாக வண்ணப்படங்களுடன் வெளியிட வேண்டும். இத்துடன் இம்மருத்துவ நூல்களை இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பித்து மறுபதிப்பு செய்யவேண்டும். இதைக் கண்காணிக்க ஒரு மொழிபெயர்ப்புக் குழு கண்ணும் கருத்துமாய் செயல்பட வேண்டும். ஏனெனில் மருத்துவ அறிவியலை இலக்கியங்களைப் போல் நாம் எண்ண முடியாது. மேலும் நாளும் முன்னேற்றம் அடைவது அதன் சிறப்பியல்பு. இதைவிட முக்கியமானது தமிழ்வழியில் மருத்துவம் படித்துத் தேறிய மாணவனுக்கு அரசுப்பணியில் முதலிடம் தரவேண்டும்.

இத்துடன் தமிழ்வழி மருத்துவக்கல்வி சிறப்புடன் நடைபெற மொழித்திட்டக்குழு அமைக்கப்பட வேண்டும். இதன் உட்பிரிவாக அறிவியல் தொழில் நுட்பக்கலைச் சொல் தரப்படுத்துதல் குழுவும் அமைக்கப்பட வேண்டியது இன்றியமையாதது ஆகும்.

**எச்சரிக்கை தேவை**

இந்நிலையில் தமிழ்வழி மருத்துவக்கல்விக்குத் தடைகள் எப்பொழுதும் போல ஏற்பட நேரிடும். இதற்குச் சில அரசியல் சமூகக் காரணங்கள் உண்டு. இன்னும் பள்ளிக் கல்வியே முழுமையாகத் தமிழில் இல்லாதபோது மருத்துவக் கல்வியில் தமிழைக் கொண்டு வரமுடியுமா? என்னும் ஒரு கேள்வி எழக்கூடும். மருத்துவத் தேர்வை எழுதி வெற்றி பெறுபவர்களில் 90 விழுக்காடுக்கு மேல் ஆங்கிலவழி படித்தவர்களே என்பதை ஏ.கே.ராஜன் அறிக்கை உறுதி செய்கிறது. இரண்டு மூன்று தலைமுறையாக ஆங்கிலம் படித்து தங்களைத் தாங்களே மேட்டுக்குடிகளாகக் கருதிக் கொண்டிருக்கும் சிலர் தமிழ்வழி மருத்துவப் படிப்பை நிச்சயம் எதிர்ப்பார்கள். காரணம் தங்களது வளமான வாழ்வுக்குப் போட்டியாக மற்றவர்கள் அதுவும் சாதாரணமானவர்கள் வந்துவிடக்கூடாது என்பதால் நீதி மன்றம் கூட ஏறுவார்கள்.

இதற்கு முன் உதாரணங்கள் பல உண்டு. 1970களில் கலைஞர் கருணாநிதி கல்லூரிகளில் தமிழ்பயிற்சி மொழித் திட்டத்தை விரிவு படுத்தும் ஆணையை சிண்டிகேட் காங்கிரஸ்காரர்களும், டாக்டர் ஏ.லெஷ்மணசாமி முதலியார் போன்றவர்களும் எதிர்த்தனர். கலைஞரின் கொடும்பாவியை எரித்தனர். ஆங்கில ஆதரவு குறித்த மாநாட்டை சென்னையில் நடத்தினர். 1999இல் 1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை தமிழ் அல்லது தாய்மொழிக் கல்வி என்று கலைஞர் அரசு ஆணை பிறப்பித்தது. இதற்கு மெட்ரிகுலேஷன் பள்ளி நடத்துபவர்கள் எதிர்ப்பு தெரிவித்து நீதிமன்றத்தில் வாதாடி அதற்கு தடை வாங்கினர். நாம் மொழிப் போராட்டத்தில் கூட English ever Hindi Never என்று கூறியவர்கள்தான் Tamil Ever எனக் கூறத் தயங்கியவர்கள் அல்லது மறந்தவர்கள். இதன் காரணம் 200 ஆண்டுகள் ஆங்கிலேயரின் அடிமை வாழ்வு வாழ்ந்த மரபணுக் கோளாறாக இருக்கக் கூடும்.


கர்னாடகம் வழியாக வரும் காவிரி நீரை நாமும் கர்னாடக மக்களும் குடிக்கின்றோம். ஆனால் கர்னாடக மக்களுக்குள்ள தாய்மொழிப் பற்று ஏன் தமிழ் நாட்டினருக்கு அவ்வளவாக வருவதில்லை என்பது ஒரு புதிரே ஆகும்.

●



நெஸ்லிங் புதிய வெளியீடுகள்
வாயுள்ள பிள்ளை
தெனாலிராமன் கதைகள்
₹ 85.00
மாய மோதிரம்
₹ 65.00
தங்கம் என்னும் கடலாமை
வியப்பில் ஆழ்த்தும் விலங்கு ராஜ்ஜியம்
₹ 70.00
மீனா என்னும் மைனா
வியப்பில் ஆழ்த்தும் விலங்கு ராஜ்ஜியம்
₹ 70.00
கல்லிவர்ஸ் பயணக் கதை
₹ 70.00
அலாவுதீனும் அற்புத விளக்கும்
₹ 70.00
யானையும் நண்டும்
நீதிக் கதைகளின் வரிசை
₹ 70.00
மலர்கள்
நீதிக் கதைகளின் வரிசை
₹ 70.00
முட்டாள் குரங்கு
₹ 70.00
தற்பெருமை கொண்ட மான்
₹ 70.00
காணாமல் போன சூரியன்
தமிழ்ப் பாடல்கள்
₹ 100/-
(இரண்டு புத்தகங்களும் சேர்த்து)
குரங்குகளும் தொப்பிகளும்
₹ 70.00
தமிழ் மற்றும் ஆங்கிலத்தில்
சிறார்களுக்கான நூல்களை வெளியிடும் சிறந்ததொரு புத்தக நிறுவனம்
நெஸ்லிங் புக்ஸ் பப்ளிஷிங் & டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் (பி) லிட்.,
Nestling
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை - 600 050
☎: 044- 26251968, 26258410, 48601884,
Email: nestlingbooks@gmail.com | www.ncbhpublisher.in

# நியூ செஞ்சுரியின் புதிய நூல்கள்





**சிலுவைராஜ் சரித்திரம்**
ராஜ் கௌதமன்
₹ 560/-




**நெசவாளர்களும் துணிவணிகர்களும்**
எஸ்.ஜெயசீல ஸ்டீபன்
தமிழில்: ந.அதியமான்
₹ 210/-





**யுவான் வம்ச நீலம் மற்றும் வெள்ளை நிறப் பீங்கான்**
ச்சென் சியேஜுன்
தமிழில்: இளந்தமிழ்
₹ 180/-




**வரலாற்று நோக்கில் மங்கலதேவி கண்ணகி கோட்டம்**
கவிஞர் இரா.கணபதிராசன் (எ) தமிழாதன்
₹ 100/-




**தமிழக கிராமிய விளையாட்டுகள்**
குமரி ஆதவன்
₹ 250/-




**பயணம் திறந்த இதயம்**
டாக்டர் இரா.ஆனந்தகுமார் இ.ஆ.ப.,
₹ 155/-

கட்டுரை

# பேண்டமிக் டு எண்டமிக்

க. பழனித்துரை



முதலில் இந்தத் தலைப்பை விளக்கி விடுகிறேன். நாம் இன்று அனுபவித்து வருகின்ற பெருந்தொற்று பெருமளவில் வேகமெடுத்து கட்டுக்கடங்காமல் பரவியதை பேண்டமிக் என்று ஆங்கிலத்தில் அழைத்தனர். இது ஒரு கொடிய தொற்று, அது பெரும்பரப்பில் பரவியது என்ற காரணத்தால் இப்படி அழைத்தனர். உலகம் முழுவதும் எப்படி இதைக் கட்டுப்படுத்த அரசாங்கங்கள் செயல்பட்டன என்பதையும் நாம் அறிவோம். இதில் உயிர்ச்சேதம் மற்றும் பொருட் சேதம் எவ்வளவு நடந்துள்ளன என்பதும் நம் நினைவை விட்டு இன்னும் நீங்கவில்லை. ஆனால் தற்போது நாமெல்லாம் அது முடிந்துவிட்டது, அரசு எடுத்த நடவக்கைகளால் குறைந்துவிட்டது, இனிமேல் ஒன்றுமில்லை என நினைத்து கோவில்களைத் திற, மசூதியைத் திற, தேவாலயங்களைத் திற, பெருங்கூட்டம் கூடுவதற்கு தடை விதிக்காதே, கிராமசபையைக் கூட்டு, திருவிழா நடத்த, பெருவிழா நடத்த அனுமதி என்று அரசுக்கு கட்டளையிடுகின்றோம். கேட்பதில் தவறு ஒன்றும் இல்லை. ஆனால் இந்தக் கேள்விகளைக் கேட்பதற்குத் தகுதிப்படுத்திக் கொண்டோமா என்பதை நமக்கு நாமே கேட்டுக்கொள்ள வேண்டும்.

அரசாங்கம் இந்தத் தடைகளை விதிப்பதால் அரசும் பெரும் பொருளாதார இழப்பைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது என்பதை அரசு என்ன புரியாமலா இருக்கின்றது. அரசுக்கு ஒரு நிர்பந்தம் இருக்கின்றது. அரசு ஆரூடம் பார்த்து முடிவெடுக்க முடியாது. அரசு அறிவியல் தரும் உண்மைத் தரவுகள் அடிப்படையில்தான் முடிவுகள் எடுக்க முடியும். அரசாங்கத்திற்கு கடமை, பொறுப்பு, கடப்பாடு அனைத்தும் இருக்கின்றது. அதை மீற முடியாது. அந்த நிலையில்தான் நம் அரசு மிகவும் கவனமாக தளர்வுகளை அறிவித்தாலும் கட்டுப்பாடுகளை விதித்துக் கொண்டேயிருக்கிறது. ஏதேனும் தவறுகள் நடந்துவிட்டால் அரசுதான் பொறுப்பேற்க வேண்டும். ஏனென்றால் அரசுதான் மக்களின் உயிருக்கு, உடமைக்கு பாதுகாப்புத் தரும் பொறுப்புமிக்க நிறுவனம்.

நமக்கு பொதுமக்களாக ஒரு சிந்தனை மற்றும் நடத்தை பழக்கத்தில் இருக்கிறது. பொதுவாக விதிகளை மதிப்பதைவிட மிதிப்பதிலும் மீறுவதிலும் ஒரு ஆர்வம் அத்துடன் அவற்றையே கலாச்சாரமாகவே வளர்த்து ஒரு விழிப்பற்ற நிலையில் செயல்பட்டு வருகிறோம். அதன் விளைவு அரசு மக்களை கோரிக்கைகள் வைத்து விதிமுறைகளை உங்கள் நலனுக்காக கடைப்பிடியுங்கள் என்று கேட்டுக் கொண்ட வண்ணம் இருக்கின்றது. தடுப்பூசி போடுவதற்குக்கூட கிரைண்டர், மிக்சி என குலுக்கல் முறையில் பரிசு கிடைக்கும் என அறிவித்து பரிசுக்காக தடுப்பூசி போட்டுக் கொள்ளும் சமூகமாக இருக்கின்றது நம் சமூகம். பல நாடுகளில் தடுப்பூசி கிடைக்கவில்லை. இங்கு கூவிக் கூவி அழைக்கின்றனர், தாங்கள் ஏதோ அரசுக்கு உதவி செய்வதுபோல் அங்கு சென்று தடுப்பூசி போட்டுக் கொள்கின்றனர். அரசு கூறுவதை கடைப்பிடிக்கமாட்டார்கள், தடுப்பூசி போட்டுக் கொள்ள வரமாட்டார்கள். ஆனால் அவர்களை அரசு பாதுகாத்துவிட வேண்டும். அந்த அளவுக்கு ஆரோக்யம் பற்றிய புரிதல் இல்லாதவர்களாக, தங்கள் சுகாதாரத்தின் மீதே பொறுப்பற்றவர்களாக கவலையற்றவர்களாக அரசு அனைத்தையும் பார்த்துக்கொள்ளும் என்ற மனோபாவத்தில் செயல்பட்டு வருகின்றனர். இந்த மனோபாவம் தான் நம் முன் நிற்கும் மிகப்பெரிய சவால். இதை எதிர்கொள்ளத் தவறினால் நாம் மிகப் பெரிய சிக்கலுக்கு ஆளாகப் போகிறோம் என்பதை உலக ஆராய்ச்சி நிறுவனங்கள் தங்கள் அறிக்கைகள் மூலம் அறிவுறுத்துகின்றன. நம் உடல்நலம் நம் ஆரோக்யம் என்பது அரசாங்கத்தின் கையில் இருப்பதாகவே நினைத்து செயல்பட்டு பழகிவிட்டோம். இந்தச் சிந்தனை ஏதோ பாமரர்களிடம் மட்டும் இருப்பதாக நினைக்கின்றோம். அது உண்மையல்ல படித்தவர்களிடமே இருப்பதுதான் நம்மை வியக்க வைக்கின்றது.

இந்த புதிய சூழல் வந்து ஓராண்டு ஆகியும் மக்களின் சிந்தனைப் போக்கில், நடத்தையில் செயல்பாடுகளில் அரசு விதிக்கின்ற விதிகளை நம் ஆரோக்கியத்திற்காக கடைப்பிடிக்க மாற்றம் செய்ய பெருமளவில் மக்கள் முன் வரவில்லை என்பதுதான் நாம் பார்க்கும் எதார்த்தம். இந்த நேரத்தில் உலக சுகாதார நிறுவனங்கள் ஆராய்ச்சி அமைப்புகள் தங்களின் ஆராய்ச்சியின் விளைவாக பல புதிய செய்திகளைக் கொண்டு வருகிறது. அதாவது, நாம் வாழும் இடம் சார்ந்தும், நாம் செயல்படும் விதம் சார்ந்தும், குறிப்பிட்ட காலங்களில் நோய்த் தொற்று என்பது தொடர்ந்து தோன்றப்போகிறது. பெருந்தொற்று என்பது தொடர் தொற்றாக மாறப்போகிறது என்பதைத்தான் இப்படி எடுத்துரைக்கின்றனர் வல்லுனர்கள். அதைத்தான் பேண்டமிக் டு எண்டமிக் என்று ஆங்கிலத்தில் அழைக்கின்றார்கள். இந்த பெருந்தொற்று என்ற நிலையிலிருந்து தொடர் தொற்றாக மாற வாய்ப்பிருக்கிறது என்பதைத்தான் ஆய்வாளர்கள் எடுத்துரைக்கின்றனர்.

தமிழகத்தில் புதிய அரசு பொறுப்பேற்கும்போது இந்த பெருந்தொற்றின் கோரத் தாண்டவத்தால் மக்கள் பெரும்பீதியில் இருந்தனர். மக்கள் சுவாசக் காற்றுக்காகவும், உயிர்காக்கும் மருந்திற்காகவும் அலைந்த அலைச்சலை இன்னும் நம்மால் மறக்க இயலவில்லை. பணம் இருந்தும் உயிர்களைக் காப்பாற்ற முடியவில்லை. அந்தச் சூழலை எதிர்கொண்டு மிகக் குறைந்த நாட்களில் சுகாதாரக் கட்டமைப்பில் இருந்த குறைகளைக் களைந்து செயல்பாட்டைத் தீவிரப்படுத்தி தொற்று பரவுவதை கட்டுப்படுத்தி விட்டது தமிழக அரசு. அதற்காக உழைத்த தமிழகத்தின் சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்ரமணியனை தமிழகத்தின் சைலஜா டீச்சராக மக்கள் பார்த்தனர். அத்துடன் மருத்துவர்கள் சுகாதார பணியாளர்கள், மற்றும் தூய்மைப் பணியாளர்கள் அனைவரையும் பொதுமக்கள் பாராட்டினர். ஆபத்தான சூழலில் தங்கள் உயிரைப் பணயம் வைத்து செயல்பட்டதை யாரும் மறுக்க இயலாது. இந்தச் சூழலையும் பயன்படுத்தி சில தனியார் மருத்துவமனைகள் அறம் இழந்த செயல்பாடுகளில் ஈடுபட்டு பெரும் பணம் சம்பாதித்தனர் என்ற சோக நிகழ்வும் நடந்தது. மக்களோடு மக்களாக இணைந்து செயல்பட்ட மா.சுப்ரமணியன் அனைவரின் பாராட்டைப் பெற்ற எளிய மனிதராக உருவானார். மக்களுடன் அரசை கைகோர்க்க வைக்க இப்படிப்பட்ட சாதாரண மனிதர்கள் அமைச்சர்களாக இருப்பது மக்கள் சார்ந்து சிந்திக்கும் ஒரு அரசாக விளங்குவதற்கு அடிப்படைத் தேவையாக இருக்கிறது நம் போன்ற நாடுகளுக்கு. சாதாரண மக்களின் அரசாக ஒரு அரசாங்கத்தை மாற்றுவதற்கு பல மா.சுப்ரமணியன்கள் நமக்குத் தேவை. இந்த நிலையில் டெங்கு பரவுவதை

தடுக்க அடுத்த பணியைத் துவக்கியுள்ளது நம் அரசின் சுகாதாரத்துறை. அதுவும் வேகம் எடுக்கின்றது. இதேபோன்று தொடர்ந்து சுகாதாரம் தொடர்பான பிரச்சினைகள் நம் நாட்டிற்கு மட்டுமல்ல, எல்லா நாடுகளுக்கும் ஒன்றன் பின் ஒன்றாக வரப்போகிறது என்பதைத்தான் பேண்டமிக் டூ எண்டமிக் என்ற தலைப்பில் வந்த கட்டுரைகளில் குறிப்பிடுகின்றனர்.

எதனால் இந்த நிலை வரப்போகிறது என்றால் ஒன்று சூழல் காரணமாக, இரண்டு நம் மக்கள் பொறுப்பற்று நடந்து கொள்வதால் என்பதனைத்தான் எண்டமிக் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். சூழல் சார்ந்து, பல நோய்கள் வரப் போகிறது. ஏனென்றால் நம் சுற்றுச் சூழல் அந்த அளவுக்கு

செயல்பட்டு தங்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

இந்தப் புரிதலை மக்களுக்கு ஏற்படுத்த வேண்டும். கடந்த ஓராண்டு காலமும் அரசாங்கம் போர்க்கால அடிப்படையில் செயல்பட்டது என்பதை யாரும் மறுக்க இயலாது. இதற்கு மக்களைத் தயார் செய்ய எவ்வளவோ முயன்றது, மக்கள் தங்களை மாற்றிக்கொள்ள முனையவில்லை. ஒரு குறிப்பிட்ட சதவிகித மக்கள் அறிவியல் அடிப்படையில் சிந்தித்து, பேராபத்தை உணர்ந்து தங்கள் உயிர்ப்பாதுகாப்பை உறுதி செய்ய தங்களை மாற்றிக்கொண்டனர். நோய் உருவாவதும், நோய் பரவுவதும் மக்களால்தான் நிகழப்போவது என்பதை ஆய்வுக் கட்டுரைகள்



சீர்கேடு அடைந்திருக்கிறது. அதேபோல் பருவ நிலை மாற்றம் பல பேரழிவுகளை கொண்டுவரப் போகிறது. அடுத்த நிலையில் மக்கள் நடத்தையால் சிந்தனையால் செயல்பாட்டால் உருவாகப் போகின்ற நோய்களும் உண்டு. ஏனென்றால் இன்று வரை நம் வாழ்விடத்தையும் வசிப்பிடத்தையும் தூய்மையாக வைத்துக் கொள்ளும் பார்வையும் வரவில்லை, நடத்தையும் வரவில்லை. இந்தச் சூழல் சார்ந்து தோன்றுகின்ற நோய் ஒரு குறிப்பிட்ட காலத்தில் சமூகத்தை பெருமளவில் தாக்கும். இதிலிருந்து மக்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள முக்கியமான தேவை மக்களின் விழிப்புணர்வு மற்றும் புரிதலுடன் கூடிய ஆரோக்கியப் பாதுகாப்புச் சூழல். இதனை அரசாங்கம் மட்டுமே உருவாக்கிட முடியாது. இதற்கு பெருமளவில் மக்களின் ஒத்துழைப்பு அரசாங்கத்திற்குத் தேவை. மக்கள் அரசுடன் கைகோர்த்து பங்காளியாக

தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. மக்களாகிய நாம் சுத்தம், சுகாதாரம், துப்புரவு பேண பழகிக்கொள்ள வேண்டும். துப்புரவுக்கான ஒரு கலாச்சாரத்தை மக்களிடம் ஏற்படுத்த வேண்டும். அதற்கான நடத்தை நம் அனைவருக்கும் வரவேண்டும். அப்படி நம் நடத்தை மாறும்போது, குப்பையை கண்ட இடத்தில் வீச மாட்டோம், தண்ணீர் தேங்கவிட மாட்டோம், நெகிழிப் பைகளை கண்ட இடத்தில் வீச மாட்டோம், மக்கும் குப்பைகளை மக்கச் செய்ய பொறுப்பேற்று மக்கச் செய்து உரமாக்கிடுவோம். இல்லத்திலும், வசிப்பிடத்திலும், வீதிகளிலும் நாம் செல்லும் இடங்களிலும், கூடும் இடங்களிலும் தூய்மைச் சிந்தனையில் செயல்பட்டு பொறுப்பு மிக்க ஆரோக்யம் பேணும் குடிமக்களாக மாறிவிடுவோம். எனவே நம் மாநில அரசு சுறுசுறுப்புடன் இயங்குவது என்ற நிலையில் நின்று விடாமல் மக்களுடன் கை

கோர்த்து சுகாதாரச் செயல்பாடுகளில் மக்களை பங்காளர்களாகச் செயல்பட தயார் செய்ய வேண்டும். இந்தப் பணி சாதாரணப் பணி அல்ல. இதற்கு வித்தியாசமான அணுகுமுறை அரசுத் துறைகளுக்கு வேண்டும்.


இந்தப் பணியில் குறிப்பாக உள்ளாட்சி அமைப்புக்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு பிரதிநிதிகளாக செயல்படுபவர்களுக்கு மிகப் பெரிய பொறுப்பும் பங்கும் இருக்கிறது. இந்தப் புரிதல் மக்கள் பிரதிநிதிகளுக்கு இருக்க வேண்டும். பொதுச் சுகாதாரம் என்பது பொதுமக்களின் பங்களிப்பு இன்றி உருவாகாது என்ற புரிதல் நம் அனைவருக்கும் வேண்டும். அப்பொழுதுதான் மக்களை பொறுப்புமிக்க ஆரோக்கியம் பேணும் குடிமக்களாக உருவாக்க முடியும். கட்டுமானப் பணிகளில் கவனம் செலுத்துவதைவிட பொதுமக்களிடம் ஒரு பொது விழிப்புணர்வும், பார்வையும் உடல் ஆரோக்கியம் பேணுவது பற்றியும், அதன் முக்கியத்துவம் பற்றியும் புரிதலை ஏற்படுத்துவது தான் மிக முக்கியமான பணி. அந்தப் பணி செய்வதன் மூலம் ஒவ்வொரு தனிமனிதரும் தங்கள் உடல் ஆரோக்கியம் தங்கள் பொறுப்பு, அது தங்கள் கையில்தான் உள்ளது என்ற புரிதல் ஏற்படும் வகையில் செயல்பட வேண்டும். இந்தப் பணி பற்றி மகாத்மா காலத்திலிருந்து இன்றுவரை நாம் அனைவரும் பேசி வருகின்றோம். இதைத்தான் ‘தூய்மை இந்தியா’ திட்டம் என்று நம் மத்திய அரசு அறிவித்துள்ளது. இந்தத் திட்டம் ஒரு ஆரோக்கிய கலாச்சாரத்தை உருவாக்க ஆரம்பிக்கப்பட்டதாகும். அது இன்று கழிப்பிடம் கட்டும் பணியாக மாற்றப்பட்டு விட்டது.

தூய்மை இந்தியா திட்டம் வெற்றி பெறுவது என்பது கழிப்பறை கட்டுவதில் அல்ல, ஒரு துப்புரவு மற்றும் தூய்மை கலாச்சாரத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதில் தான். எனவே தூய்மை இந்தியா என்பது மந்திரத்தால் உருவாவது அல்ல. தூய்மை இந்தியாவை தூய்மையான குடிமக்களால்தான் உருவாக்க முடியும் என்பதை நம் அரசும், ஆட்சியாளர்களும், நம் மக்கள் பிரதிநிதிகளும் மக்களும் அறிந்து கொள்ள வேண்டும். கிராமங்களிலும் நகரங்களிலும் பிரிக்கப்படாத குப்பைகள் ஆங்காங்கே கொட்டப்படுகிறது என்றால் அதன் பொருள் பொறுப்பற்ற மனிதர்களின் பொறுப்பற்ற செயலால் வந்தது என்பதை புரிந்துகொள்ள வேண்டும். பொறுப்புமிக்கவர்களாக பொதுமக்கள் மாறவேண்டும் என்றால் தூய்மை அறிவியல் மக்களுக்கு கற்றுத்தர வேண்டும். அதைத்தான் பெரும்புலவன் பாரதி சுத்த சாஸ்திரம் படிப்போம் என்றான். துப்புரவு என்பது குப்பைகளைக் கூட்டி ஓரிடத்தில் மேடாகக் கொட்டி கொசுவை உற்பத்தி செய்வது அல்ல. உருவாக்கிய குப்பைகளை மேலாண்மை செய்வது. அது ஒரு அறிவியல். அதை இன்று வரை நம் மக்களுக்குக் கற்றுத் தரவில்லை. குப்பையில் ஒரு பெரு வணிகம் இந்தியாவில் இருப்பதை பலர் சுட்டிக் காட்டுகின்றனர். அந்த வணிகம் எப்போது சாத்தியமாகும் என்றால் குப்பைகள் பிரிக்கப்படும் போதுதான். அதற்கான பார்வையும் நடத்தையும் வந்து விட்டால், குப்பை வணிகம் செய்ய வெளிநாட்டுக் கம்பெனிகள் வந்து விடும். குப்பை வணிகமாக மாறும்போது, தூய்மைப் பணியாளர்கள் இருக்க மாட்டார்கள், மக்களே தூய்மைப் பணியைச் செய்து பணம் ஈட்ட ஆரம்பித்து விடுவார்கள். அந்த நிலை உருவாக அரசு மக்களைத் தயார் செய்ய வேண்டும். இதைத்தான் பொறுப்புமிக்க சுகாதாரம் பேணும் சிந்தனை கொண்ட குடிமக்கள் தயாரிப்புச் செய்ய வேண்டும் என உலக சுகாதார நிறுவனங்கள் கோடிட்டுக் காட்டுகின்றன.

இந்தத் தயாரிப்பு நடந்துவிட்டால் எந்தத் தொற்றுப் பரவலையும் அரசும் மக்களும் சேர்ந்து எதிர் கொள்ளலாம். இந்தக் கல்வி இன்று மக்களுக்குக் கொடுத்தாக வேண்டும். அதற்கான முயற்சியில் தமிழக அரசு இறங்க வேண்டும். இன்று நகராட்சிகளில் விழிப்புணர்வுத் தட்டிகளைப் பார்க்கிறோம். அது போதாது. இந்த விழிப்புணர்வுக்கான மக்கள் இயக்கம் உருவாக்கப்பட வேண்டும். அது பள்ளிகளில், கல்லூரிகளில், நடைபெற வேண்டும். தமிழகத்தில் உள்ள அனைத்து உயர் கல்வி நிறுவனங்களும், உன்னத் பாரத் திட்டத்தைப் பயன்படுத்தி மக்களிடம் இந்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். தொழில் முனைவோர் குப்பையில் எவைகளைத் தயாரிக்க முடியும், குப்பைகளை எவ்வளவு சீக்கிரமாக உரமாக மாற்ற முடியும் என்பதற்கான தொழில் நுட்பத்தைக் கண்டுபிடிக்க வேண்டும். பல்வேறு மக்கள் இயக்க நடவடிக்கைகளை மக்கள் பிரதிநிதிகளும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும், ஆராய்ச்சி நிறுவனங்களும், வணிக நிறுவனங்களும் கிராமத்திலுள்ள தன்னார்வலர் இளைஞர்களும் களப்பணியாற்றி இதன் முக்கியத்துவத்தை விளக்கிட வேண்டும். சிறப்பு கிராமசபைக் கூட்டம் கூட்டப்பட்டு கிராம மக்களுக்கு பொறுப்புமிக்க பொதுச் சுகாதாரம், பொறுப்பு மிக்க ஆரோக்கியம் பற்றி எடுத்துரைக்க வேண்டும். தொற்று எவ்வளவு விரைவாக பரவுகிறதோ அதேபோல் இந்தச் சிந்தனைத் தொற்று பரவவேண்டும். இதுதான் இன்றைய உடனடித் தேவை. இல்லையேல் நம் மேம்பாடு முன்னேற்றம் வளர்ச்சி எல்லாம் கேலிக்கூத்தாகிவிடும். இதை உணர்ந்து மக்களை அரசுச் செயல்பாடுகளில் பங்காளியாக்கிக் கொண்டு செயல்படுவதுதான் அனைவரின் பாதுகாப்பிற்கும் வளர்ச்சிக்கும் இன்றியமையாதது. இந்தப் புதிய சிந்தனையில் செயல்படுமா நம் சுகாதாரத்துறை.

●

# நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் அரசியல் நூல்கள்





**மோடியின் ஆட்சி ஒரு விமர்சனப் பார்வை**
டாக்டர் சித்தன கௌட பட்டீல்
முரளிதரா
எம், சத்தியானந்த்
₹ 30.00




**மதமா? அரசியலா?**
தா.பாண்டியன்
₹ 45.00





**இந்துத்துவாவா இந்திய சுயராஜ்யமா?**
யு.ஆர்.அனந்தமூர்த்தி
தமிழில்: டாக்டர் வெ.ஜீவானந்தம்
₹ 65.00




**பீகாரிலிருந்து திகார் வரை**
கன்னையா குமார்
₹ 110/-





**கார்ல் மார்க்ஸ் வாழ்வும் பணியும்**
தா.பாண்டியன்
₹ 140/-




**லெனின் என்னும் மனிதர்**
தொமாஸ் க்ரொவ்ஸ்
தமிழாக்கம் எஸ்.வி.ராஜதுரை
₹ 155/-

# நியூ செஞ்சுரியின் வரலாற்று நூல்கள்




**காலனி ஆட்சியில்**
**நல வாழ்வும் நம் வாழ்வும்**

டாக்டர் சு.நரேந்திரன்

₹ 250/-

அரசியல் வரலாறு, சமூக வரலாறு, பண்பாட்டு வரலாறு, பொருளாதார வரலாறு முதலானவற்றை அறிந்து கொண்டுள்ள அளவிற்கு நாம் காலனிய காலத்தின் மருத்துவ வரலாற்றை அறிந்ததில்லை. அதிலும் தமிழில் அறியும் வாய்ப்பு கிடைக்கவில்லை. உதிரிக் கட்டுரைகளாக சில பொழுது எழுதப் பெற்றுள்ளன. வெவ்வேறு பொருள் சார்ந்து சில நூல்கள் உள்ளன. நேர்ப் பொருளில் ஒரு முழுமை நோக்கிய பார்வையில் முழு நீள நூல் இதுவரை இல்லை. அந்த வெற்றிடத்தை இந்த நூல் நீக்குகிறது. அதனால் இந்த வகைமையில் முதல் நூல் எனும் சிறப்பைப் பெறுகிறது.


காலனிய வளர்ச்சிக்காலத்தில் தமிழர்கள் எவ்வாறு தங்களது சொந்த நாட்டைவிட்டு வெளியேறி இலங்கை தீவுக்கும், மர்த்தினு, குவாதலோப் போன்ற தென் அமெரிக்கத் தீவுகளுக்கும், ஆப்பிரிக்காவுக்கு அருகாமையில் உள்ள மொரிசியசு, ரீயூனியன் தீவுகளுக்கும், மலேயாவில் உள்ள பினாங்கு, சிங்கப்பூர் தீவுகளுக்கும் புலம்பெயர்ந்தனர் என்பதை இந்நூல் ஆழமாகவும் விரிவாகவும் ஆராய்கிறது. மேலும் காலனிய ஆதிக்கத்தினால் தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட நிலைமை, தமிழர்களின் வாழ்வில் ஏற்பட்ட பண்பாட்டுத் தாக்கங்கள், விளைவுகள், புதிய அனுபவங்கள் மற்றும் பழைய அடையாளங்களைத் தெள்ளத் தெளிவாக எடுத்து இயம்புகிறது.

**காலனிய வளர்ச்சிக் காலம்**

புலம் பெயர்ந்தவர்களின் வாழ்க்கை

எஸ்.ஜெயசீல ஸ்டீபன்

₹ 175/-



கட்டுரை

# படக்காரன் சொன்ன கருடபுராணம்

## அ.கா. பெருமாள்



எங்கள் ஊர் சங்கம்பாண்டி காப்பிக்கடையின் ரசவடை, பக்கடா, சுக்கு காப்பி வகையறாக் களுக்குப் பக்கத்து ஊர்களிலும் மரியாதை உண்டு. சுடுகாட்டு எல்லையில் அவரது கடையிருந்தது. பிணமானவர்கள் எல்லோரும் அவரின் கடையைத் தாண்டித்தான் போக வேண்டும்.

சங்கம்பாண்டி கடை பக்கடாவின் மணம் பாடையிலிருக்கும் பிணத்தை எழுப்பிவிடும்; அதனால் வேகமாகப் போய்விடுங்கள் என்று பாடை தூக்குபவர்களைப் பார்த்து ஊர் மொறையாள் பிள்ளை (ஊர்க்குற்றேவல்காரர்) சொல்லுவார் என்ற கிண்டலான வழக்காறு உண்டு.

சங்கம்பாண்டி எப்போதுமே தன்னைக் காப்பிக்கடைக்காரராக அடையாளப் படுத்தமாட்டார். காவடிக்காரர், காவடி தூக்குபவர் என்றுதான் சொல்லுவார். திருச்செந்தூர், குமாரகோவில் மருங்கூர் என முருகன் கோவில்களுக்கு காவடி எடுப்பவர்கள் முக்கியமாக நேர்ச்சைக் காவடி எடுப்பவர் சங்கம்பாண்டியிடம் தேதி வாங்கிக் கொள்வார்கள்; முன் பணம் கொடுப்பார்கள்.

அலங்கரிக்கப்பட்ட காவடியைச் சுமந்து ஊரைச் சுற்றி வருவது, முருகன் கோவில்களுக்கு நடந்தேபோவது எல்லாம் அவருக்கு அத்துபடி. நான் ஊரை விட்டுக் குடிபெயர்ந்தபின் எல்லாம்

கனவாகிவிட்டது. ஒருநாள் சங்கம்பாண்டி என் வீடு தேடி வந்தார். அப்போது எண்பதைத் தாண்டிவிட்டார்.

எனக்கு அவரை அடையாளம் தெரியவில்லை. அவரே என் அப்பாவின் பெயரைச் சொல்லி என்னை அழைத்தார். அவருக்குத் துணையாக 17 வயதுப் பேர்த்தி வந்திருந்தாள். அவளுக்கு என் கல்லூரியில் சேரவேண்டும். வந்த விஷயத்தைப் பேசிமுடித்துவிட்டு அவர் வீட்டிலிருந்து விடைபெறும்போது வள்ளியூரில் இன்னொரு பேத்தி வீட்டிலிருக்கிறேன் வாருங்கள் என்றார்.

நான் அவரை மறுபடியும் திருநெல்வேலி மாவட்டம் வள்ளியூரில் சந்திப்பேன் என்று நினைக்கவில்லை. 'ஐவர் ராசாக்கதை'யின் நாயகனான குலசேகரப்பாண்டியன் கோட்டை கட்டி வாழ்ந்த இடம் வள்ளியூர். அந்தக் கதைப்பாடல் தொடர்பான செய்திகளைச் சேகரிக்கப் போனபோது வருவாய்த்துறை காவலர், பண்டாரம் சாதி ஆள் ஒருவரைச் சந்தித்தேன். அவர் வீட்டில் சங்கம்பாண்டியைப் பார்த்தேன்.

தமிழக வரலாற்றில் பிற்காலப் பாண்டியர்கள் 15ஆம் நூற்றாண்டிற்குப் பின் திருநெல்வேலி மாவட்டத்தில் தென்காசி, கயத்தாறு, வள்ளியூர் என சில ஊர்களுக்குக் குடி பெயர்ந்தார்கள் எனப் பொதுவாகச் சொல்வது மரபு. ஆனால் இது பற்றிய விரிவான வரலாறு வரவில்லை. தென்காசிப் பாண்டியர்கள் பற்றிய நூலை மு.அருணாசலம் எழுதியிருக்கிறார்.

வள்ளியூரில் பாண்டியர்கள் இருந்தனர் என்பதற்குக் கதைப் பாடல்களில் சான்று உண்டு. குலசேகரப் பாண்டியன் என்பவன் வள்ளியூரில் கோட்டை கட்டினான்; அவனுக்குத் திருமணம் செய்து வைக்க ஆசைப்பட்டாள் அவனது அம்மா. அதற்காக பண்டாரங்கள் சிலபேரின் உதவியை நாடினாள்.

நல்ல ஓவியனின் உதவியால் குலசேகரனின் படத்தை வரையச் செய்தாள். பண்டாரங்கள் சிலரை அழைத்து இந்த ஓவியத்தை தேசமெங்கும் கொண்டு செல்லுங்கள் என்றாள்.

அவர்கள்

**தென்றிசைக்கும் மண்டலமும் தொட்டார்**
**வளநாடுமிட்டு**
**சோழமண்டலமும் சென்று சிறந்த**
**புகழ்நாடுமிட்டு**
**மன்னர்கள் வடிவை எல்லாம் வையாகாமல்**
**பாடிவிட்டு**
**இரவினிலே ஊரார்முன் கூடிநின்று கதைபேசி**
**.......செல்லுகிறார்கள்.**

நான் இந்தப் பகுதியில் பண்டாரங்கள் படம் கொண்டு சென்ற நிகழ்ச்சி பற்றிக் கேட்டபோதுதான், வருவாய்த் துறைக் காவலர், எங்க சாதிக்கு அதுதானே தொழில். காவடியில் படம் தூக்கிப் பழக்கம்; மாமாவிடம் கேட்டால் விரிவாகச் சொல்லுவார் என்றார்.

எனக்கு அவர் 'மாமா' என்றது சங்கம்பாண்டியை என்பது தெரியாது. மாமாவைப் பார்க்கலாமா என்றேன், இங்கேதான் இருக்கிறார்கள் என்றார். அழைத்தார். சங்கம்பாண்டி வந்தார். என்னைப் பார்த்ததில் அவருக்கு சந்தோஷம். அவரது பேத்தியின் வீடு அது என்று தெரியாமலேயே நான் போயிருக்கிறேன்.

சங்கம்பாண்டியிடம் நான் எதிர்பார்க்காத தகவல்கள் கிடைத்தன. களஆய்வில் எதையோ தேடிப்போக வேறொன்று கிடைப்பதை பலமுறை அனுபவத்தில் கண்டிருக்கிறேன்.

நாஞ்சில் நாட்டில் படக்காரனின் வரவு 19ஆம் நூற்றாண்டின் கடைசியில் நின்றுவிட்டது. முதல் உலகப் போரின்போது ஒன்றுரெண்டுபேர் நடமாடியிருக்கிறார்கள். நான் பரமசிவராவின் அப்பா கோபாலராவை முதலிலும் கடைசியுமாகச் சந்தித்தபோது படக்காரர்கள், இயற்கைச் சாயத்தைத் தயாரிக்க எங்களிடம் சேட்டுக் கொள்ளுவார்கள் என்றார். அதை விரிவாகத் தெரிந்துகொள்ள கேட்பதற்கு என்னிடம் அப்போது கேள்விகள் இல்லை

இதன் பிறகு படக்காரரைப் பற்றி மறந்து விட்டேன். தமிழறிஞர் கே.என்.சிவராஜபிள்ளையின் மொத்த புத்தகங்களைத் தேடியபோது நாஞ்சில் வெண்பா என்ற சிறுநூல் கிடைத்தது. கே.என்.எஸ். தன் சமகாலத்திலோ அதற்கு முன்போ தான் பார்த்த விஷயங்களை வெண்பாவில் எழுதியிருந்தார். அதில் படக்காரனைப் பற்றிய பாட்டும் உண்டு.

சங்கம்பாண்டிக்கு தலைகால் புரியவில்லை, என்னைப் பார்த்ததும் மகிழ்ச்சி கரைபுரண்டது. பழைய விஷயங்களைப் பேச ஆரம்பித்தார். நான் கொஞ்சம் கேட்டுவிட்டு மெல்ல படக்காரனுக்குத் திருப்பினேன்.

சரி சரி என் தாத்தா சிந்தாமணிப்பண்டாரம் சொல்லியிருக்கிறார். படக்காரர்களும் பண்டாரம் தான். சங்கூத்துப் பண்டாரம் இன்னொரு வகை, அவர்களெல்லாம் நாடோடியாகவே காலத்தைக் கழிச்சிட்டாங்க. இப்போதான் சாதி எல்லாம் கலந்தாச்சே என்றார் அலுப்புடன். மறுபடியும் நான்

திருப்பினேன். அவர் பேச ஆரம்பித்தார்.

படக்காரன் காவி உடுத்திருப்பார். கழுத்தில் பெரிய காவடி இருக்கும். அதைப் பார்த்தால் அதிக எடையுள்ளது போல் தோன்றும். உண்மையில் அது கனம் குறைந்தது. காவடியின் உள்ளேயும் வெளியேயும் நிறைய படங்கள் இருக்கும்.

இந்த ஓவியங்கள் துணியில் வரையப்பட்டவை; இயற்கையாகக் கிடைத்த பொருட்களாலும் மூலிகைச் சாறுகளாலும் வரையப்பட்டவை. ஒவ்வொரு படத்தின் கீழும் படத்தின் பெயர் இருக்கும். எல்லா படங்களுமே நரகத்தின் காட்சிகள்தாம். அதர்மம் செய்பவர்கள் நரகத்தில் படும் அவலக்காட்சிகளே படங்களின் மையம்.

படக்காரனின் காவடி, பார்ப்பதற்கு பிரமாண்டமாய் எடை கூடியதாய் தோற்றமளித்தாலும் உண்மையில் எளிதாய் தூக்க முடியுமாம். படக்காரனின் இடது தோளில் லாவகமாய் அது நிற்கும். ஒரு ஊரில் 7 முதல் 10 நாட்கள் வரை படக்காரன் இருப்பான். அந்த ஊரில் பாழடைந்த மண்டபம், பொது மண்டபம், சத்திரம் ஏதாவது ஒரு இடத்தை தேர்ந்தெடுப்பார். அந்த இடத்தில் சோறு பொங்குவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து கொள்ளுவார். ஊர் எல்லையில் உள்ள நாட்டார் தெய்வக் கோவிலில் அவர் தங்குவதற்கு யாரும் மறுப்பு சொல்ல மாட்டார்கள்.

நாஞ்சில் நாட்டுக் கிராமங்களுக்கு ஒரு வருஷத்தில் இரண்டோ மூன்றோ முறைதான் படக்காரர் வருவார். ஒருவர் செல்லும் கிராமத்துக்கு இன்னொரு படக்காரர் போக மாட்டார். சில சமயம் நான்காம் முறை வரலாம். கன்னிப் பூ, கும்பப் பூ என்றும் இரண்டு அறுவடைக் காலங்களில் வரும். சித்தோசி, ராப்பாடி போன்ற யாசகர்களைப் போலல்லர் படக்காரர். இவருக்கென்று பருவமோ, காலமோ கிடையாது.

படக்காரர் ஊரின் முச்சந்திகளில் கடைவீதியில் சந்தையில் மக்கள் கூடும் இடங்களில் காவடியை சுமந்துகொண்டே பாடுவார். இவர் பாடுவதைக் கேட்க என்றே கூட்டம் கூடும். பெரும்பாலும் வயதானவர்கள் இவரின் பாட்டுகளை நின்று கேட்பார்கள். சித்தர் பாடல்களில் பாம்பாட்டிச் சித்தரையும் சிவவாக்கியரையும் ராகத்துடன் பாடுவார்கள். சித்திர புத்திரநைனார் அம்மானை நூலில் பின் இணைப்பாக உள்ள அமராவதிச் செட்டிச்சியின் கதையில் சில பகுதியையும் பாடுவார். அமராவதியை கிங்கிலியர் செக்கில் இட்டு துன்புறுத்தும் பகுதியைத் திரும்பத் திரும்பப் பாடுவார். இடையிடையே சில வாய்மொழிப் பாடல்கள்; அவை நிலையாமை, நரகம் பற்றிப் பேசுவனவாய் இருக்கும்.

படக்காரர் காவடியுடன் தெருவில் பாடிச் செல்லும்போது யாசிப்பதில்லை. ஒரு தெருவில் பாடி முடித்துவிட்டு அடுத்த தெருவின் ஆரம்பத்தில் நின்றுகொண்டு பாடுவார்; இதற்குள் நடுப்பகல் ஆரம்பித்து விட்டால் காவடியுடன் தான் வசிக்கும் இடத்திற்குப் போய் விடுவார்; பொழுது சாய்ந்ததும் யாசகத்துக்கு வருவார். துணிப்பையில் யாசகப் பொருட்களை வாங்கிக் கொள்ளுவார்.

படக்காரர் யாசகமாகப் பெறுவது அரிசியும் தேங்காயும் தான். சில சமயம் நாட்டுக் காய்கறியும் பணமும் கிடைக்கும். பண்டாரம் சுத்த சைவம்; அவரே சமைப்பார். யார் வீட்டிலும் சமைத்த உணவை யாசகமாக வாங்க மாட்டார்; கொடுப்பதும் இல்லை. இவர் பிராமணர் வீதிகளுக்கு யாசிக்கச் செல்லமாட்டார்.

படக்கார சங்கம்பாண்டிப் பண்டாரம் இரண்டு வேளைதான் சாப்பிடுவார். முந்தியநாள் பொங்கிய சாப்பாட்டை தண்ணீர் விட்டு பழைய சாதமாக்கிக் காலையில் சாப்பிடுவார். பின் மாலை குழம்பு துணைக்கறிகளுடன் இரவு 7 மணிக்குச் சாப்பாடு. படக்காரர் இரவு சாப்பாட்டை முடித்துவிட்டு எட்டுமணிக்கு ஊர்க்கோவிலின் முன் வாசலுக்கு வருவார்.

பெரும்பாலும் வயதானவர்கள் ஊர்க்கோவில் வாசலில் கூடியிருப்பர். படக்காரர் தன் பயண அனுபவத்தை, கதையாகச் சொல்லுவார். முக்கியமாக தான் சென்ற ஊரில் நடந்த விழா, பிரமுகரின் இறப்பு, பிறப்பு, இயற்கை அழிவு, பயிர்களைத் தாக்கிய நோய் விபரம் எனப் பல விஷயங்களைச் சொல்லுவார். அந்த ஊர் விஷயங்களையும் கேட்டுத் தெரிந்து கொள்ளுவார்.

படக்காரன் ஊர் விவகாரங்களைப் பற்றி பேசும்போதே கருடபுராணக் கதையையும் கலந்து சொல்லுவார். படக்காரரின் காவடியில் இருக்கும் படங்களும் கருடபுராணத்தில் சொல்லப்படும் நரகங்களின் படம்தான். கருடபுராணச் செல்வாக்கு நாட்டார் வழக்காற்றில் தத்துவார்த்த ரீதியாகப் பரவிக் கிடந்தது என்பதற்கு படக்காரனின் காவடி ஒரு சான்று.

சித்திரை மாத முழுநிலவில் சித்திரைகுப்தன் அம்மானையைப் படிப்பது; விரதம் இருப்பது என்னும் வழக்கம் இப்போதும் நடைமுறையில் உள்ளது.

சித்திரகுப்தன் உயிர்களின் பாவ புண்ணியங்களைப் பதிவு செய்பவன். இந்திரனின் மகன். இவனைப் பற்றிய அம்மானை புகழேந்திப் புலவரின் பெயரில் உள்ளது.

சித்திரகுப்தன் அம்மானை கருடபுராணச் செல்வாக்குடையது. மார்க்கண்டன் தவசு வில்லுப்பாட்டிலும் சித்திரகுப்தன் வருவான். மரணப் படுக்கையில் வைகுந்தம் அம்மானை படிப்பது, பதினாறாம் நாள் இறப்புச் சடங்கில் கர்ணமோட்சம் கதை படிப்பது அல்லது தெருக்கூத்து பார்ப்பது என்னும் நாட்டார் மரபு கருடபுராணச் செல்வாக்குடையவைதாம்.

சித்திரகுப்தன் பற்றிய அம்மானையின் பின்னிணைப்பாக அமராவதி அம்மானை உள்ளது. அமராவதி என்னும் செட்டிச்சி தான தர்மங்கள் செய்தவள்; ஆனால் சித்திரபுத்திரரின் நோன்பை உதாசீனம் செய்தாள். அதனால் நரகத்திற்குக் கொண்டு செல்லப்பட்டாள். கொடுமைப்படுத்தப்பட்டாள். ஆனால் நரகத்தின் கொடுமையோ கஷ்டமோ அவளைப் பாதிக்கவில்லை. வேறுவழியில்லாமல் அவள் விடுவிக்கப்பட்டு அடுத்த பிறவியில் நயினார் நோன்பு நோற்க அறிவுறுத்தப்படுகிறாள்.

இந்தக் கதைகள் எல்லாவற்றிலும் கருடபுராணச் செல்வாக்கு உள்ளது. கருடபுராணம் வடமொழியில் அமைந்த 18 புராணங்களில் 17ஆம் புராணமாகக் கருதப்படுவது. இது இரண்டு காண்டங்களும் 19000 பாடல்களும் கொண்டது.

முதல்காண்டம் பூர்வ கந்த காண்டம், இதில் வானியல், மருத்துவம், இலக்கணம் நவரத்தின சோதனை எனப் பல விஷயங்கள் சொல்லப்படுகின்றன. இரண்டாம் காண்டம் உத்திர காண்டம். இதில் இறப்பிற்குப் பின்னர் உள்ள நிகழ்வுகள் வருகின்றன. விஷ்ணு ஒருமுறை கருடனின் மேல் உலகைச் சுற்றி வருகிறார். அப்போது கருடன் இறப்பிற்குப் பின்னர் மனிதன் என்ன ஆகிறான் என்று கேட்கிறான். அதற்கு விஷ்ணு விரிவாகப் பதில் சொல்லுகிறார். இது உத்திரகாண்டச் செய்தி.

விஷ்ணு - கருடன் உரையாடலே கருடபுராண உத்திர காண்டச் செய்தி. நரகங்கள் 4 லட்சம் உண்டென்றாலும் முக்கியமானவை 28 என்றும் செய்த பாவத்திற்கு ஏற்ப நரகத்தின் தன்மை அமைந்திருக்கும் என்றும் கருடபுராணம் கூறும்.

கருடன் விஷ்ணுவிடம் ஒருவன் இறந்தபின் என்ன வடிவத்தில் இருக்கிறான் எனக் கேட்கிறான். விஷ்ணு இதற்கு விரிவாகப் பதில் சொல்லுகிறார். இறந்தபின் அடைவது பிரேத வடிவம் (இது பிணம் அல்ல; ஆவி) இறந்தவர் ஆவியாக வடிவம் மாறுவர். இதுவும் செய்த வினைக்கேற்ப இருக்கும்.

பூமியில் வாழும்பொழுது நல்ல காரியங்கள் செய்பவர் வெள்ளைநிறப் புகை வடிவில் ஆவி உருவத்தில் இருப்பர். தீய செயல் செய்து வாழ்ந்தவர்கள் கறுப்பு ஆவியாக அலைவர்; ஆன்மிகவாதிகள் இளம் சிவப்பு ஆவியாக (ஆரஞ்ச் நிறம்) அலைவர். இறந்தவர் உடனே யமலோகம் செல்வர்; 12 நாட்கள் கழித்து இறந்த இடத்திற்கு வருவார்.

இந்தக் கருடபுராணச் செய்திகள் கிராமங்களில் பல்வேறு வடிவங்களில் வழங்குகின்றன. இவற்றிற்குப் படக்காரன், வில்லுப்பாட்டுக் கலைஞன், கணியாள் ஆட்டக் கலைஞன் ஆகியோருக்கும் பங்கு உண்டு. முக்கியமாகப் படக்காரன் நரகம் பற்றிய செய்திகளைச் சுவையாக பாடியிருக்கிறான்; கதைசொல்லியாகச் சொல்லி இருக்கிறான்.

படக்காரன் ஊர் விஷயங்களைப் பேசினாலும் மையம் கருடபுராணமே. இதை வேறுவேறு வடிவங்களில் அவர் சொல்லுவார். இவர்களின் சம்பாஷனை 11 மணி வரை நீடிக்கும். இப்படியான உரையாடல், படக்காரனை யாசகர் என்ற நிலையிலிருந்து அன்னியமாக்கி விடும். படக்காரரும் ஊர்ப் பெரியவர்களை பெரியவரே என்றும் பெண்களை அம்மா என்றும் அழைப்பார்.

படக்காரர் ஊர் மக்களின் உரையாடலின் போது தன் அடுத்த பயணத்தைப் பற்றியும் பேசுவார். அப்போது, அவர் செல்லப்போகும் ஊரில் வசிக்கும் உறவினர்களை விசாரித்ததாகவும் சிலர் சொல்வார்கள். ஒருவகையில் அன்றைய தபால்காரர் மாதிரியும் செயல்பட்டிருக்கிறார்.

ஊர்ப் புறங்களில் படக்காரரின் வரவு 20ஆம் நூற்றாண்டு ஆரம்பத்திலேயே நின்றுவிட்டது. 50களில் வட நாஞ்சில் நாட்டு கிராமங்களுக்கு சித்தோசி, சங்கரன்கானைக்காரர், சாட்டையடிக்காரர், கழைக்கூத்துக்காரர், ராப்பாடி என்னும் கலைஞர்களும் யாசகர்களும் வந்தார்கள். ஆனால் படக்காரர்கள் வரவில்லை.

படக்காரர்களின் வரவு நின்றதற்கு அவர்கள் வேறு சாதியினருடன் மணஉறவு வைத்துக் கொண்டதும் ஒரு காரணம் என்றார் சங்கம்பாண்டி. சிலர் சிறுவியாபாரம், தொழில் எனச் சென்று விட்டனர். சங்கம்பாண்டி தன் தாத்தா சிந்தாமணிப் பண்டாரம் சொன்ன பல விஷயங்களைச் சொன்னார். அவர்

சொன்ன பல விஷயங்களில் கருடபுராணம் நாட்டார் வழக்காற்றில் கலந்துள்ளது என்பதும் ஒன்று.

தமிழறிஞர் கே.என்.சிவராஜபிள்ளையின் நாஞ்சில் வெண்பாவில் உள்ள பாடல் வருமாறு.

**பாதகம் செய்வார் பின்படும்**
**பாட்டின் பாவனையை**
**சாதகமாய் ஓர் படத்தில் தாதித்து காதகரை**
**செக்கிலிட்டு ஆட்டி கூர்செங்கழுவில் மாட்டி தீ**
**வக்கிலிட வைப்பான் மதித்து**

சங்கம்பாண்டி தன் தாத்தா சொன்ன விஷயங்கள் மட்டுமல்ல சில பாடல்களையும் பாடினார்; அவற்றை முழுதும் பதிவு செய்யவில்லை.

### பின்இணைப்பு

கருடபுராணம் கூறும் நரகங்களின் பெயர்கள். இந்த 28 நரகங்களில் நடக்கும் செயல்பாடுகள் படக்காரனின் காவடியில் இருக்கும்.


1. **தாமிஸ்ர நரகம்:** பிறர் மனைவி விரும்புபவர்; கொள்ளையடிப்பவர் செல்லும் நரகம்.
2. **அந்த தாமிஸ்ரம்:** கணவன் அல்லது மனைவியை வஞ்சிப்பவர் செல்லும் நரகம்.
3. **ரௌரவம்:** அடுத்தவர் குடும்பத்தை வஞ்சிப்பவன் செல்லும் நரகம்
4. **மகா ரௌரவம்:** கொடும்பாவம் செய்பவன் செல்லும் நரகம்
5. **கும்பிபாகம்:** உயிர்களை வதைப்பவன் செல்லும் நரகம்.
6. **காலசூத்திரம்:** வெறிபிடித்தவன் அலையும் நரகம்
7. **அசிபத்திரம்:** அதர்மம் செய்பவன் செல்லும் நரகம்
8. **பன்றிமுகம்:** அநியாயமாய் பிறரைத் தண்டிப்பவன் செல்லும் நரகம்
9. **அந்தகூபம்:** சித்திரவதை செய்பவன் அடையும் நரகம்
10. **கிருமிபோஜனம்:** கிருமிபோல் பிறரைத் துளைத்துப் பாவம் செய்தவன் செல்லும் நரகம்.
11. **அக்கினிகுண்டம்:** பலாத்காரத்தால் பிறருடைய சொத்துக்களை பறிப்பவன் செல்லும் நரகம்.
12. **வஜ்ர கண்டகம்:** காமவெறி பிடித்து அலைபவர் அடையும் நரகம்.
13. **சான்மலி:** உயர்வு தாழ்வு பாராமல் தரங்கெட்டவர்களுடன் கூடியவன் அடையும் நரகம்.
14. **வைதரணி:** மிருகம்போல் தகாத உறவுகொள்ள கட்டாயப்படுத்துபவன் அடையும் நரகம்.
15. **பூயோதம்:** நல்வழி அன்றி எப்போதும் தீயவழி நடப்பன் செல்லும் நரகம்.
16. **பிராணரோதம்:** பிராணிகளைத் துன்புறுத்துபவன் செல்லும் நரகம்.
17. **விசஸனம்:** பசுவதை புரிபவன் செல்லும் நரகம்.
18. **லாலாபட்சம்:** மனைவியை வற்புறுத்தி மோக இச்சைக்கு அழைப்பவன் செல்லும் நரகம்.
19. **காரமேயாதனம்:** கூட்டமாய் குடிமக்களை கொல்லக் காரணமாயிருப்பவன் செல்லும் நரகம்.
20. **அவீசி:** பொய்சாட்சி சொல்லுபவன் செல்லும் நரகம்.
21. **பரிபாதனம்:** குடிக்கத் தூண்டி கொடுஞ் செயல் புரிபவன் செல்லும் நரகம்.
22. **காரகர்த்தமம்:** பெரியோரையும் தீயோரையும் அவமதிப்பவன் செல்லும் நரகம்.
23. **ரசோணம்:** சாதுவான பிராணிகளை வதைத்கின்றவன் செல்லும் நரகம்.
24. **ஆலரோதம்:** நம்பிக்கை துரோகம் செய்பவன் செல்லும் நரகம்.
25. **தந்தஆகம்:** துரோகம் செய்பவன் செல்லும் நரகம்.
26. **வடரோதம்:** பிராணிகளை வேட்டையாடுபவன் செல்லும் நரகம்.
27. **பர்யாவர்த்தனகம்:** விருந்தினரை உபசரிக்காதவன் செல்லும் நரகம்.
28. **ஆசிமுகம்:** அநியாயமாய் சம்பாதிப்பவன் செல்லும் நரகம்.

### அமராவதி கதை

அமராவதி கதை 647 வரிகளைக் கொண்ட அம்மானை, சித்திரபுத்திர நயினார் கதை நூலின் பின்னிணைப்பாக உள்ளது. இந்த அம்மானையில் நரகத்தின் கொடுமைத் தன்மை சுவையாக வருணிக்கப்படுகிறது.

**முந்நூறு காதம் அகலமுள்ள காட்டூடே**
**கல்லுங் கறகுங் கார்முள்ளுதான் படவே**
**கட்டி இழுத்தார்கள் கண்விழிகள் பிதுங்க**
**செப்புத்தூளோடு சேர்த்துக் கட்டி வைத்தார்**
**கண்கள் தெறித்துவிழ கன்னத்தில் போட்டான்**
**அட்டைக்குளத்தில் அழுத்தவே தள்ளிவிட்டார்.**

(இப்படியாக நரக வர்ணனை போகும்) இதை முழுவதும் படக்காரன் பாடியிருக்கிறான்.



நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் மற்றும் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையத்தின் 36 ஆவது தேசிய புத்தகக் கண்காட்சி மற்றும் புத்தக வெளியீட்டு விழா திருநெல்வேலியில் நடைபெற்றது. அருட்பணி ஹென்றி ஜெரோம் புத்தகக் கண்காட்சியை திறந்து வைத்தார். இதில் மீனாட்சிசுந்தரம், மயன் ரமேஷ் ராஜா, பேராசிரியர் நா. ராமச்சந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர். மேலும் முனைவர் மு.அருணாசலம் முனைவர் ராஜ வரதராஜன் ஆகியோர் இணைந்து எழுதிய தமிழ் இலக்கிய வரலாறு முனைவர் பா. ஆனந்தகுமார் எழுதிய தமிழ் செவ்விலக்கியங்கள் மீள்வாசிப்பு, இரா.செல்வம் எழுதிய பனையடி, எஸ். ஜெயசீல ஸ்டீபன் எழுதிய தமிழகத்தில் தொழில் வளர்ச்சியும் உழைப்பாளர் சமூக உண்மை நிலையும் சாதியும் ஆகிய புத்தகங்கள் வெளியிடப்பட்டன.



சேலம் பத்மவாணி மகளிர் கலை அறிவியல் கல்லூரியில் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் துணை முதல்வர் அ.பழனியம்மாள் எழுதிய நன்னூல் சொல்லதிகார உரைநூல் வெளியிடப்பட்டது. கல்லூரி தாளாளர் கா.சத்தியமூர்த்தி, கா.துரைசாமி, ர.அரிகிருஷ்ணராஜ், பெ.முத்துக்குமார், இணைப்பேராசிரியர் வாசுகி மற்றும் என்சிபிஎச் கோவை மண்டல மேலாளர் ஆர்.ரங்கராஜன் ஆகியோர் கலந்துகொண்டனர்.



கட்டுரை

# அதிகார வர்க்கத்தில் கூழ்முட்டைகள்

ச. சுபாஷ் சந்திரபோஸ்

மதியம் ஒரு மணி; 'இந்தப் படத்தைப் பாருங்க' என்றபடியே மருத்துவ மகன் கட்டிலில் படம் ஓடும் கருவியை வைத்தார். பத்து வயதுப் பேத்தி வசதியாக உட்கார்ந்து பார்க்கச் சாய்வு நாற்காலியை எடுத்துப்போட்டுப் பக்கத்தில் அமர்ந்து கொண்டது.

திரைப்படம் பார்க்கக் கூடாது என்னும் வைராக்கியம் இல்லை. எழுபதைக் கடந்தாலும் படிப்பதற்கும் எழுதுவதற்குமே நேரம் போதவில்லை. 'நீங்கள் ஏன் குடிப்பதில்லை?' என்று மேலை நாட்டு நாடக ஆசிரியர் பெர்னாட்ஷாவைக் கேட்டபோது' 'நான் குடிக்க வேண்டியதை எல்லாம் என் அப்பா குடித்து விட்டுப் போய் சேர்ந்து விட்டார்' எனக் கூறியதாக இளமைக் காலத்தில் படித்தது நினைவிற்கு வந்தது. அவ்வாறே, கல்லூரி, பல்கலைக்கழகங்களில் படிக்கும்போதே திரைப்படங்கள் பார்க்க நாட்கள் கழிந்தமை நினைவுக்கு வந்தது.

எந்த ஒன்றைப் பார்த்தாலும் படித்தாலும் இன்னொன்றை இன்னும் பலவற்றைக் கிளறி வெளிக் கொண்டு வரவேண்டும். அப்படித்தான் செய்தது 'ஜெய்பீம்' திரைப்படம்.

படிநிலை வாழ்க்கையை - உயர்வு - தாழ்வைத் தூக்கிப் பிடிக்கும் சனாதனம் எழுப்பும் ஜெய்ராம் என்பது போலச் சமூக நீதியை முழங்க எழுந்ததே ஜெய்பீம். அண்ணல் பீம்ராவ் ராமோஜி பாபாசாஹேப் அம்பேத்கர், பெரியார் ஈ.வே.ராமசாமி என இப்பெயர்களை எல்லாம் மேலோட்டமாகப் பார்க்கும்போதே இவற்றில் இருந்து முற்போக்குச் சிந்தனைகள் எவ்வளவு பொழிந்துள்ளன!

'தென்னை மரத்திற்குத் தேள் கொட்டினால் பனை மரத்திற்குப் பல் கிட்டியதாம்' என்பார்கள். இப்படித்தான் மாமேதை கார்ல் மார்க்ஸ், அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியாரின் பெயரைக் கேட்டாலே சீறி எழுகின்றார்கள். சிலைகளை உடைக்கின்றார்கள்; சாயம் பூசுகின்றார்கள். அவர்களுடைய கோட்பாடுகளுக்கு விளக்கம் சொல்லத் தெரியாதவர்கள் இவற்றைத்தானே செய்வார்கள். தெளிவாகப் படித்தால் தானே விளக்கம் சொல்ல முடியும். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று கூறப்பட்ட மண்ணில் இப்படிப்பட்ட மனிதத் தன்மையற்ற வன்கொடுமைகள் நடக்கக் கூடாது என்னும் எண்ணம் மனதில் ஊற வேண்டும்.

ஒரு வேடிக்கை என்னவென்றால் பிற்போக்கான கருத்துக்களைக் கூறுவோர் அவர்கள் முற்காலத்தவர், பிற்காலத்தவர் என்னும் வேறுபாடு இல்லாமல் கூறிவிட்டு அவற்றால் வாழ்வார்கள்; அவற்றில் குளிர் காய்வார்கள். அவற்றை மறுப்பதற்காக முற்போக்குச் சிந்தனையாளர்கள் படாத பாடுபடுவார்கள்; பக்கம் பக்கமாகப் படிப்பார்கள்; எழுதுவார்கள். கார்ல் மார்க்ஸ் தம் வாழ்நாளையே நூலகங்களிலும் எழுதும் இடத்திலும் அமர்ந்து கரைத்துள்ளார்.

அவர்கள் யாருக்காக எழுதினார்களோ, அவர்கள் எந்த அளவு படித்திருப்பார்கள் என்பது தெரியவில்லை. படித்திருந்தால் நிறைய எதிர்வினை ஆற்றியிருப்பார்கள். மகாகவி பாரதியாரைப்போல மனம் இளகி இருப்பார்கள். பொங்கி இருப்பார்கள். மானுட நேயத்திற்கு எதிராக நீதி கூறிய மனுநீதியை அண்ணல் அம்பேத்கருடன் நின்று எரித்த கங்காதர் நீல் காந்த் சகஸ்ர புத்தே பார்ப்பன இனத்தைச் சார்ந்தவர்.

உண்ணும் உணவிலும் உடுக்கும் உடையிலும் அவற்றிற்காக உழைத்தவர்களின் வியர்வை, இரத்த வாடையை உணர்பவனே மனிதன். உணர்ந்தால் ஜெய்பீம் திரைப்படத்தில் காட்டப்படுவது போன்ற பொய்வழக்குப் போட்டு உழைக்கும் மக்களைச் சித்திரவதை செய்ய வாய்ப்பே இல்லை.

அதிகார வர்க்கங்களுக்கு மட்டுமல்லாமல் பழங்குடி மக்களுக்கும் இந்தத் திரைப்படம் ஒரு விழிப்புணர்வைக் கொடுத்துள்ளது. சமூக ஆர்வலர்களும் மேலும் தங்கள் விழிகளை அகலமாக விரித்துப் பார்க்கிறார்கள்.

படம் ஓடிக் கொண்டிருக்கின்றது. நகையைத் திருடியவர்களாகப் பிடித்து வரப்பட்டவர்களைக் காவல் துறையினர் அடிக்கும்போது சாய்வு நாற்காலியில் வசதியாக உட்கார்ந்திருக்க முடியவில்லை. அது திரைப்படம்தான் என்றாலும் அடிகள் நம்மீது விழுவது போன்ற உணர்வு ஏற்படுகின்றது. கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

ஜெய்பீம் படத்தைப் பார்த்து ஒரு துளியேனும் கண்ணீர் சிந்தாதவர்கள் இருந்தால் இரக்கமற்றவர்கள் என்றெல்லாம் திட்ட வேண்டியதில்லை; பாராட்ட வேண்டும். அதிகார வர்க்கத்தில் இப்படிப்பட்டவர்கள்தானே நிறையப் பேர் இருக்கின்றார்கள்!

அவர்களின் மேல் அடி விழுவதற்கு முன்பும் அடி விழும்போதும் அடி வாங்கிய பிறகும் எழுந்த - எழும் கதறல் இதயத்தைக் கசக்கிப் பிழிகின்றது. கட்டுப்படுத்த முடியாத கண்ணீர், இதயப் படபடப்பு இவற்றோடு படத்தைப் பார்க்க முடியவில்லை; பார்க்காமலும் இருக்கமுடியவில்லை.

பக்கத்தில் இருந்த பேத்தி தன் கண்களைத் துடைத்துவிட்டு என் கண்ணீரையும் துடைத்து விட்டுத் துண்டையும் கையில் கொடுக்கின்றது. மருத்துவர்களின் மகள்; அடிக்கடி இல்லத்தில் இருப்பவர்களின் இதயத்துடிப்பைத் தன்னுடைய விளையாட்டு இதயத் துடிப்புக் கருவியால் சோதனை செய்யும். தன் வலது கையை நீட்டி என் இதயத் துடிப்பைப் பார்க்கிறது.

**'படத்த நிப்பாட்டிடுறேன் தாத்தா'**

**'வேணாம்மா ஓடட்டும்'**

இப்படிப் பட்ட காட்சிகளை நேரடியாகப் பார்க்கவில்லையே தவிர, காவல் துறையினர் மக்களுக்கு இழைக்கும் கொடுமைகள் கேட்டும் படித்தும் அறிந்தவை ஏராளம். சாத்தான் குளம் பென்னிக்ஸ், ஜெயராஜ் அடிபடுபவர்களாக கடையில் புகுந்து கண்ணில் தென்படுகின்றார்கள்.

திருடுபவர்களும் மாட்டிக் கொண்டு அடிபடுகின்றார்கள். திருடாத அப்பாவிகளும் மாட்டிக் கொண்டு துவைத்து எடுக்கப்படுவார்கள்; இறந்துபோனவர்கள் ஏராளம். கணக்கு வழக்கு இல்லாமல் படுகொலை செய்யப்பட்டிருப்பார்கள். மதுரையில் ஜெய்பீம் போல பாண்டியன் நெடுஞ் செழியனால் கோவலன் அரசியின் சிலம்பைக் கவர்ந்தான் என்று குற்றம் சாட்டப்பட்டுக் கொல்லப்பட்டான். ராஜாக்கண்ணு காவல் நிலையத்தில் அடித்துக் கொல்லப்படுவதற்கும் கோவலன் கொல்லப்படுவதற்கும் காலந்தான் வேறுபடுகின்றது. காட்சி ஒன்றேதான். அவ்வாறே செங்கேணியின் அலங்கோலத்தில் கண்ணகியைக் காணமுடிகின்றது.

நஞ்சையும் புஞ்சையும் கொஞ்சி விளையாண்ட காலத்திலும் சோழ நாட்டில் பிழைக்க வழியில்லாமல் குடியானவர்களும் உழைக்கும் மக்களும் வெளிநாடுகளுக்கு போயுள்ளார்கள். அங்குப் போயும் நாட்டு விடுதலைக்காக இந்திய தேசிய இராணுவத்தில் (INA) சேர்ந்து போராடினார்கள்.

நாடு விடுதலை அடைந்தது; சொந்த நாட்டில் சுகமாக வாழலாம் என்று ஊர் திரும்பினார்கள். எப்படி நிம்மதியாக வாழ முடியும்? புதிய பொங்கலில் பழைய உப்புத்தான். நாட்டு விடுதலைக்குப் பின் மதுவிலக்கு தீவிரமாகக் கடைபிடிக்கப்பட்டது.

திடீரென்று காவல்துறையினர் அரைக்கால் காக்கிச் சட்டை, சிவப்புத் தொப்பியுடன் வெள்ளி முளைக்கும் நேரத்திற்குத் திடுதிடுவென ஓடி வருவார்கள். உழைத்து விட்டு வந்து படுத்துப் பிணம் போலக் கிடக்கும் மக்களை ஓரிடத்தில் சேர்ப்பார்கள். தெருவுக்கு ஒன்று இரண்டு பேர் காய்ச்சுவார்கள். அவர்கள் யார் என்பதும் காவல்துறையினருக்குத் தெரியும். இருந்தாலும் மக்களைப் பயமுறுத்த அப்படிச் செய்வார்கள்.

சாராயம் காய்ச்சுபவர்களைப் பிடித்துக் கோமணம், காற்சட்டையுடன் சாராயப் பானையைத் தலையில் வைத்து, கரும்புள்ளி - செம்புள்ளி குத்தி சாலையில் நடக்க விடுவார்கள். ஆனால் அவர்கள் ஆசியுடன் சிலர் சாராய ஆலை அமைத்து வடித்துக் கொண்டிருப்பார்கள்!

ஐந்தாறு வயதில் தூக்கம் கலைந்து அம்மாவின் முந்தானையைப் பிடித்துக் கொண்டு நின்றது தற்போதும் பசுமையாக இருக்கின்றது. காவல் துறையினருக்கு மாமூல் கொடுத்துச் சாராயம் காய்ச்சுவது அறுபது - எழுபதுகளில் பரவலாக இருந்தது. கொடுக்கும் மாமூலை வாமுட்டு, வாய்க்கரிசி என்றெல்லாம் கூறுவார்கள்.

திருடாத இருளர் இன ராஜாக்கண்ணு, மொசக்குட்டி போன்ற இளைஞர்களை ஒப்புக் கொள்ளச் சொல்லி அடித்து நார் நாராகக் கிழிப்பதைப் போலச் சாராயம் காய்ச்சியவர்களையும் அடிப்பார்கள். சிலர் சாராயம் காய்ச்சி அவமானப்பட்டு வாழ்வதை விடக் கூலி வேலை செய்து பிழைக்கலாம் என்று திருந்தி விடுவார்கள். மாமூலுக்காகவும் வழக்குப் போடவும் அவர்களையும் விடமாட்டார்கள். அப்படி அடிபட்டு இறந்தவர்களைப் பற்றியும் எப்போதாவது செய்தி வரும்.

அண்மைக் காலத்தில் வடக்கு, தெற்கு என்று வேறுபாடு இல்லாமல் இந்தியக் கோயில் சிலைகள் வெளி நாடுகளில் இருந்து இங்குக் கொண்டுவரப்படுகின்றன. தெய்வங்களுக்குச் சக்தி இருக்கின்றது. இல்லை என்று கருதுவது அவரவர் உரிமை. கரோனா பரவலுக்கு எல்லா மத வழிபாட்டுத் தலங்களும் ஒரு காரணமாக இருக்கின்றன என ஒன்றிய, மாநில அரசுகள் மூடச் சொல்லி விட்டன. கடவுள் உண்டா? இல்லையா? என்பதற்குள் போக வேண்டியதில்லை. பிற மதத்தினர் போரிட்டுக் கொள்ளை அடித்தவை பற்றியும் பேச வேண்டியதில்லை.


ஆனால் விடுதலைக்குப் பிறகு ஆயிரக் கணக்கான கோயில் சிலைகள் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளன அல்லது போலியாக மாற்றப்பட்டுள்ளன. சிலைகள் தாமாக வெளிநாடு போய் இருக்க முடியாது என்பதை ஆத்திகர் - நாத்திகர் என அனைவரும் ஏற்றுக் கொள்வார்கள். கடத்தியவர்கள் யார்? தண்டனை பெற்றவர்கள் எத்தனை பேர்? கடத்தப்பட்ட சிலைகள் திரும்பக் கொண்டு வந்தமை பற்றி பெருமையாகப் பேசப்படும். எழுபது - எண்பது ஆண்டுகள் ஆகிவிட்டன. கண்டு பிடிப்பது சிரமம் என்று கூறிவிடலாம். கோயில், சிலை, கோயில் சொத்து தொடர்பாக ஒரு கடவுள் மறுப்பாளருக்கு இருக்கும் அக்கறை ஆத்திகர்களை விட எந்த விதத்திலும் குறைந்ததில்லை. சிலைத் திருட்டு, சிலை மாற்றம், நகைக்கொள்ளை, கோயில் நில ஆக்கிரமிப்பு போன்றவற்றின் வரலாற்றை மேலோட்டமாகப் பார்த்தாலே தெரியும். அன்மைக்காலங்களில் வெளிநாடுகளில் பதுக்கப்பட்ட கருப்புப்பணம் பற்றிய செய்தியே கருப்பாகத்தான் தெரிகின்றது.

ஒரு வேளாண் பெருங்குடி மகனோ வேறு தொழில் செய்பவரோ. கடனை வாங்கித் திரும்பச் செலுத்தா விட்டால் தற்கொலை செய்து கொள்ளும் அளவிற்குத் தள்ளப்படுகின்றார்கள். ஆனால் ஆயிரக் கணக்கான கோடிகளை வங்கிகளில் மோசடி செய்தவர்கள் கோயில் சிலைகளைப் போல வெளிநாட்டுக்குக் கடந்து போய் விடுகின்றார்கள்.

ஜெய்பீம் படம் பார்த்து ஊடகவியலாளர், திறனாய்வாளர்கள் கூறும் கருத்துகள் முக்கியமானவை. வெறுமனே படத்தைப் பார்த்துக் கடந்துபோய் விட முடியாது. முன் நிகழ்வுகளை நினைத்துப் பார்க்க வைக்கின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால் படத்தைப் பார்த்துக் கண்ணீர்விட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் உடனடியாக இருளரின மக்கள் மட்டுமல்லாமல் அவர்கள் போலவே விளிம்பு நிலையில் வாழும் நரிக்குறவர் இனமக்களுக்கும் நலத் திட்டங்களை அறிவித்துள்ளார்.

அவர்கள் வாழும் இடங்களுக்கே சென்று வீட்டுமனைப் பட்டா, முதியோர் உதவித் தொகை, குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, சாதிச் சான்றிதழ், தொழிற்பயிற்சி, வங்கிக் கடன் போன்றவை பெறத் தமிழக முதல்வர் உதவியுள்ளமை மகிழ்ச்சியும் நெகிழ்ச்சியும் தரத்தக்கச் செய்திகளாகும்.

நாட்டில் எவ்வளவுதான் வளங்கள் இருந்தாலும் அவற்றில் ஒரு சிறு துளி கூட உழைக்கும் மக்களைச் சென்றடைவதில்லை. சான்றாகக் கீழத் தஞ்சை பகுதியைக் குறிப்பிடலாம். நிலம் முழுவதும் கோயில், மடம், பண்ணைகளுக்கு உரிமை உடையவை. பண்ணைகளில் உழைத்துக் கால்வயிற்றை நிரப்ப, பெரியவர்கள் கூறுவது போல அவர்கள் பட்டபாடு அந்தச் சூரியனுக்குத்தான் தெரியும். சாட்டையால் அடிப்பார்கள். சாணிப்பால் கொடுப்பார்கள். நகக் கண்ணில் ஊசி ஏற்றுவார்கள். சோற்றுப்பானையை வெளியே தூக்கிப் போட்டு உடைப்பார்கள். அடைக் கோழியைப் போலத் தலைகீழாகத் தொங்க விடுவார்கள்; உப்பைக் கொட்டி முட்டிபோட வைப்பார்கள்; கால் கையைச் சேர்த்துக் கட்டி வெயில் கீழ் பாய்ச்சிப் போடுவார்கள்; சூடு போடுவார்கள்; பெண்டாட்டியின் சிறுநீரைக் கூடக் குடிக்க வைப்பார்களாம்! பாலியல் தொந்தரவும் இருக்கும்




பெற்ற பிள்ளைகள் அல்லது உறவினர்களிடம் ஓர வஞ்சனையாக நடப்பவரை 'நீ ஒரு கண்ணுல வெண்ணையும் ஒரு கண்ணுல சுண்ணாம்பும் வைக்கிற ஆளு' என்பார்கள். ஜெய்பீம் படத்தில் காவல் துறையினர் மிளகாய்ப் பொடியைக் கண்ணில் அள்ளிப் போடுகிறார்கள். கொல்லப்பட்டவர் கண்ணில் எதை அள்ளிப் போட்டால் என்ன? உயிரோடு இருப்பவர் கண்ணில் அள்ளிப் போட்டால்? நினைத்துப் பார்க்கும் போதே நம் கண்களில் எரிச்சல் பீறிட்டு வருகின்றது.

ஆறறிவின் உச்சம் தொட்டவர்களாக நமக்கு நாமே பெருமைப்பட்டுக் கொள்ளும் நம் காலத்தில்தான் இப்படிப்பட்ட நாகரிகமற்ற செயல்கள் நடந்து கொண்டிருக்கின்றன. பொதுவுடைமை இயக்கம் தான் இப்படிப்பட்ட வன்கொடுமைகள் தொழிலாளர்களுக்கு நிகழாதிருக்கக் கோடு போட்டது. தோழர் பி.சீனிவாசராவும் பொதுவுடைமைக் கோட்பாட்டில் ஈடுபாடு கொண்ட மண்ணின் மைந்தர்களும் பண்ணைத் தொழிலாளர்களுக்கு விவசாய சங்கம் அமைத்துக் கொடுத்துக் களத்தில் இறங்கினார்கள்.

பொதுவுடைமை சாதி, இனமாகப் பார்க்காமல் வர்க்கமாகப் பார்க்கக் கற்றுக் கொடுத்தது. இரணியன், சிவராமன், ஆறுமுகம் போன்ற இளைஞர்கள் 1950 மே மாதத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். பண்ணையார்களிடம் கூலி உயர்வு கேட்ட தொழிலாளர்களுக்குத் துணை நின்றதற்காக அரசு தோட்டாக்களைப் பரிசாகக் கொடுத்தது.

பழங்குடி மக்கள், நரிக்குறவர் போல் அல்லாமல் தலித்து மக்கள் ஓரளவு தலை நிமிர்ந்து வாழ்வதற்குப் பொதுவுடைமைக் கட்சி செய்துள்ள பணி அளப்பரியது. களப்பால் குப்பு திருச்சி சிறையில் நஞ்சு கொடுத்துக் கொல்லப் பட்டாராம்.

வாட்டாக்குடி இரணியன் வீட்டைக் காவல் துறையினர் இடித்துத் தரை மட்டம் ஆக்கினார்கள். தற்போதும் அவர் குடும்பத்தால் நிமிர்ந்து நிற்கமுடியவில்லை. அந்தக் காலக் கட்டத்தில் பொதுவுடைமைக் கோட்பாட்டிற்காகத் தங்கள் இன்னுயிரைக் கொடுத்தவர்கள் குடும்பங்கள் அப்படியேதான் இருக்கின்றன. அந்தத் தியாகிகளின் நினைவிடங்களில் ஆண்டுதோறும் மலர் வளையம் வைப்பதோடு பொதுவுடைமைக் கட்சியினர் தங்கள் பணியை முடித்துக் கொள்கின்றார்கள்.

இப்படி எல்லாம் கடந்த காலம், நிகழ்காலம் என எல்லாவற்றையும் தூசு தட்டிப் பார்க்க வைத்து விட்டது ஜெய்பீம் என்னும் திரைப்படம். நடிகர் சூர்யாவின் திறமைகளை எல்லாம் குறிப்பிட்டு இப்படி ஒரு படத்தில் நடித்து உச்சம் தொட்டதை ஊடகவியலாளர்கள் வியப்புடன் நோக்குகின்றார்கள்.

நடிகர் சூர்யா திரைப்படத்தில் நடிக்கின்றார்; சமுதாயத்தில் வாழ்கின்றார்; முன்னேற வாய்ப்புக் கிட்டாதவர்களுக்கு ஊன்று கோலாகக் இருக்கின்றார். அகரம் அறக்கட்டளை வழி எண்ணற்ற வர்களுக்கு வழி ஆகின்றார். ஜெய்பீம் கண்ணீரைப் பொழியவிட்டதைப் போல இன்னொரு காட்சியும் கண்ணைப் பனிக்கச் செய்தது.

ஊடகத்தில் பார்த்து நெஞ்சம் கனத்த நிகழ்ச்சி. அகரம் அறக் கட்டளை வழிப் பயன்பெற்ற ஒரு இளம் பெண் பேசுகிறார். அதற்கு மேல் ஒருவரால் தன் நன்றி உணர்வைக் காட்டமுடியாது. அப்படி ஒரு உருக்கமான பேச்சு!

நடிகர் சூர்யா எழுந்து போய் அந்த மாணவியின் தலையோடு தலை வைத்து அன்போடு கண்ணீரையும் பொழிகின்றார். ஆதரவு வேண்டி நிற்போர்

எல்லோரையும் சேர்த்து உச்சிமுகர்வது போல இருந்தது. நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களின் கண்களும் ஆனந்தக் கண்ணீர் வடித்திருக்கும். இதுதான் வாழ்க்கை. இயக்குநர் த.செ.ஞானவேலும் பாராட்டுக்கு உரியவர்.

நீட் தேர்வு இருபதுக்கு மேற்பட்ட மாணவர்களைக் காவு வாங்கியது. நடிகர் சூர்யா அத்தேர்வு முறையை எதிர்த்தார். இருளர் இனமக்களின் கல்வி வளர்ச்சிக்காக ஒரு கோடி நிதியை முதலமைச்சரிடம் அளித்துள்ளார்!

ஜெய்பீம் வெளியிடப்பட்ட சில நாட்களிலேயே பழங்குடிமக்கள் ஆங்காங்கே தங்கள் உரிமைக்காக் குரல் எழுப்பத் தொடங்கி விட்டார்கள். இதுவே படத்தின் முதன்மையான வெற்றியாகும்.

நடிகர் சூர்யாவுக்குள் இருந்த நடிகர்கள் எல்லோரையும் விஞ்சிவிட்டார் வழக்குரைஞர் சந்துரு. வழக்குரைஞர், நீதியரசர் என்னும் பதவிகளுக்குப் பெருமை சேர்த்தவர் சந்துரு. நூல்கள், கட்டுரைகள் வழி அவரின் ஆளுமையை அறிந்துகொள்ளலாம். பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் (AUT) சார்ந்தோர் நீதியரசர் சந்துருவைப் பற்றி நிறையக் குறிப்பிடுவார்கள். அவரின் நேர்மையும் தெளிவான தீர்ப்பும் கூடச் சூர்யாவின் சந்துரு என்னும் கதை மாந்தருக்கு ஊக்கத்தைக் கொடுத்திருக்கும்.

ஜெய்பீம் திரைப்படத்தில் அனைவரும் நடிக்கிறார்கள் என்பதை விட வாழ்கின்றார்கள் என்றுதான் கூற வேண்டும். அதனால்தான் இருளர், நரிக்குறவர் இனமக்களுக்குத் தமிழக அரசின் நலத்திட்டங்கள் உடனே கிடைத்துள்ளன.

மருத்துவமனையைத் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும் என்பதைக் கூற வந்த நடிகர் சூர்யாவின் இணையர் ஜோதிகா கோயிலோடு தொடர்பு படுத்திக் கூறினார். உடனே ஒரு சிறு கூட்டம் பொங்கி எழுந்தது. பேசியதோடு மட்டுமல்லாமல் தஞ்சாவூர் மிராசுதார் மருத்துவமனையின் மேம்பாட்டிற்காக இருபத்தைந்து லெட்சம் ரூபாய் நன்கொடையும் அளித்தார்! யாரும் மூச்சுவிடவில்லை.

வேளாண் விளை பொருளைத் தவிர, மற்றவை எல்லாம் யானை விலை, குதிரை விலை என ஏறிக் கொண்டிருக்கின்றன. எரிபொருள் விலை ஏற்றம்போல வேளாண் இடுபொருள்கள், கட்டுமானப் பொருள்களின் விலைகள் ஏறிக் கொண்டே போகின்றன.

இவற்றைப் பற்றி மக்கள் பேசுவதைத் திசை திருப்ப வழிபாட்டுத் தலங்களைத் திறப்பது பற்றியும் சமயம் சார்ந்தும் பேசுகின்றார்கள். அரசியலில் ஆன்மீகம் புகுந்தால் சிக்கல்தான்.

இந்தியாவின் அரசியலும் ஆன்மீகமும் எல்லா நாடுகளிலும் இருக்கும். தண்டவாளம் போல இருக்க வேண்டும். ஆன்மீகம் அரசியலை ஆண்டால் அறிவியல் வளராது. அறிவியலைக் கடன்தான் வாங்க வேண்டும். அரசியல் ஆன்மீகத்தின் பொய் மூட்டைகளைச் சுமக்கும்; வரலாறு மறையத் தொடங்கும். தென்கோடி முதல் வட கோடி வரை திராவிட மொழிகளையும் இந்தோ-ஆரிய மொழிகளையும் பேசும் பழங்குடி மக்கள் கல்வி, மருத்துவம், இருப்பிடம், போக்குவரத்து போன்ற அடிப்படை வசதிகள் இல்லாமல் தற்போதும் கோடிக்கணக்காக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்! தலைமுறை தலைமுறையாக அவர்கள் வாழ்ந்த - வாழும் காடு, மலைகள், கனிமவளங்களைக் கொள்ளையடிக்க கார்பரேட் நிறுவனங்களுக்குத் தாரை வார்க்கப்படுகின்றன. எதிர்ப்பவர்கள் தீவிரவாதிகள், நக்சலைட் என்று முத்திரை குத்தப்படுகின்றார்கள்.

அரசாங்க, ஆளும் வர்க்கக் கோழிமுட்டை குடியானவர்களின் அம்மிக்கல்லையும் உடைக்கும் என்னும் சொலவச் சொல் ஒன்று உண்டு. குடியானவர் நிலையே இப்படி என்றால் பழங்குடி மக்கள் நிலை எப்படி இருக்கும்? உறவினர், தொழில் செய்வோர், மருத்துவர் என அனைவரையும் ராசாக்கண்ணுவின் கொலையை மறைக்கக் காவல் துறை அச்சுறுத்துகின்றது.

தமிழகத்தில் மட்டுமல்லாமல் இந்தியா முழுவதும் பழங்குடி மக்கள் காலங்காலமாகவே தங்கள் வாழ்வாதாரங்களைப் படிப்படியாக இழந்து வருகின்றார்கள்.


நிலம் சார்ந்த தொழில் அடிப்படையில் வேறுபாடு இல்லாமல் குழுக்களாக மக்கள் பழந்தமிழகத்தில் வாழ்ந்தார்கள். சமயங்கள் புகுந்து கோழி சீய்ப்பதைப் போல் மக்களைச் சாதி அடிப்படையில் உயர்வு - தாழ்வு கற்பித்துக் கலைத்துப் போட்டு விட்டன. எட்கர் தர்ஸ்டன் ஏழு தொகுகளாக எழுதும் அளவிற்கு (தென்னிந்தியக் குலங்களும் குடிகளும்) சமயத்தாலும் சாதியாலும் மக்கள் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட பிரிவுகளாக வாழ்கிறார்கள்.

இருளர்கள் திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள்; நரிக்குறவர்கள் இந்தோ - ஆரிய இனத்தைச் சார்ந்தவர்கள். அவர்கள் பேசும் வாக்ரி போலி என்னும் மொழி ஆரிய இனத்தைச் சார்ந்தது. பழங்குடி மக்களின் வாழ்க்கையை வைத்துத்தான் வளர்ச்சியை உரசிப் பார்க்க வேண்டும்.

எப்படியோ ஜெய்பீம் என்னும் இந்தத் திரைப்படம் இந்தியப் பழங்குடி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் பெரிதும் உதவி உள்ளது. தமிழக அரசின் உடனடிச் செயற்பாடே இதற்குச் சான்று. ஜெய்பீம் திரைப்படம் முழுவதும் மார்க்சியம், அம்பேத்கரியம், பெரியாரியம் பொங்கி வழிகின்றன. விளிம்பு நிலை மக்களுக்காக இந்தியா முழுவதும் பரவட்டும்.

●

# நியூ செஞ்சுரியின் எஸ்.வி.ராஜதுரை நூல்கள்




எஸ்.வி.ராஜதுரை தமது கட்டுரைகளினூடாக இந்திய, அல்ஜீரிய, ஆங்கில, பிரெஞ்சு, இத்தாலிய, தென்னமெரிக்க கலை இலக்கியப் படைப்பாளிகளுடன் நம்மை உறவாட வைக்கிறார். இந்தோனீஷாவின் மாபெரும் இலக்கியப் படைப்பாளி ப்ரமோதியா ஆனந்த தூர் பற்றிய விரிவான அறிமுகம் தமிழ் வாசகர்களுக்கு முதன்முறையாகக் கிடைக்கச் செய்கிறார். மதவாத, சாதிய, பாலின, வர்க்கப் பிரச்சினைகளை மார்க்ஸிய - அம்பேத்கரிய - பெரியாரிய வெளிச்சத்தில் ஆழமான பகுப்பாய்வுக்கு உட்படுத்துகிறார். காந்தியார் சுட்டுக் கொல்லப்பட்ட நிகழ்வைப் பெரியார் தமக்கே உரிய அசாதாரணமான மனிதநேய, சாதி - எதிர்ப்புக் கண்ணோட்டத்திலிருந்து விளக்கியதைக் கோடிட்டுக் காட்டுகிறார்.




கார்ல் மார்க்ஸின் அழகியல், அறவியல், அரசியல் பரிமாணங்களைக் கூறும் கட்டுரைகள்; உலகப் புகழ்பெற்ற இலக்கிய ஆளுமைகளான ஆன்டன் செகோவ், ஆல் பெர் காம்யு, எலினா ஃபெரரான்ட்டெ, மேரி ஷெல்லி, பெர்டோல்ட் ஃப்ரெஹ்ட், உம்பர்த்தொ எக்கோ, அரபு இலக்கிய உலகி ல் தனி முத்திரை பதித்துள்ள அஹ்மெத் ஸாடவி ஆகியோரின் படைப்புகளைப் பற்றிய விரிவான மதிப்பீடுகள்; 'சர்வதேச' கீதத்தின் வரலாற்றுப் பின்னணி; இனவாதத்திற்கும் ஆணாதிக்கத்திற்கும் வர்க்கச் சுரண்டலுக்கும் எதிராகப் போராடிய ஆளுமைகளைப் பற்றிய குறிப்புகள்; பெரியாரின் மேதைமை குறித்த தகவல்கள் என இருபது கட்டுரைகள்.

# நேரு குறித்த ஓர் அர்த்தமுள்ள நூல்



“நேரு சனநாயக சோசலிசம் என்று இந்தியச் சூழல்களில் அல்லது ஆசிய ஆப்பிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகளின் சூழலில் பேசியபோது, மூன்றாம் உலக நாடுகளுக்கே சிறப்பான ஒரு கூட்டு லட்சியத்தை உருவாக்கிப் பேசியது போல் தோன்றியது.”

ந. முத்துமோகன்

இன்றைய இந்திய அரசியல் மிகவும் சிக்கலானது. அரசியல் வரலாற்றின் உண்மைகளைத் திரித்து எழுவதுவதில் அறிவாளிகளும் அரசியல்வாதிகளும் பத்திரிக்கையாளர்களும் ஈடுபடும் காலச் சூழல்களில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்திய விடுதலை இயக்கத்திலும் 1947 க்குப் பிறகுமான தேச உருவாக்கத்திலும் காந்தி, நேரு, அம்பேத்கர் போன்றோரின் பங்கேற்புகளைப் பற்றி பொய்களும் புனைவுகளும் பரபரப்பான அரசியல் செய்திகளாகப் புனையப்படும் நிகழ்வுகளை அடிக்கடி சந்திக்கிறோம். அச்சில் வந்து விட்டால் அல்லது திரைக் காட்சிகளில் இடம் பெற்றுவிட்டால் அவை அத்தனையும் உண்மையாகத் தான் இருக்க வேண்டும் என்ற நிலை உருவாகியுள்ளது.

குறிப்பிட்ட அவ்வகைச் சூழல்களை ஆட்சியிலிருக்கும் இந்துத்துவ சக்திகள் எப்படிப் பயன்படுத்துகின்றன என்பது குறித்ததே இந்நூல். விடுதலை இயக்கத் தலைவர்களில் முக்கியமானவரும் நான்கு முறை இந்தியப் பிரதமராக இருந்தவருமான நேரு குறித்த பொய்களும் புனைவுகளும் எவ்வாறு கட்டமைக்கப்படுகின்றன என்பதை இந்நூல் விவரிக்கிறது.

நூலின் ஆசிரியர் தோழர் மு.வீரபாண்டியன் அவர்கள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநில துணைச் செயலாளர். மென்மையான உணர்வுகளும் மிக நுட்பமான அணுகுமுறைகளும் கொண்டவர். ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் பொதுச் செயலாளர். உறுதியான போராளி. நேருவை முன்னிறுத்தி எவ்வகையான பொய்கள் புனையப்படுகின்றன, என்பதனைத் தோழர் வீரபாண்டியன் கீழ்க்கண்டவாறு வரிசைப்படுத்துகிறார்.

காந்தி, நேருவை விட காங்கிரஸ் இயக்கத்தில் அதிகச் செல்வாக்கு பெற்ற தலைவர் வல்லபாய் படேல்!

காஷ்மீர் பிரச்சினையை நேரு தவறாகக் கையாண்டார்!

வி.கே. கிருஷ்ண மேனன் ஒரு கம்யூனிஸ்ட். சீனப் போரில் இந்தியா பின்னடைந்தமைக்கு அவர் ஒரு காரணம்.

ஐ.நா சபையில் பாதுகாப்பு சபை உறுப்பினர் பதவியை நேரு சீனாவிற்கு விட்டுக் கொடுத்தது.

நேரு ஒரு நாத்திகர். இந்து மத எதிர்ப்பாளர். போலி மதச் சார்பின்மையாளர்.

நேருவின் வளர்ச்சித் திட்டங்கள் வெற்றிகரமானவை அல்ல.

இவையும் இன்னும் பலவும் நேருவின் மீது வைக்கப்படும் குற்றச்சாட்டுகள். தோழர் மு. வீரபாண்டியன் இந்நூலில் நேருவின் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளை உறுதியாக மறுக்கிறார். விடுதலைக்கான போராட்டத்திலும் சுதந்திர இந்தியாவின் உருவாக்கத்திலும் நேரு எத்தனை முக்கியமான பாத்திரம் ஏற்கிறார் என்பதை அற்புதமாக எடுத்துக் காட்டுகிறார்.

⋆ ⋆ ⋆

20 ஆம் நூற்றாண்டின் உலக அரசியல் ரஷ்யப் புரட்சியை நோக்கி மட்டுமல்ல, சீனா-இந்தியா போன்ற நாடுகளை நோக்கியும் தான் திரும்பியது.

அது தேச விடுதலைகளை நோக்கி மட்டுமல்ல, உலகம் முழுவதையும் ஏகாதிபத்திய எதிர்ப்பு என்ற புதிய அரசியலால் இடைவெளியின்றி இட்டு நிரப்பியது.

பூமிக் கண்டத்தில் முதலாளியம், சோசலிசம் என்ற இரண்டு உலகங்களைத் தாண்டி நூற்றுக் கணக்கான சிறிய பெரிய நாடுகளைக் கொண்ட மூன்றாவது உலகம் தோன்றியது. அது மூன்றாம் உலக நாடுகளின் அரசியல் தனித்துவத்தை எடுத்துக் காட்டும் தலைவர் களையும் சிந்தனையாளர்களையும் சுமந்தபடி வந்து சேர்ந்தது. அவர்களில் ஒருவர்தான் இந்த நூலின் நாயகரான பண்டித ஜவகர்லால் நேரு ஆவார்.

நேருவின் தனித்த நிலைப்பாடுகளில் ஒன்று அவரது 'ஆசியப் பார்வை' என்று சொல்ல வேண்டும். ஆசிய நாடுகளின் தொன்மை, அவற்றின் நிதானமான நவீனமயமாதல், ஆசியாவின் பண்பாட்டு ஓர்மை, சர்வ தேசிய அரசியலில் சனநாயகம், விஞ்ஞான உணர்வை விட்டொதுக்காத அனுசரிப்பு ஆகிய ஒவ்வொன்றிலும் நேரு தனது தனித்த முத்திரைகளைப் பதித்துள்ளார். இவை ஒவ்வொன்றும் இசைவு படுத்திய நிலையில் ஒன்றிணைந்து மிளிர்ந்தன.

இருபதாம் நூற்றாண்டின் இறுதி ஆண்டுகளிலிருந்து, இந்திய அரசியலில் காந்தி - நேரு - படேல் என்ற ஒரு போராட்ட வியூகம் கட்டமைக்கப்படுகிறது. இருபதாம் நூற்றாண்டின் இந்திய முற்போக்கு சனநாயக அரசியலை ஒட்டு மொத்தமாக மறுப்பதற்கு காந்தி, நேரு ஆகிய இருவரையும் மறுத்தால் போதும் என்பது அவ்வியூகத்தின் திட்டம்.

காந்தி மிக அடர்த்தியான இந்திய மரபுகளின் அர்த்தமுள்ள செழுமையான குறியீடு. நேரு இந்தியாவின் நவீனத்துவப் பாய்ச்சலைக் குறிப்பவர். காந்தி - நேரு இருவருக்கிடையில் முரண்பாடுகள் இல்லாமலில்லை. ஆயின் அவை சன்னம் சன்னமாக விவாதத்திற் குள்ளாகி முன் நகரக் கூடியவை. தமிழக அளவில், இந்திய அளவில், உலக அளவில் அந்த விவாதங்களை நடத்திச் செல்ல முடியும். அவை படைப்புத்தன்மை கொண்டவை.

காந்தியும் நேருவும் முரணா, இணைவாக்கமா? ஒருவர் பிறிதொருவரை இட்டு நிரப்புகின்றாரா? 20 ஆம் நூற்றாண்டின் இரு செம்பாதிகளை அவர்கள் 1947க்கு முந்தி, 1947க்குப் பிந்தி என இணைந்து நின்று எதிர்கொள்ளுகின்றனர். வரலாற்றின் செறிமான சக்தியை காந்தியின் அகிம்சை எடுத்துக் காட்டுகிறது எனின், சனநாயகத்தின் மாண்பினை நேரு எடுத்துக் காட்டுகிறார்.

விவசாயமும் தொழில்நுட்பமும், கல்வியும் ஆரோக்கியமும், பொதுத்துறையும் அய்ந்தாண்டுத் திட்டங்களும், நீர்த்தேக்கங்களும் நெடுங்கால்வாய்களும், ரயில், பேருந்து போக்குவரத்தும் மின் தொடர்புகளும் என நாடும் மக்களும் அங்கிங்கெனாதபடி இணைக்கப்பட்ட சரித்திரம் நேருவின் காலத்தில் நிகழ்ந்தன.

இந்தியாவில் நேருவின் செல்லப்பிள்ளை சனநாயக சோசலிசம், அவரது மற்றுமொரு சாதனை சமய பேதமற்ற மக்களின் நல்லிணக்கம்.

⋆ ⋆ ⋆

நவீன காலத்தின் தொடக்கம், புரட்சிகளின் மூதாய் பிரெஞ்சுப் புரட்சி (1789) என்று சொல்ல வேண்டும். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற இலக்குகளை பிரெஞ்சுப் புரட்சி முன்வைத்தது. முடியாட்சிகளை முடிவுக்குக் கொண்டு வந்து குடியாட்சிகளை உண்மையாகக் கொண்டு வந்தது பிரெஞ்சுப் புரட்சிதான். குடியாட்சி என்பது தான் சனநாயகம். அதுவே தனிமனித சுதந்திரம். சட்டத்தின் முன்னால் சகலரும் சமம் என்பது சனநாயகம்.

1775 ல் அமெரிக்க சுதந்திரப் போர் வெடித்தது. அன்றுவரை பிரிட்டிஷ் காலனியாக இருந்த அமெரிக்க

குடியேற்றங்கள் 1775 ல் விடுதலை அடைந்தன. மேலும் காத்திரமாக சுதந்திரம் பேசப்பட்டது. தேசிய உணர்வு புதிய எல்லைகளை எட்டியது. அமெரிக்க ஐக்கிய நாடுகள் உருவாகின.

சுமார் 90 ஆண்டுகளுக்குப் பிறகு 1861ல் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் கறுப்பின மக்களின் புரட்சி வெடித்தது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சட்டம் திருத்தி எழுதப்பட்டது. அமெரிக்கா அதிகபட்ச சுதந்திரம், சனநாயகம் பற்றிப் பேசியது.

இந்த மூன்று புரட்சிகளின் நோக்கம் சனநாயகம். சனநாயகம் புது உலகின் சட்டமாகவும் எதார்த்தமாகவும் மாறியது. கடந்த காலத்தை மாற்றி அமைப்பது சனநாயகத்தின் ஒழுங்கானது.


ஐரோப்பிய புரட்சிகளில் இன்னும் சமத்துவம் துலக்கமாகப் பேசப்படவில்லை. சமத்துவம், பொது உடைமை, சிவப்புக் குடியரசு போன்ற சொற்கள் ஒளிக்கீற்றுக்கள் போல பாய்ந்து ஒலித்தன. அமெரிக்காவில் கறுப்பின எழுச்சி (1861) தோன்றிய காலங்களில் கம்யூனிஸ்ட் அறிக்கை உருவாகி உலகின் பல மொழிகளுக்கு அது பரவவும் தொடங்கி விட்டது. சனநாயகம், சமத்துவம் ஆகிய இரண்டு இலக்குகளுமே சம அளவில் முக்கியத்துவம் பெற்றன. முதலாளியத்துவத்தை ஒழிப்பது, கடந்த காலத்தின் அனைத்து உடைமை வரலாறுகளையும் சாய்ப்பது என்ற இலக்குகள் உற்சாகமாகப் பரவி வந்தன.

சனநாயகப் புரட்சி என்ற சொல்லுக்கு ஒரு குறிப்பிடத்தக்க பொருண்மையை கறுப்பின மக்களின் புரட்சி குறித்து நின்றது.

நேரு சனநாயக சோசலிசம் என்று இந்தியச் சூழல்களில் அல்லது ஆசிய ஆப்பிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகளின் சூழலில் பேசியபோது, மூன்றாம் உலக நாடுகளுக்கே சிறப்பான ஒரு கூட்டு லட்சியத்தை உருவாக்கிப் பேசியது போல் தோன்றியது. வெறுமனே ஐரோப்பியக் கருத்தாக்கங்களை நேரு திருப்பிச் சொல்லவில்லை. அல்லது அவற்றில் இரண்டை சேர்த்துச் சொல்லுவதாகவும் இல்லை.

மாறாக, மூன்றாம் உலகின் தனித்தன்மைகளை மனதில் கொண்டு அந்நாடுகளின் பிரத்தியேகப் பண்புகளை முன்வைத்து ஒரு லட்சியம் உருவாக்கப்பட்டது போல் தோன்றுகிறது. அதுவே நேருவின் ஒரு உள்ளடங்கிய முனைப்பாகவும் தோன்றுகிறது. நேரு மூன்றாம் உலகுக்குச் சொந்தமானவர் என்ற கூடுதல் பொருண்மையை சனநாயக சோசலிசம் என்ற சொல் நமக்குத் தருவதாகத் தோன்றுகிறது.

நேரு, வியட்நாமின் தலைவர் ஹோசிமினை இந்தியாவிற்கு வரவழைத்துச் சிறப்பித்தார். பிடல் காஸ்ட்ரோவும் சேகுவாராவும் அவரது நண்பர்கள்.





**ஜவஹர்லால் நேரு**
(பொய்ப் புனைவுகளும் உண்மைகளும்)
மு.வீரபாண்டியன்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
விலை – ரூ.50,00

ஒவ்வொரு நாட்டின் விடுதலைப் போரையும் நேரு ஆதரித்தார். ஹிட்லரையோ முசோலினியையோ அவர் ஆதரித்ததில்லை. உலக நாடுகளின் யுத்தங்களை அவர் ஆதரித்ததில்லை. அணி சேரா நாடுகளின் இயக்கம் என்ற ஒன்றை உருவாக்கியவர்களில் அவரும் ஒருவர். பஞ்சசீலம் அவரது கொள்கைகளில் ஒன்றானது. போரின் வழியாக அல்ல, அமைதியின் வழியில் மூன்றாம் உலக நாடுகள் முன்னேற வேண்டும் என்பதனையே அவர் முன்வைத்துப் பேசினார்.


நேரு குறித்த ஓர் அர்த்தமுள்ள நூலை சரியான அரசியல் சூழலில் பொருத்தமான வாதங்களுடன் உருவாக்கித் தந்துள்ள தோழர் மு. வீரபாண்டியன் அவர்களை ஏராளமாகப் பாராட்ட வேண்டும். குறுகிய காலத்தில் நேருவின் பிறந்த நாளுக்காக நூலை அழகான தோற்றத்துடன் அச்சிட்டு வழங்கியுள்ள நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தாரையும் நன்றி பாராட்ட வேண்டும்.

●

# நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் புதிய வெளியீடுகள்




₹ 50/-




₹ 40/-




₹ 55/-





₹ 40/-

கட்டுரை

# கி.ரா.வின் படைப்புகளில் விவசாயமும் விவசாயிகளும்

சு. அழகேஸ்வரன்



பொதுவாக கி.ராஜ நாராயணன் படைப்புகள் ஒரு விவசாய சமூக விவரணமாகக் காட்சியளிக்கிறது அவற்றில் கரிசல் விவசாயம், வாழ்வியல் முறைகளுமே பிரதானமாக இடம் பெற்றுள்ளது. எனவே சுதந்திரத்திற்கு முன்னரும், பின்னரும் அவருடைய நாவல்கள் மற்றும் சிறுகதைகளில் விவசாயம், விவசாயிகள் மற்றும் விவசாய போராட்டங்கள் குறித்து இடம்பெற்றுள்ள பதிவுகள் இங்கே திறனாய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

சுதந்திரத்திற்கு முன்பிருந்த விவசாயிகளின் நிலை குறித்து கோபல்ல கிராமம், கோபல்ல கிராமத்து மக்கள், அந்தமான் நாயக்கர் நாவல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. கோபல்ல கிராம நாவலில் வீரபாண்டிய கட்டபொம்மன் காலத்திற்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்பு, விஜயநகரப் பேரரசு வீழ்ச்சியடைந்ததின் காரணமாக தெலுங்கு தேசத்திலிருந்து முஸ்லீம் அரசர்களுக்கு அஞ்சி தமிழகத்தில் குருமலைப் பகுதிகளின் சரிவுகளில் குடியேறிய கம்மவார் சமூகத்தின் வரலாறு சித்தரிக்கப்பட்டுள்ளது. மேலும் கிழக்கிந்திய கம்பெனியார் இந்திய மண்ணில் கால் வைத்து, ஆட்சி அதிகாரத்தில் பிடித்த காலம் வரையுள்ள ஒரு நூற்றாண்டு

வரலாற்றை புராணத் தாக்க இயல்புகளுடன், நாட்டுப்புற கதை மரபுடனும் கலந்து கூறும் படைப்பாக இந்த நாவல் திகழ்கிறது.

குறிப்பாக தெலுங்கு தேசத்திலிருந்து இடம் பெயர்ந்து குருமலைப் பகுதிகளில் தங்கி பிரம்மாண்டமான கள்ளிக்காட்டை அழித்தார்கள். பூமியைத் தோண்டும் போது கிடைத்த கோரைக்கிழங்கு, காட்டுக் கிழங்குகள், காட்டுப் பறவைகளின் முட்டைகளையும் உண்டார்கள். சோற்றுக்கற்றாழையை உரித்து தண்ணீரில் கழுவி அவற்றின் கசப்பை நீக்கியும், பறவைகள், விலங்குகளையும் வேட்டையாடி அவற்றின் மாமிசத்தையும் உண்டார்கள். மாடுகளோ, கலப்பைகளோ இல்லாத நிலையில் விளை நிலங்களை உருவாக்க மரத்தில் கலப்பை போல் செதுக்கி மாடுகள் போல் அவற்றை இழுத்தார்கள். இடப்பெயர்ச்சியின் போது உடன் கொண்டு வந்த உணவு தானியங்களில் தங்களது தேவைக்கு போக ஒதுக்கிவைத்த தானியங்களை விதைத்துள்ளார்கள்.

அதன் பிறகு ஒவ்வொரு குடும்பத்திற்கும் அவர்களது சக்திக்கு ஏற்ப எவ்வளவு முடியுமோ அவ்வளவு நிலத்தை சொந்தமாகக் கைகொண்டு பயிர்செய்ய முற்பட்டார்கள். வீடுகள் கட்ட ஆரம்பித்தார்கள். கிராமம் முறையாக வளர ஆரம்பிக்கவே குடிநீருக்காக கிணறுகளையும், கால்நடைகளுக்கான கண்மாய்களையும் தோண்டியுள்ளார்கள். தங்களிடம் இல்லாத விவசாய தொழிலாளர்களான தச்சர், கொல்லர் முதலானவர்களைக் கூட்டி வந்து தங்களது கிராமத்தில் குடியமர்த்தினார்கள். இவ்வாறாக இடம்பெயர்ந்த மக்கள் கோபல்ல கிராமத்தில் தங்கி வேட்டுவ வாழ்க்கையிலிருந்து உழவு வாழ்க்கை முறைக்கு மாறினார்கள்.

இடைப்பட்ட காலத்தில் அவர்களது பயிர்களை வெட்டுக்கிளிகள் அழித்து நாசம் செய்ததால் பஞ்சம் ஏற்பட்டதையும் அதனால் மக்கள் பட்ட அவதிகளையும் நாவலில் விளக்கப்பட்டுள்ளது. இவரது ஒட்டுமொத்த படைப்புகளில் கோபல்ல கிராமத்தில் ஏற்பட்ட மூன்று பஞ்சங்கள் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. அவ்வகையில் பார்த்தால் இந்தியாவை பிரிட்டிஷ் ராணியார் நேரடி ஆட்சி செய்ய முற்பட்ட ஆரம்பக் காலங்களில் ஏற்பட்ட பஞ்சமாகும் இது. ஆனால் பிரிட்டிஷார் இந்தப் பஞ்சத்தால் மக்களுக்கு ஏற்பட்ட துயரங்களுக்காண நிவாரணங்களை வழங்கவில்லை.

இரண்டாவது நூலான கோபல்ல கிராமத்து மக்கள் கதையின் மூலம் மற்றும் மையமாந்தர்கள் அனைவரும் விவசாயிகளே. இந்த நாவலில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக கிளர்ந்தெழுந்த விவசாயிகள் போராட்டம் குறித்து இந்தியா சுதந்திரம் பெற்ற கதையையும் விளக்குகிறது. பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக விவசாயிகள் நடத்திய போராட்டங்கள் போலோ அல்லது அதற்கு ஆதரவான இயக்கங்களோ கோபல்லபுரத்தில் நடைபெறவில்லை என்றாலும், தெலுங்கானா புன்னப்புரா, வயளார் போன்ற இடங்களில் நடைபெற்ற விவசாயப் போராட்டங்கள் நாவலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

அந்தமான் நாயக்கர் நாவலில் கொடியேற்றும் போராட்டம் குறித்தும் சுதந்திரத்திற்குப் பின்னர் நடைபெற்ற வரி விதிப்பிற்கு எதிரான போராட்டம் குறித்தும் சித்தரிக்கப்பட்டுள்ளது. 1920களில் காந்தியின் வழிகாட்டுதலில் பர்தோலி கிராமத்தில் சர்தார் வல்லபாய் பட்டேல் தலைமையில் நிலவரி கொடா இயக்கமும் அதன் ஒரு பகுதியாக கொடியேற்றும் போராட்டமும் நடைபெற்றது. நாடு முழுவதும் துவக்கப்பட்ட இப்போராட்டம் கரிசல் பகுதியிலும் நடைபெற்றது. அழகிரி என்ற சிறுவன் தடைசெய்யப்பட்ட தேசியக்கொடியை மரத்தில் ஏற்றியது. அதன் பின்னர் பக்கத்து ஊரில் நடைபெற்ற இரட்டைக் கொலை வழக்கில் அழகிரி குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டது. பின்னர் இந்தியா சுதந்திரம் அடைந்ததைத் தொடர்ந்து 10 ஆண்டுகளுக்குப் பின்னர் விடுதலையாகி கோபல்ல கிராமத்தில் வந்து மற்றுமொரு விவசாயிகள் போராட்டத்தில் பங்கேற்று கொல்லப்பட்ட கதை சொல்லப்பட்டுள்ளது.

இவ்வாறாக இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்னர் விவசாயம், விவசாயிகளின் நிலை, விவசாயப் போராட்டங்கள் குறித்து, மூன்று நாவல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆனால் சுதந்திரத்திக்குப் பின்னரான நிலை குறித்து அந்தமான் நாயக்கர் நாவலில் பிற்பகுதியில் மட்டுமே விவரிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் சிறுகதைகள் மற்றும் குறுநாவல்களில் மட்டுமே விவசாயிகளின் நிலை பதிவு செய்யப்பட்டுள்ளது. இவற்றை வெளிவந்த கால வரிசைகளின் படி நான்கு கட்டங்களாகப் பிரித்துக்கொள்ள முடியும்.

முதலாவதாக, 1958 முதல் 1969 வரை, இக்காலகட்டத்தில் எழுதப்பட்ட படைப்புகளில் கூலி விவசாயிகள், சிறு மற்றும் ஏழை விவசாயிகளின் வாழ்க்கைப் போராட்டங்களை மாயமான், கதவு, கரண்ட், குடும்பத்தில் ஒரு நபர் மற்றும் கருவேப்பிலைகள் ஆகிய சிறுகதைகளில் படம் பிடித்துக் காட்டியுள்ளார். இவற்றில் கறிவேப்பிலைகள் என்ற சிறுகதை, வாழ்நாள் முழுவதும் கூலி வேலை செய்து ஜீவனம் நடத்தி வந்த ஒரு வயதான தம்பதிகள்

பற்றியது. அந்தத் தம்பதிகள் தங்கள் வாழ்வின் இறுதியில் இயற்கைச் சீற்றத்தால் தங்களது சிறிய வீட்டை இழந்து கல் மண்டபத்தில் குடித்தனம் நடத்தியது குறித்தும், மூப்பின் காரணமாக உழைக்க முடியாமல் பிச்சை எடுக்க வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டது குறித்த சித்தரிப்புகள் நெஞ்சை உருகச் செய்கிறது.

அதேபோல், தீர்வை (நிலவரி) கட்ட முடியாமல் தங்களது வீட்டின் கதவை இழக்கும் ஏழை விவசாயி (கதவு), ஒற்றை மாட்டுடன் விவசாயம் செய்யும் விவசாயி ஒரு ஜோடி மாடு வாங்க முடியாத அவல நிலை (அதாவது கரிசல் காட்டில் ஒரு ஜோடி மாடு வைத்திருக்க வேண்டுமென்றால் குறைந்தது 20 ஏக்கர் நிலமாவது இருக்க வேண்டும். ஆனால் கதையில் வரும் தொட்டணக் கவுண்டரிடம் எட்டு ஏக்கர் நிலம் மட்டுமே இருந்தது. 'ஒரு குடும்பத்தில் ஒருவர்', விவசாயம் செய்வதற்கு மின்சாரம் வேண்டி அதிகாரிகளை அணுகி அவமானப்பட்டு, ஆவேசமுறும் விவசாயி குறித்து 'கரண்ட்' சிறுகதையில் பதிவு செய்துள்ளார்.

இரண்டாவதாக, (1975) காலகட்டத்தில், சிறு விவசாயியாக இருக்கும் ஒருவர் இதர விவசாயிகளின் நிலங்களை கொஞ்சம் கொஞ்சமாகக் கையகப்படுத்தி நில உடமையாளராக மாறியது, அதன் தொடர்ச்சியாக அவரது வாரிசுகள் பெரிய ஜின்னிங் பாக்டரியைத் தொடங்கி தொழிலதிபராக பரிணமித்தது குறித்து 'கரிசல் காட்டில் ஒரு சம்சாரி' என்ற சிறுகதையில் பதிவு செய்துள்ளார்.

மூன்றாவது காலகட்டப் படைப்புகளில் (1980 - 1984), விவசாயம் சிதிலமடைந்து வருவது குறித்தும் விவசாயிகள் சாகுபடி செய்யும் விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்காததும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் 'ஒரு செய்தி' என்ற சிறுகதை தீப்பெட்டித் தொழில் உருவானதின் காரணமாக களையெடுக்க, பருத்தி எடுக்க ஆட்கள் இல்லாமல் சாகுபடி நிலங்கள் தரிசு நிலங்களாகவும், மேய்ச்சல் நிலங்களாகவும் மாறியது குறித்தது. 'விடிவு' கதையோ பருத்தி, அவுரி, மிளகாய், வெங்காயம் போன்ற சாகுபடி பயிர்களுக்கு நியாயமான விலை கிடைக்காதது குறித்தது. இவற்றில் கரிசல் காட்டில் பருத்தி வெடித்து வரும்போது பவர்கட் உடன் வரும். இதனால் அரவை தடைபடும். எனவே வியாபாரிகள் குறைந்த விலைக்கே பருத்தியைக் கொள்முதல் செய்வார்கள். அதேபோல் சாகுபடி செய்வதற்கு இலகுவான அவுரி சாகுபடி கரிசல் காட்டில் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் ஏற்றுமதியாளர்கள் கூடிப் பேசி அவுரியை மலிவான விலைக்கு கொள்முதல் செய்து வந்தார்கள். இதனால் இவற்றிற்கு நியாயமான விலை கிடைக்கவில்லை என்ற விவரங்கள் போத்தி நாயுண்டு என்ற கதாபாத்திரத்தின் வாயிலாக சித்தரிக்கப்படுகிறது.

அவுரி கதையில் 100 ரூபாய்க்கு விற்ற அவுரி ஒரு ரூபாய்க்கு விலை போனதால் அவற்றைக் குப்பையில் போடும் விவசாயி குறித்தது. இக்கதையில் "அவுரி என்பது உள்நாட்டுத் தேவைக்கு பயன்படாதவை. பெரும்பாலும் அவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதன் விளைவாக அரசிற்கு பவுன்பவுனாக, அந்நியச் செலாவணி கிடைக்கிறது. 60 வருடமாக நடந்து வரும் இந்த அவுரிச் சாகுபடி மற்றும் ஏற்றுமதியை அரசு ஒழுங்குபடுத்த திராணியற்று உள்ளது" என்ற விமர்சனம் முன்வைக்கப்படுகிறது. அத்துடன் அரசின் இந்தப் பொறுப்பற்றத் தன்மைக்கு எதிராகப் போராடுவதற்கு விவசாயிகள் ஒன்று திரள வேண்டியதையும் பூடகமாக சுட்டுக்காட்டுகிறது. 'தாவோவைப் பார்த்து' கதையோ விவசாயிகள் சாகுபடி செய்யும் பருத்தியைக் கொள்முதல் செய்வதின் மூலம் இடைத்தரகர்களும், மில் முதலாளிகள் மற்றும் அதிகாரிகள் கூட்டு சேர்ந்துகொண்டு கொள்ளை லாபம் சம்பாதிப்பது குறித்துப் பேசுகிறது.

நான்காவது காலகட்டத்தைப் பொருத்தமட்டில் (1995), ஏற்கனவே கி.ரா. 1959இல் எழுதிய கதையான 'கதவில்' தீர்வை கட்ட முடியாத ஏழை விவசாயியின் கதவை ஜப்தி செய்யும் அதிகாரி குறித்து எழுதப்பட்டுள்ளது. ஆனால் 1995ஆம் ஆண்டு வெளிவந்த 'அந்தமான் நாயக்கர்' என்ற நாவல் இதன் நீட்சியாகவே எழுதப்பட்டுள்ளது. அதாவது 1959ஆம் ஆண்டிற்குப் பின்னர் அடுத்த பத்தாண்டுகளில் ஏறபட்ட மற்றுமொரு பஞ்சத்தால் விவசாயிகள் சந்தித்த அவலம் குறித்தது.

சுதந்திர இந்தியாவில் இரண்டாவது முறையாக பஞ்சம் ஏற்பட்டதின் காரணமாக மக்கள் தீர்வை கட்ட முடியாத நிலை ஏற்பட்டதால் அரசாங்கம் ஜப்தி நடவடிக்கைகளை மேற்கொண்டது. அதை எதிர்த்து பெரும் போராட்டங்கள் அப்பகுதியில் வெடித்தன. இந்தப் போராட்டத்தை அரசாங்கம் நசுக்கியது. இதில் அந்தமான் நாயக்கர் கொல்லப்பட்டார்.

அதாவது 60களில் சுதந்திர இந்தியாவில் ஏற்பட்ட முதலாவது பஞ்ச காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஜப்தி நடவடிக்கைகளை எதிர்த்து விவசாயிகள் போராடவில்லை. ஆனால் இரண்டாவது பஞ்சகாலத்தில் போராட்டங்கள் நடைபெற்றன. அந்த ஆண்டு கரிசல் காட்டில் மழை இல்லாததால் விளைச்சல் இன்றி கஞ்சிக்கு வழியில்லாமல் முள்ளுக் கீரையையும் அவற்றின் இலைகளையும் அவித்துத் தின்றனர். கள்ளிப்பழம், சோத்துக்கத்தாழை,

அணில்கள், காட்டு எலிகள், சாளைக்கிழங்கு மற்றும் சட்டிக் கிழங்கைத் தோண்டித் தின்றார்கள். எறும்புப் புற்றுகளைத் தோண்டி தானியங்களை எடுத்து வேகவைத்து தின்றார்கள். வசதியுள்ளவர்கள் கடலைப் புண்ணாக்கையும் எள்ளுப் புண்ணாக்கையும் வாங்கித் தின்று பசியாறினார்கள்.

அந்தக் காலத்தில் ஆங்கிலேயர்கள் நிலத்திலிருந்து வரும் விளைச்சலைக் கணக்கிட ஒரு ரூபாய் விளைச்சல், முக்கா ரூபாய் விளைச்சல், அரை ரூபாய் விளைச்சல் என்று கணக்கு வைத்திருந்தார்கள். கால் ரூபாய் விளைச்சல் என்று சொன்னால் நிலவரி ரத்து செய்யப்படும். ஆனால் அந்த ஆண்டு கால் ரூபாய் விளைச்சலுக்குக்கூட சுதந்திர இந்தியாவில் தீர்வை போடப்பட்டது. ஊர்க்கூட்டம் போட்டு அந்த ஆண்டு வரியை ரத்து செய்ய வேண்டும் என்று மாவட்ட கலெக்டருக்கு மகஜர் கொடுத்தார்கள். ஆனால் அதிகாரிகள் அதை ஏற்காமல் சம்சாரிகளின் சட்டிப் பானைகள், வீட்டுக் கதவுகளை ஜப்தி செய்தார்கள். உழவு மாடுகளை, கால்நடைகளை சிறையில் அடைத்தார்கள்.


மேலும் அந்த சமயத்தில் விவசாயத்திற்கான மின் கட்டணத்தையும், பஸ் கட்டணத்தையும் அதிகப்படுத்தியது அரசு. பெட்ரோல் விலைகள் அதிகமாகிவிட்டதால் ரசாயன உரங்களின் விலையும் அதிகரித்தன. முக்கியமாக விவசாய மின் கட்டணத்தை உயர்த்தியது, சம்சாரிகளை கோபமடையச் செய்தது. எனவே அரசை எதிர்த்துப் போராடுவதென முடிவு செய்து ஊர்தோறும் விவசாயச் சங்கங்களைக் கட்டினார்கள். கட்டம் கட்டமாக போராட்டங்களை முன்னெடுத்து இறுதியில் மறியலில் ஈடுபட்டார்கள். பின்னர் மாநிலம் தழுவிய அளவில் அப்போராட்டம் பரவியது. அரசாங்கத்திற்கும் விவசாயிகளுக்கும் இடையே ஏற்பட்ட இந்த முரண்பாடுகள் பெரும் போராட்டமாக பரிணமித்த விதத்தை நான்காவது கட்டத்தில் அந்தமான் நாயக்கர் என்ற நாவலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறாக கி.ரா.வின் விவசாயம், விவசாயிகள் குறித்த படைப்புகளை நாம் வாசிக்கும்போது கரிசல் பகுதியில் ஏற்பட்ட சமூக பொருளாதார மாற்றங்கள். விவசாயிகளின் வாழ்வில் ஏற்படுத்திய நெருக்கடிகள். அந்த நெருக்கடிகள் விவசாயிகள் மீது ஏற்படுத்திய தாக்கங்கள் குறித்தும் அவர் தொடர்ச்சியாக சிறுகதைகளிலும், நாவல்களிலும் இலக்கிய நயத்தோடு பதிவு செய்துள்ளதை நம்மால் அறிந்து கொள்ளமுடிகிறது.



14.11.21 அன்று திருநெல்வேலி மாவட்ட மைய நூலகத்தில் நடைபெற்ற 36ஆவது தேசிய புத்தகக் கண்காட்சியை பாளையங்கோட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அப்துல் வகாப் அவர்கள் திறந்துவைத்தார். இதில் மாவட்ட நூலக அலுவலர் மீனாட்சி சுந்தரம், மாவட்ட நூலக கண்காணிப்பாளர் சங்கரன், மாவட்ட மைய நூலகர் வயலட் மற்றும் கிளை மேலாளர் மகேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நியூ செஞ்சுரியின்
# விற்பனை சாதனை நூல்கள்





**புலம் பெயர்ந்தோர் இலக்கியம்**
**முனைவர் பா.ஆனந்தகுமார்**
விலை ₹ **80/-**





**எண்பதுகளில் தமிழ்க் கலாச்சாரம்**
**ராஜ் கௌதமன்**
விலை ₹ **100/-**





**லண்டனில் சிலுவைராஜ்**
**ராஜ் கௌதமன்**
விலை ₹ **145/-**




**குழந்தைகளுக்கான ஆப்பிரிக்கக் கதைகள்**
**தமிழில் : எம். பாண்டியராஜன்**
விலை ₹ **99/-**




**சே.ராமானுஜத்தின் நாடக வாழ்க்கை**
**சண்முக சர்மா ஜெயப்பிரகாஷ்**
விலை ₹ **365/-**





**தமிழால் மருத்துவக் கல்வி முடியும்**
**டாக்டர் சு.நரேந்திரன்**
விலை ₹ **165/-**




**அரசு ஆளுகை அரசியல் சமூகம்**
பேராசிரியர் **க.பழனித்துரை**
விலை ₹ 75/-





**பழந்தமிழில் எழுத்தியல் ஆய்வுகள்**
**முனைவர் சுபாஷ் சந்திரபோஸ்**
விலை ₹ **155/-**




**சொல் பண்பாட்டு அடையாளம்**
**இரா.வெங்கடேசன்**
விலை ₹ **200/-**

# நியூ செஞ்சுரியின் விற்பனை சாதனை நூல்கள்





**இலக்கியத் திறனாய்வில் சமூகவியல் அணுகுமுறை**
**துரை சீனிச்சாமி**
விலை ₹ 265/-



**சூழல்மொழி**
**த.சித்தார்த்தன்**
விலை ₹ 100/-





**பரமாத்து விதம்**
**முப்பால்மணி**
விலை ₹ 180/-





**கவிமணி வரலாற்றாய்வாளர்**
**அ.கா.பெருமாள்**
விலை ₹ 85/-





**மனிதனுக்கு மரணமில்லை**
**த. ஸ்டாலின் குணசேகரன்**
விலை ₹ 230/-




**பழந்தமிழில் சொல்லியல் சிந்தனைகள்**
முனைவர் **ச. சுபாஷ் சந்திரபோஸ்**
விலை ₹ 160/-




**சுற்றுச்சூழலும் அழகியலும்**
முனைவர் **க.குளத்தூரான்**
விலை ₹ 175/-




**வினைப் பாகுபாட்டில் எச்சங்கள்**
**முனைவர் சுபாஷ் சந்திரபோஸ்**
விலை ₹ 240/-




**செவ்விலக்கியம் சில பார்வைகள்**
**ந. இரகுதேவன்**
விலை ₹ 100/-

கட்டுரை

# வசைச் சொற்களில் ஒளிந்திருக்கும் சாதிகள்

தீ.ஹேமமாலினி

பொதுவாக நாம் சாதியச் சமூகங்களில் பார்க்கும் பொழுது சாதியை மேல்சாதி, கீழ்சாதி, தீண்டத்தகாத சாதி, கலப்புச்சாதி என பலவாறு பிரித்து வகைப்படுத்துவர். இதைத் தவிர இன்னும் நாம் சமூகத்தில் புழங்கும் சில சொற்கள் கூட சாதியோடு தொடர்பில் இருப்பதும் பலரும் அறியாமல் இருக்கலாம். பொதுவாக நம் சமூகத்தில் புழங்கும் வசைச் சொற்கள் யாவும் பெண்களை (உடலுறுப்பை) இழிவுபடுத்தல் மற்றும் ஒடுக்கப்பட்ட சாதியினரை மையப்படுத்தியே புழங்குவதைக் காணமுடியும். குறிப்பாக பெண்களை மிகவும் இழிவாகப் பேசும் தேவடியாள், வேசியர், தாசி, தேவதாசி... உள்ளிட்ட சொற்களும் உண்டு.



***சண்டாளர்:*** சண்டாளர் என்ற இச்சொல் தாழ்ந்த சாதியரைக் கூடத் தீட்டுப்படுத்துபவன் என்ற பொருளில் ஒரு குறிப்பிட்ட சாதியாரைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. சாதிகள் எல்லாவற்றிலும் தாழ்ந்த சாதியாக கருதப்படுபவர்கள் சாண்டாளர்கள். மனு இவர்களை சூத்திர ஆணுக்கும் பிராமணப் பெண்ணுக்கும் பிறந்தவர்கள் என்கிறது. மேலும் இவர்கள் ஊரின் குடியிருப்புக்கு வெளியே இருக்கவேண்டும். அவர்கள் முழுமையாக உள்ள பாத்திரங்களை பயன்படுத்தக்கூடாது. நாய்களும், கழுதைகளும் மட்டுமே இவர்களுடைய செல்வம். நோயாளிகளின் மேலாடையே அவர்களுடைய உடை. உடைந்த பானைகளே அவர்கள் உண்ணும் கலம். துருப்பிடித்த நகையே அவர்களின் அணிகலன். தொடர்ந்து இடம் விட்டு இடம் பெயர்தல் மற்றும் சமுதாய, சமயப் பொறுப்பினை உணர்ந்த எந்த மனிதனும் அவர்களோடு எத்தகைய உறவையும் வைத்துக்கொள்ளக்கூடாது.

***கேப்மாரி:*** ஆந்திராவிலிருந்து தென்னார்க்காடு மாவட்டத்தில் குடியேறி களவுத் தொழிலில் ஈடுபடுவோரைக் குறிக்கும் சொல். செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள திருவள்ளூரே இவர்களின் தலைமையிடமாக இருந்துள்ளது. எனினும் பரங்கிப்பேட்டைக்கு அருகேயுள்ள மாரியாங்குப்பத்திலும் பிரெஞ்சுப் பகுதியில் உள்ள குனிசம்பேட்டையிலும் பரவலாக வாழ்கின்றனர். தொங்க தாசரிகளைப் போலவே புகைவண்டிகள், திருவிழாக் கூட்டங்கள் ஆகிய இடங்களில் திருட்டு தொழிலில் ஈடுபடுகின்றனர். வீட்டில் தெலுங்கைப் பேசும் இவர்கள் தங்களை அழகிரி கேப்புமாரிகள் என அழைத்துக் கொள்கின்றனர். 1911இல் குற்றப் பரம்பரைச் சட்டம் அமலான போது இவர்கள் கடுமையான ஒடுக்குமுறைக்கு உள்ளானவர்கள். இன்றும் தமிழக அரசின் சீர்மரபினர் பட்டியலில் இவர்களது பெயரும் இடம் பெற்றுள்ளதைக் காணலாம்.

***லம்பாடி:*** நிலையற்று திரிந்து வித்தைகள் செய்வித்து பிழைக்கும் நாடோடிச் சமூகம். இவர்கள் லம்பாடி, பிரிஞ்சாரி, அல்லது பஞ்சாரி, பைய்பாரி, சுகாலி அல்லது சுக்காலி போன்ற பல்வேறு பெயர்களில் வழங்கப்படுகின்றனர். வடஆற்காடு மாவட்டக் கையேடு, பஞ்சாரிகள் இந்தியாவின் மேற்கு தெற்குப் பகுதிகளில் அதாவது காஷ்மீர் முதல் சென்னை மாநிலம் வரை சுமைகளை தூக்கிச் செல்லும் பணியில் ஈடுபடும் ஒரு வகுப்பார் என்கிறது. பெல்லாரி மாவட்டத்தைச் சேர்ந்த லம்பாடிகளே வடக்கேயிருந்து முதன்முதலாக தெற்கே முகலாயப் படையினரோடு கூட அவர்களுக்கான உணவுப் பொருட்களைச் சுமந்து வரும் பொறுப்பினை ஏற்று வந்தவர்கள். 1813இல் காப்டன் ஜெ.பிரிக்ஸ் இவர்களைப் பற்றி எழுதும்போது, தக்காணத்தில் கலங்கள் செல்லக் கூடிய ஆறுகளோ, சக்கரம் பூட்டிய வண்டிகள் செல்லக் கூடிய சாலைகளோ இல்லாத காரணத்தால் பஞ்சாரிகள் உடைமையான பொதி எருதுகளின் உதவியாலேயே பொருள்களை ஒரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு பொருட்களை கொண்டு செல்வது இவர்களின் பொறுப்பாகவே இருந்தது.

***மொண்டி:*** மொண்டி என்பவர்கள் தங்களைத் தங்களாகவே கல்லால் அடித்து வருத்திக் கொள்பவர்கள். மொண்டிகள் தமிழ் பேசுபவர்கள். தெலுங்கு பேசும் பந்தர்களை ஒத்தவர்கள். பந்த என்பது பிடிவாதமும் தந்திரமும் மிக்கவனைக் குறிக்கும் சொல். இந்த இரவலர்கள் சில நேரங்களில் தங்களுடன் கல்லினைக் கொண்டு செல்வார்கள். பிச்சை ஏதும் இடவில்லையாயின் கல்லினைக் கொண்டு தங்கள் மண்டையினை உடைத்துக் கொள்ளப் போவதாக அச்சுறுத்துவர்கள். நன்கு வளர்ந்தவர்களாகவும் உடல் வலிமை வாய்ந்தவர்களாகவும் காணப்படும் இவர்கள் மிகவும் குறைந்த உடையணிந்து, கிட்டத்தட்ட பிறந்த மேனியராகவே திரிவர். இவர்கள் தலைமுடி சலங்கையினைக் கட்டிக்கொள்வதால் சிக்குடையதாக நீண்டு தொங்கும். கூடவே கையில் கத்தியினை ஏந்தியபடி இடத்தோளில் ஒரு கல்லினையும் சுமந்தபடி திரிவர்.

***படவா:*** நாவிதர் சமூகத்தினரின் உட்பிரிவுகளில் ஒன்று. சாதியப் படிநிலைகளில் உயர் சாதியினராகக் கருதப்படுபவர்களின் வீடுகளுக்கு சென்று அவர்களின் சிகையை மழித்து சுத்தம் செய்பவர்களின் பெயர்.

***முட்டாள்:*** கோயில் திருவிழாவில் சப்பரம் தூக்க மட்டுமே தனியே சிலர் உண்டு. அவர்கள் கோவிலிலேயே உண்டு உறங்குவர். நகரும் சப்பரத்தை முட்டுக் கொடுத்து நிறுத்துவது மட்டுமே இவர்களது வேலை. இவர்களைத்தான் முட்டு+ஆள் = முட்டாள் எனக் கூறுவர். இன்னும் சொல்லப்போனால் கேரளத்தின் மலபார் மற்றும் திருவாங்கூர் பகுதியில் வாழும் மாரார் எனும் சேவைச் சாதியினர் (நாவிதர்) காலப்போக்கில் கோயில் பணியாளர்களாக (முரசடித்தல் போன்ற) மாறி தங்களை சாதிப் படிநிலையில் உயர்ந்த பிரிவினராக்கிக் கொண்டவர்களே முட்டாள்கள் (சப்பரம் தூக்கிகள்).

***மடையன்:*** ஏரி மற்றும் கண்மாய்களில் நீர் நிரம்பிய காலங்களில் கரை உடைவதைத் தவிர்க்க நீர் வெளியேறும் பகுதியான மடையைத் திறப்பவர்களே மடையர்கள். வெள்ளக் காலத்தில் உயிரைப் பயணம் வைத்து மடை திறக்கவென்று தனியே ஆட்கள்

இருப்பார்கள். நீர் நிலைகள் உருவாக்கப்பட்டு பாசன முறைகளை கண்காணித்து முறைப்படுத்தி ஊழியம் செய்வதற்காகவே சாதிரீதியாக சிலர் நியமிக்கப்பட்டனர். இவர்களே பிற்காலத்தில் ஒரு சாதியாக மாறினர்.

***தேவதாசி:*** இந்துக்களின் தொன்மையான நூல்களில் தாசிகள் பற்றி ஏழு வகையாகப் பாகுப்படுத்திக் கூறப்பட்டுள்ளது. ஒன்று, தாதா - தன்னைத் தானே ஒரு கோயிலுக்கு அடிமைப்படுத்திக் கொள்பவள். இரண்டு, விக்ரித - ஒரு கோயிலுக்குத் தன்னைத்தானே விற்றுக் கொள்பவள். மூன்று, பக்ரிட்ய - தன் குடும்ப நலங்கருதித் தன்னைத் தானே கோயிலுக்கு அடிமைப்படுத்திக் கொள்பவள். நான்கு, பக்தா - பக்தி காரணமாக ஒரு கோயிலினைச் சென்று சேர்பவள். ஐந்து, கிரிட - ஏமாற்றி அழைத்துச் செல்லப்பட்டுக் கோயிலுக்கு உரிமையாக்கப்பட்டவள். ஆறு, அலங்கார - தன் தொழிலில் நன்கு பயிற்சி பெற்ற ஒருத்தியை நன்கு அலங்கரித்து அரசர்களாலோ செல்வர்களாலோ கோயில்களுக்கு வழங்கப்படுபவள். ஏழு, ருத்ர கணிகை அல்லது கோபிகை - கோயிலிலிருந்து முறையாக ஊதியம் பெற்றுக் கொண்டு கோயிலில் ஆடிப் பாடுகின்றவள்.

***பரதேசி:*** 1901 சென்னை மாநிலக் கணக்கெடுப்பு அறிக்கையில் மலையாள இரவலர்களுள் ஒரு பிரிவினர் எனப் பதியப்பட்டுள்ளது. வேற்று நாட்டவர் எனப் பொருள்படுவதாக, இது கொச்சியினைச் சேர்ந்த வெள்ளை யூதர்களைக் குறிப்பதற்குரியதான தொடர்புடைய சொல்லாக சர்க்கார் கணக்குகளிலும் அரசுப் பட்டயங்களிலும் இடம் பெற்றுள்ளது.

***வேசியர்:*** பேசியர் என்ற வடசொல்லின் திரிந்த வடிவம். பரத்தையரைக் குறிக்கும் சொல். இதனையே நாட்டியக்காரியை குறிக்கவும் பயன்படுத்துவர்.

***தீண்டா:*** கணிசன்களின் ஒர் உட்பிரிவு. தீண்டாக் குருப்பு என்பது தொடாத ஆசிரியன் எனப் பொருள்படும். இது காவுதியரான அம்பட்டன் சாதியருக்குரிய மற்றொரு பெயராகும்.

***மடவன்:*** 1901இல் திருவாங்கூர் மாநிலக் கணக்கெடுப்பில் நாயர்களின் உட்பிரிவான புலிக்கப் பணிக்கர்களுக்குரிய பெயராக பதியப்பட்டுள்ளது.

***கோமணாண்டி:*** கோவணம் தவிர உடம்பில் வேறு எந்த உடையும் தரித்துக் கொள்ளாமல் திரியும் ஆண்டிகளின் உட்பிரிவினருக்கான பெயர்.

***நாதாரி:*** தமிழகத்தின் தென் மாவட்டங்களில் பன்றி மேய்க்கும் தொழிலில் ஈடுபடும் போயர்களைக் குறிப்பது.

***தாசி:*** பிராமணர் அல்லாத பணிப் பெண்ணுக்கு உரிய பெயர்.

***கோமாளி:*** ஒட்டேக்களின் புறமணக்கட்டுப்பாடு உடைய ஒரு குலத்தின் பெயர்.

***பன்னாடை:*** வேட்டுவன்களின் ஒர் உட்பிரிவு.

***சாவு:*** மாலரின் உட்பிரிவு

மொள்ளமாறி, முடிச்சவிழ்க்கி இரண்டு பெயர்களும் சிறுதொழில் புரிந்து வந்த சாதியப் பெயர்கள்தான். அதேபோல் நிலமற்றவர்களை 'புறம்போக்கு' என்று ஏசுவதையும் காணலாம். இத்தகைய வசைச் சொற்களில் சாதி, பெண்ணடிமை மட்டுமல்ல, சமயம், மொழி மற்றும் தொழில் சார்ந்த பாகுபாடுகளை சுட்டுபவையும் உண்டு. சமூகத்தில் இன்று வசைச் சொற்களாக உபயோகப்படுத்தப்படுபவை பெரும்பாலும் பெண்களை, ஒடுக்கப்பட்ட சமூகத்தினரையும், நிலமற்றவர்களையும், உடலுழைப்பு பிரிவினரை சிறுமைப்படுத்தவும் அவர்கள் மீதான ஒடுக்குமுறையை நியாயப்படுத்தவுமே உருவாக்கப்பட்டுள்ளது.

●


**புத்தகங்கள் அச்சிட**

**அற்புதத் தீர்வு**

**குறைந்த செலவு**

**அதிகபட்ச தரம்**


அதிகபட்ச தரத்தில் மிகக்குறைந்த செலவில் புத்தகங்கள் அச்சிடுவதற்கு ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் (PRINT ON DEMAND) முறை ஒரு வரப்பிரசாதமாகும். ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் முறையில் நேர்த்தியான தாள், அச்சு மற்றும் பைண்டிங்குடன் மிகக்குறைந்த விலையில், தரமாக அச்சிட்டுத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

**REAL IMPACT SOLUTIONS, CHENNAI**


தொடர்பு கொள்ள

**98412 93503**


# நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் மார்க்ஸிய வெளியீடுகள்





**கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை**
**கார்ல் மார்க்ஸ், பிரெடெரிக் எங்கெல்ஸ்**
தமிழாக்கம், அறிமுகவுரை, விளக்கக் குறிப்புகள்
எஸ்.வி.ராஜதுரை
₹ 550/-




**மார்க்ஸ் - அம்பேத்கர்**
தொடரும் உரையாடல்
D.ராஜா
N.முத்துமோகன்
₹ 290/-




**மூலதனம்**
**கார்ல் மார்க்ஸ்**
மூன்று பாகங்களும் சேர்ந்து ஐந்து புத்தகங்களும்
₹ 2000/-




**கார்ல் மார்க்ஸ் 200**
பதிப்பாசிரியர் - எஸ்.வி.ராஜதுரை
₹ 675/-

நூல் அறிமுகம்

# சைவப் புலமைப் பாரம்பரியம்

## சைவ அச்சுப்பண்பாடு - ஆவணம், ஆய்வு



வீ. அரசு

சமூகப் பொதுவெளியில் செயல்படும் நிறுவனங்கள், புதிது புதிதாக உருப்பெறும் சமூக நிகழ்வுகளைத் தமதாக்கிக் கொள்வது இயல்பு. சைவ சமயம் எனும் நிறுவனம், ஐரோப்பிய மறுமலர்ச்சியால் உருவான அச்சுக் கருவியை எவ்வாறெல்லாம் தனதாக்கிக் கொண்டது என்பது சுவையான வரலாறு. சமயங்கள் தம்முள் உள்வாங்கிக் கொண்டுள்ள நம்பிக்கைகள், சடங்குகள் மற்றும் வழிபாட்டு முறைகள் ஆகியவற்றைப் பொதுவெளியில் பரப்புரை செய்ய வேண்டியது அவற்றின் அடிப்படைத் தேவை. அதற்கு நவீன கருவிகளை எவ்வாறு பயன்படுத்துகின்றன என்ற புரிதல் அவசியம். ஒலி வாங்கிகள், இணையங்கள், அச்சு மரபுகள் ஆகிய பிறவற்றைப் பயன்படுத்தும் முறை குறித்த விவரணத் தொகுப்பும் உரையாடலும் தேவை. அச்சு மரபை அடிப்படையாகக் கொண்ட அச்சுப் பண்பாடு குறித்த ஆய்வு மற்றும் ஆய்விற்கான அடிப்படை மூலங்களின் தொகுப்பு என இரு தளங்களில் உள்ள செய்திகள் இவ்வகை ஆய்வின் அடிப்படைகளாகும். இந்தப் பின்புலத்தில், சைவமரபு சார்ந்த அச்சுப் பண்பாட்டை ஆவணப்படுத்தி, உரையாடலுக்குட்படுத்துவது பற்றி இந்நூல் முன்னிறுத்தும் சில பரிமாணங்களைப் பின்கண்டவாறு தொகுக்கலாம்.

- காலனியம் நிலைபேறு கொண்ட பத்தொன்பதாம் நூற்றாண்டில், காலனியத்தின் சமயமாக இருந்த கிறித்தவம் சார்ந்த அச்சுச் செயல்பாடுகள் விரிவாக முன்னெடுக்கப் பட்டன. கிறித்துவத்தின் இவ்வகையான நிலைபாட்டை எதிர்கொள்ள சைவ மரபு மேற்கொண்ட அச்சு மரபு சார்ந்த செயல்பாடுகள் குறித்து உரையாடுவது அவசியம். இத்தன்மை தமிழ்ச் சூழலில், அச்சுப் பண்பாடு, சமயம் சார்ந்து தொழிற்பட்டதைப் புரிந்துகொள்ள உதவும். இதனைத் தமிழகம், ஈழம் என்று வேறுபடுத்திக் காண்பது அவசியம்.
- சமயம் சார்ந்த ஆய்வுகள் என்பவை, சமயம் எனும் நிறுவனத்தின் செயல்பாடுகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டுள்ளன. மாறாக சமய மரபில் நிகழும் செயல்களை சமூக வரலாறு, பண்பாட்டு மானிடவியல் ஆகிய பிற துறைகள் சார்ந்து ஆய்வு செய்வதும் அவசியம்.

பக்தியின் அடிப்படைகளான நம்பிக்கை, சடங்கு, வழிபாடு ஆகியவை சமயம் சார்ந்த ஆய்வுகளாக நிகழ்த்தப்படுகின்றன. இவ்வாய்வுகளும் அகநிலை (Subjective) சார்ந்தே அமைகின்றன. புறநிலை (Objective) சார்ந்த ஆய்வுகள் மிகக் குறைவாகும். இந்நூல் சைவம் எனும் நிறுவனம் தனது இருப்பை, அச்சு எனும் பௌதீகக் கருவி சார்ந்து நிகழ்த்தும் முறையியலைப் பதிவு செய்வதைக் காண்கிறோம். இசை மரபு, கட்டிடக்கலை மரபு, காண்பிய மரபுகள் ஆகிய பலவற்றிலும் சமயம் சார்ந்து நிகழும் செயல்களைப் பௌதீக மரபு சார்ந்த தர்க்க வரலாற்று முறைமைகளில் புரிந்து கொள்வது அவசியம். இதில் இவ்வாய்வு அச்சு மரபு சார்ந்த அச்சுப் பண்பாட்டை பௌதீக புறநிலை மரபாக, சைவம் சார்ந்தவற்றை உரையாடலுக்கு உட்படுத்துகிறது.

- சைவக் கருத்துப் பரப்புரை செய்வதற்கு அச்சு மரபுகள் உள் வாங்கப்படுகின்றன. இவ்வாறு உள்வாங்கும்போது ஓலை மரபில் இருந்த பல்வேறு கூறுகள், அச்சு மரபிற்குள்ளும் தொடர்கின்றதா? அல்லது நவீன வசதி கருதி புதிய வடிவங்கள் உருவாக்கப்படுகின்றனவா? என்ற உரையாடல் அவசியம். அந்த வகையில் எப்போதும் பிரதிகளை தன்னோடு வைத்திருத்தல், மனனம் செய்ய எளிதாகப் பயன்படுத்தல், புனிதமாகக் கட்டமைக்கத் தேவைப்படும் வடிவங்கள், அச்சுருக்கள் மற்றும் தாள் பயன்படுத்துதலில் மேற்கொள்ளப்படும் முறைமைகள் ஆகிய பிற குறித்தும் அறிவது அவசியமாகும். இந்நூல் அந்த நோக்கில் மிக விரிவான தரவுகளை முன்னிறுத்தி ஆய்வு செய்திருப்பதைக் காணலாம்.

- மேல் கணக்கு, கீழ்க்கணக்கு, திருமுறைகள், பிரபந்தங்கள், சாத்திரங்கள், திரட்டுகள் எனும் வளமான தொகுப்பு மரபுகள் தமிழில் செயல்பட்டு வந்திருப்பதைக் காண்கிறோம். சைவம் எனும் நிறுவனம், அச்சு சார்ந்து தமது பரப்புரையை மேற்கொள்ளும் போது பல்வேறு தொகுப்பு மரபுகளையும் உள்வாங்கிக் கொள்கிறது. அவை பெரும்பாலும் திரட்டுக்களாக அமைகின்றன. சைவ அச்சுப் பண்பாட்டில் மேற்குறித்த தன்மைகள் எவ்வாறு தொழிற்பட்டுள்ளன என்பதை இந்நூல் பேசுகிறது. இத்தன்மை வெவ்வேறு சமயங்களில் தொழிற் பட்டுள்ளதை / தொழிற்படுவதை ஒப்பீட்டு நோக்கில் பதிவு செய்வது அவசியம். இவ்வகையில் சைவ மரபு மேற்கொண்ட நவீன தொகுப்பு மரபுகள் அச்சுவழி நடைமுறைப் படுத்தப்பட்ட பல்வேறு கூறுகளை இந்நூல் ஆவணப்படுத்தியுள்ளது.

- கி.பி. பதினான்காம் நூற்றாண்டுக்குப் பின் சமய நிறுவனங்களாக ‘மடம்’ எனும் அமைப்புகள் உருவாயின. இவை நவீன வளர்ச்சிகளை தமது நிறுவனம் சார்ந்த செயல்களுக்கு எவ்வாறு உள்வாங்கின? என்ற உரையாடல் அவசியம். அவ்வகையில் தமிழில் உருவான சைவ மடங்கள், அச்சு சார்ந்து எவ்வாறு செயல்பட்டன என்பது தொடர்பான விரிவான விவரணங்கள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன (இரண்டாம் பகுதி). இதன்மூலம் மடங்கள் நிகழ்த்திய சைவ அச்சுப் பண்பாட்டு வரலாற்றைப் புரிந்து கொள்ள முடிகிறது.

- அச்சு மரபு உருவான பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே அச்சிடப்பட்டவற்றைப் பட்டியலாக உருவாக்கிடும் பண்பு உருவானது. சைவ மரபு சார்ந்து உருவான நூல்களின் அரிய பதிவாக இந்நூல் செய்துள்ள அட்டவணைப் படுத்தம் (cataloguing) அமைந்துள்ளது. இதில் நம்பகத் தன்மை வலுவாக இருப்பதை அறிய முடிகிறது. இவ்வாறு அமைந்த அச்சுத் தரவுகள், இந்நூல் உருவாக்கத்திற்கு அடிப்படைகளாக அமைந்திருப்பதைக் காண்கிறோம்.

●●●

காலனியம், கிறித்தவ சமயத்தைப் பரப்பும் நோக்கில் செயல்பட்டது. பதினாறாம் நூற்றாண்டு முதல் சமயப் பரப்புரை செய்து, கிறித்தவ சமயத்தை ஆசிய நாடுகளில் நிலைபேறு கொள்ளச் செய்வதற்கு தொண்டூழியர்கள் (Missionaries) பலர் வந்தனர். அவர்களைத் தொடர்ந்து, வணிக நோக்கில் ஐரோப்பியர் வந்தனர். அவர்களது சமயம் கிறித்தவம். வணிகர்கள் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய பின் தொண்டூழியர்கள் சமயப் பரப்புரை செய்வது இலகுவாயிற்று. இதன்மூலம் சைவத்திற்கும் கிறித்துவத்திற்குமான முரண் பல்பரிமாணங்களில் செயல்பட்டது. இதனைக் கீழ்க்காணும் குறிப்பு உறுதிப் படுத்துகிறது.

*“அசற் சமயங்களாகிய கிறித்தவர்கள் இக்காலத்திலே நமது சைவ சமயிகளைத் தம்மதத்திற்குப் புகுவிக்க முயன்று கோட்டங்கள்தோறும் பள்ளிக் கூடங்களைத் தாபித்துத் தம்முடைய துன்மார்க்க நூலாகிய விவிலிய நூலையே சிறுவர்களுக்குப் பெரும்பாலும் கற்பித்துச், சிவ நிந்தை, சிவ சாத்திர நிந்தை, திருநீறணியாமை, எச்சிற் கலப்பு முதலிய துராசாரங்களையே அவர்களுக்குப் பயிற்றலானும், அவர்க்கும் பிறர்க்கும் அடிக்கடி துர்ப்போதனைச் செய்து திரிதலானும், அநியாயமாகிய தூஷணங்களைப் பொதிந்த சிறுபுத்தகங்களை வெளிப்படுத்தலானும், பிறவற்றானும் பெருங்கேடு செய்வார் ஆயினார்கள்.”*

*(தி. செல்வ மனோகரன் (பதி), சிவசங்கர பண்டிதம். கிறிஸ்துமத கண்டனம்: 2016:141.)*

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த, நாவலரின் நெருங்கிய நண்பரான சிவ சங்கர பண்டிதரின் மேல்காணும் குறிப்பில், பள்ளிக்கூடம் திறக்கப்படுதல், சிறு புத்தகங்கள் அச்சிடுதல் எனும் இரு குறிப்புகள் முக்கியமானவை. இவ்விரு பணிகள் அச்சுப் பண்பாட்டோடு நேரடித் தொடர்புடையவை. இவ்வகையில் சமயம் சார்ந்த உரையாடல்களில் அச்சு நூல்கள் பெறும் இடத்தை அறிய முடிகிறது. இந்நூலில் காணக் கிடக்கும் கீழ்க்கண்ட கண்டன நூல்கள் சைவர்களால் அச்சிடப்பட்டவை. கண்டன நூல் சார்ந்த அச்சுப் பண்பாடு பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்காலம் தொடங்கி இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை செயல்பட்டதைக் காண்கிறோம். இதனை உறுதிப்படுத்த இவ்வாய்வு உதவுகிறது. இந்நூலில் பதிவாகியுள்ள கண்டன நூல்கள் வருமாறு:

சைவ தூஷண பரிகாரம் *(1884)*, சைவ பூஷண சந்திரிகா *(1900)*, பூதிருந்திராக்க தூஷண கண்டநம் *(1901)*, புத்த மத கண்டனம் *(1903)*, உச்சிர தண்டமும் தாந்திரிக துண்ட கண்ட கண்டனமும் *(1910)*, சிவாகம தூஷண பரிஹாரம் *(1911)*, தூஷணா நாவுக்கோர் சூட்டுக்கோல் *(1918)*, சைவ பூஷண சந்திரிகை *(1929)*, தீண்டாதார் ஆலயப் பிரவேச நிக்ரஹம் (தடை) *(1932)* ஆகியவை சைவத்திற்கு எதிராக எழுதப்பட்டவைகளை மறுப்பதற்காக எழுதப்பட்ட கண்டன நூல்கள். இந்நூல்களை நா. கதிரைவேற் பிள்ளை மற்றும் செந்திநாதையர் ஆகியோர் பெரும்பகுதி எழுதினர். இவ்வகையில் சமய முரண்கள் அச்சுவழி வெளிப்பட்டதைக் காண முடிகிறது. ஆறுமுக நாவலர் *(1823-1879)* காலம் முதல் இவ்வகையான நிகழ்வுகள் தொடர்ந்து நிகழ்ந்தன. இந்நிகழ்வு குறித்த சான்றாதாரங்களை அறியும் வகையில் இந்நூல் அமைகிறது. இவ்வகையில் சைவ சமய மரபு சார்ந்த அச்சுப் பண்பாட்டில் எவ்வகையான அச்சு நிகழ்வுகள் நடந்தேறின என்பதற்கான எடுத்துக்காட்டுகள் மேல்குறித்த கண்டன நூல்கள். இவ்வகையில் பல்வேறு பரிமாணங்களில் சைவ அச்சு மரபு செயல்பட்டதைக் காணலாம்.

●●●

சமயங்கள் குறித்த ஆய்வு என்பது பக்தனின் உணர்ச்சி சார்ந்து, அச்சமயத்தில் உள்ள பல்வேறு பிரதிகளைப் பற்றிப் பேசுவதாகவே அமைகிறது. சமய மரபு சார்ந்த நம்பிக்கைகள், சடங்குகள் மற்றும் வழிபாட்டு முறைகளை சமயப் பிரதிகள் எவ்வாறு வெளிப்படுத்துகின்றன என்ற உரையாடல் ஒருபுறம்; பிறிதொருபுறம் இவற்றை எவ்வாறு நடைமுறை வாழ்க்கையில் நிகழ்த்துவது என்பது குறித்த விவரணங்கள். இத்தன்மைகளே சமய ஆய்வில் பெரும்பகுதியாக உள்ளன. மாறாக இச்சமயமரபு வரலாற்றுப்போக்கில் உருப்பெற்றமை, இச்சமய நூல் உருவாக்க முறைகள் ஆகியவை தொடர்பான உரையாடல்கள் மிகுதியாக நிகழவில்லை. சைவ அறிவுப் பாரம்பரியம் குறித்துப் பேரா.கா. சிவத்தம்பி அவர்களின் பதிவு பின்வருமாறு.

“திராவிட இனவுணர்வு, தமிழக வரலாற்றுத் தொன்மையுணர்வு ஆகியன காரணமாக வளர்ந்த அறிவியக்கம் தமிழர்க்கும் பாரம்பரிய இந்து மதத்திற்குமுள்ள உறவினை எடுத்து விளக்க முனைந்தபொழுது, தமிழகத்து இந்து மதப் பாரம்பரியம் ஆரிய பிராமண வழிவரும் வைதீக நெறிப்பட்டது அல்லவென்றும் அது தமிழர்க்கே உரித்தான தனிமத நெறியொன்றினைச் சார்ந்தது என்றும் அந்த மதச் சிந்தனை நெறியைச் சைவ சித்தாந்தத்தில் காணலாம் என்று வற்புறுத்திற்று. தமிழ், தமிழ்நாடு தனித்துவம் பற்றிய அறிவு வாதத்திற்குச் சைவ சித்தாந்தம் மிக முக்கியமான பண்பாட்டு அம்சமாக அமைந்தது.” *(தனித் தமிழ் இயக்கத்தின் அரசியற் பின்னணி: 1979, 34)*

சமய மரபு என்பது ஒரு குறிப்பிட்ட தேசிய இனத்தின் அடையாளமாக சில வேளைகளில் அமைவதைக் காண்கிறோம். அவ்வகையான மரபை கண்டறிவதற்கு, அப்பிரதி தொடர்பான ‘வழிபாட்டுத் தன்மை சார்ந்த அணுகுமுறை’ மட்டும் போதாது; மாறாக அப்பிரதி, நவீன வளர்ச்சிகளை உள்வாங்கி, எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகிறது என்பது குறித்த உரையாடலும் அவசியம். இந்நூல் அப்பின்புலத்தில் பதிப்பிக்கப்படும் முறைமைகள் குறித்தும் பேசுகிறது. அச்சுப் பண்பாட்டு மரபில் பதிப்பு என்பது முதன்மையான கூறாகும். அதனை பின்வருமாறு இவ்வாய்வு பதிவு செய்கிறது.

சுத்தப் பாடப் பதிப்பு, பொருண்மைத் தொடர்பான தரவுகளுடன் உருவான பதிப்பு, அச்சு வடிவப் பதிப்பு, எளிய பதிப்பு, உண்மை ஞான விளக்க உரைப் பதிப்பு, குறியீட்டுப் பதிப்பு, விரிவுரைப் பதிப்பு, சஞ் சிகைப் பதிப்பு, அகராதிப் பதிப்பு, தல யாத்திரைப் பதிப்பு, விழா மற்றும் குறைந்த விலைப்பதிப்பு என பதினோரு வகையான வெளியீட்டு முறைகளை அறிய முடிகிறது. இம்முறைமைகள், சைவ சமயம் எனும் நிறுவனத்தின் அடையாளமாக அமையும். பிரதிகளை எவ்வாறு அச்சுப் பண்பாடு எதிர் கொண்டது என்பதை உணர்த்துகிறது. இதில் காணும் ஒவ்வொரு முறையும் ஒரு வகையான அறிவுச் செயல்பாடாக அமைகிறது. சைவப் பாரம்பரியத்தின் அறிவு மரபை புரிந்து கொள்ள இவ்வகைச் செயல்கள் உதவுகின்றன. இவ்வாறு இப்பிரதிகளை அணுகும் போது, அவை பல்பரிமாணங்களைக் கொண்டுள்ளதைக் காணலாம்.

●●●

சமயம் என்பது கணப்பொழுதும் பக்தனின் உணர்வு நிலையோடு இணைந்திருப்பது ஆகும். தான் வேறு - தான் சார்ந்து இருக்கும் சமயம் வேறு என்று தனித்துப் பார்க்கும் மரபு பக்தர்களுக்கு இல்லை. இந்தப் பின்புலத்தில் தங்களின் சமயம் சார்ந்த பிரதிகளை எப்போதும் தன்னுடன் எடுத்துச் செல்வதை விரும்புகின்றனர். சமயம் சார்ந்த பாடல்களை மனனம் செய்வதும் சதா அவற்றை முணுமுணுப்பதும், சிலவேளை வாய்விட்டுப் பாடுவதும் உண்டு. இவ்வகையான தன்மைகளை அச்சு வழி மரபில் கைக்கொள்வதற்கென அச்சு வடிவத்தில் பல்வேறு பிரதிகளை உருவாக்குகிறார்கள். இவ்வகை மரபு கிறித்தவம் பைபிள் பிரதியை உருவாக்கும் முறை, இஸ்லாம் குர்ரான் பிரதியை உருவாக்கும் முறை ஆகியவற்றின் செல்வாக்கிலிருந்து வருவதாகும். பைபிள் கருத்துக்களைப் பரப்ப பல்வேறு துண்டுப் பிரசுரங்களையும், சிறு குறு நூல்களையும் அச்சிட்டு வழங்கி வருகின்றனர். இதற்கென உலகம் தழுவிய அமைப்புகளை பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே, அச்சு வெகுவாகப் புழக்கத்திற்கு வந்த போதே உருவாக்கினர். இதனைப் பைபிள் துண்டுப் பிரசுரக் கழகம் *(Bible Tract Society)* என அழைப்பர். சென்னை நகரில் செயல்பட்ட அமைப்பு 'சென்னைக் கிறித்தவ துண்டுப்பிரசுரக் கழகம் *(Madras Christian Tract Society)* ஆகும். இந்த முறையில் சைவ சமயத்தினரும் கையடக்கப் பதிப்புகள், பையடக்கப் பதிப்புகள், சிறு வெளியீடுகள் ஆகியவற்றை வெளியிட்டமை தொடர்பான ஆவணப்படுத்தும் இந்நூலில் மேற்கொள்ளப்பட்டிருப்பதைக் காண்கிறோம். இதனை வெளியிடும் அமைப்பை இந்து துண்டறிக்கை வெளியிடும் கழகம் *(Hindu Tract Society)* என்று அழைத்துக் கொண்டனர்.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்டுள்ள கையடக்கப் பதிப்பு ஒன்றில் *(1940)*, *245* சிறு நூல்களின் பட்டியல் உள்ளதையும் அதில் நீதி கூறும் அட்டைகள், திருக்குறள் நீதி கூறும் அட்டைகள், திருவுருவப் படங்கள், சமயப் பொன்மொழிகள் இடம் பெற்றிருப்பதை இந்நூல் கவனப்படுத்தியுள்ளது. *(பார்க்க: இந்நூல் ப. 221-222)* இவ்வகையில், சைவம் அச்சுப் பண்பாடு, நவீன வடிவங்களையும் உள்வாங்கிக் கொண்டதை அறிய முடிகிறது. இம்மரபுகள் இன்றைக்கும் சிறிய அளவில் தொடரவே செய்கின்றன. சமயம் சார்ந்த செயல்பாட்டில் சமயப் பிரதிகள் எந்தெந்த முறைகளில் வெளிப்படுத்தப்பட்டன என்பதைப் புரிந்து கொள்ளமுடிகிறது.

தமிழின் செவ்விலக்கியத் தொகுப்பு மரபு, அற இலக்கியத் தொகுப்பு மரபு ஆகியவை வளமானவை. அவற்றில் செயல்பட்டுள்ள புலமை சார்ந்த வினைப்பாடுகள் பெரிதும் வியந்து பேசத்தக்கவை. இம்மரபின் தொடர்ச்சியாகப் பக்தி இலக்கியத் தொகுப்பு மரபும் செயல்பட்டிருப்பதைக் காண்கிறோம். சைவம் இவ்வகையான செயல்பாட்டில் வளமாகவே தொழிற் பட்டிருப்பதைக் காண்கிறோம். பாடல்கள் தோத்திர மரபாகி, அவை பன்னிரு திருமுறைகளாக வடிவம் பெற்றுள்ளன. இதன் வழி உருப்பெறும் சாத்திரங்கள் - மெய்கண்ட சாத்திரங்களாக வடிவம் பெற்றுள்ளன. செவ்விலக்கியம் மற்றும் அற இலக்கியம் சார்ந்த தொகுப்பு மரபுகளிலிருந்து சைவத் தொகுப்பு மரபு கால வளர்ச்சியோடு வளர்ந்திருப்பதைக் காணமுடிகிறது.

பன்னிரு திருமுறை, புராண நூல்கள், பிரபந்த வகைமை நூல்கள், திரட்டுகள் என்ற வகையில் அமைந்துள்ள சைவத் தொகுப்பு மரபு, நிறுவனமாகச் செயல்பட்ட சைவத்தின் பல்பரிமாணங்களை அறிந்து கொள்ள உதவுகிறது. தமிழகத்தில் செயல்பட்ட வேறு எந்த சமய அமைப்புகளும் மேற்கொள்ளாத முறையியலை சைவம் மேற்கொண்டிருப்பதைக் காண்கிறோம். இதன்மூலம் நடைமுறைச் செயல்பாட்டிற்கு உதவும் வகையில் சைவப் பிரதிகளை எந்தெந்த பாங்கில் தொகுத்து அச்சிடுவது என்பதை சைவம் வளமாகச் செய்துள்ளது. இதனை இந்நூல் கீழ்க்காணும் வகையில் பதிவு செய்துள்ளது. "சைவ சமயத்தைக் கடைபிடிக்கின்றவர்கள் என்ன செய்யணும், செய்யக் கூடாது என்பதைக் கற்றுத் தரக் கூடியவை இந்நூல்கள். கிறித்தவம் வளர்ந்து கொண்டிருந்த கால கட்டத்தில் சைவ சமயத்தை நிலை நிறுத்துவதற்கான பணிகள் இத்தொகுப்பில் உள்ள நூல்கள் மூலமாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனைச் சிவாலய தரிசன விதி, கண்டன நூல்கள், சைவ ஒழுக்கங்கள், சைவ உணவு, வினா - விடை, சைவ சங்கங்கள் போன்ற பொருண்மை கொண்ட நூல்களைத் தொகுத்து நோக்கும் போது சைவ சமயத்திற்கான இயங்கியலைப் புரிந்து கொள்ள முடியும்". *(ப.286-87)*.

சைவ சமயம் தொடர்பான அச்சுப் பண்பாட்டை கவனத்தில் கொள்வது அவசியம். கிறித்தவம் எனும் சக்தி நவீன வளர்ச்சியோடு, சைவம் புழக்கத்தில் இருக்கும் மண்ணில் கால் கொள்ளத் திட்டமிடும்போது, அச்சமயம் அச்சுப் பண்பாடு சார்ந்து செயல்பட்ட அனைத்து முறைகளையும் சைவமும் கைக்கொள்ளத் தொடங்கியது. தமிழின் வளமான தொல் மரபை, குறிப்பாகத் தொகுப்பு மரபை, அச்சு வழி எவ்வாறெல்லாம் முன்னெடுப்பது என்பதை சைவம் திட்டமிட்ட முறைசார்ந்து நடைமுறைப்படுத்தியிருப்பதைக் காண்கிறோம்.

இச் செயல்பாடுகள் ஈழத்தில்தான், தமிழ்நாட்டை விட வீரியமாக நடைமுறைப் படுத்தப்பட்டதாகக் கருதலாம்.

●●●

நிலவுடைமைப் பண்பாட்டோடு நேரடித் தொடர்பு உடையவர்களாக வேளாளர் சமூகத்தினர் இருந்தனர். நிலவுடைமையாளர்களான இவர்களிடம் தான் சைவ சமயம் கால்கொண்டிருந்தது. இவர்கள் சைவ சமயத்தை வலுவான நிறுவனமாகக் கட்டமைக்க மடங்களை ஏற்படுத்தினர். இம்மடங்கள் கோயில் நிர்வாகங்களைத் தனதாக்கிக் கொண்டன. வளமான செல்வம் இதன் மூலம் மடங்களுக்குக் கிட்டியது. தமிழகம் முழுவதும் உருவாகிய சைவ மடங்கள் இவ்வகையில் சைவ வளர்ச்சிக்குப் பல்வேறு வகைகளில் உதவின. இதில் இவர்கள் மேற்கொண்ட அச்சுச் செயல்பாடு முக்கியமானது.

சைவ மடங்கள், ஓலைச் சுவடிகளைத் தொகுத்துப் பாதுகாத்தன. 'பண்டாரம்' என்று அழைக்கப்படும் ஓலைச்சுவடி நூலகத்தை மடங்கள் உருவாக்கின. இந்நூலகப் பண்பு இல்லையேல் நமது சுவடிகளின் அழிவு மிகுதிப்பட்டிருக்கும். தனி நபர்களை விட இவ்வகையான நிறுவனம் சார்ந்த ஓலைச் சுவடிகளே நமக்குப் பல தமிழ்நூல்களை அச்சிட உதவியது. திருவாவடுதுறை ஆதீனம் சேகரித்த சுவடிகளின் எண்ணிக்கை அதிகம். தருமபுரம் ஆதீனமும் இவ்வகையான சேகரிப்பை செய்தது. இம் மடங்களில் சேகரிக்கப்பட்ட சைவ ஓலைப் பிரதிகளால் தான், இன்று வளமான சைவப் பிரதிகள் அச்சு வடிவில் நமக்குக் கிடைத்தன. பல்வேறு மடங்களில் கிடைத்த சுவடிகளை ஒப்பிட்டு தரமான பதிப்பை உருவாக்க முடிந்தது. இவ்வகையில் சைவ அச்சுப் பண்பாட்டு வரலாற்றில் சைவ மடங்களுக்கான பங்களிப்பு முதன்மையானது. இது குறித்து தனியாக விரித்து எழுதும் தேவையுண்டு.

●●●

தமிழ் அச்சுப் பண்பாட்டை வரன்முறையாக அறிவதற்குத் தமிழில் அச்சிடப்பட்ட நூல்களின் அட்டவணை மற்றும் ஓலைச் சுவடிகளின் அட்டவணை ஆகியவை அடிப்படைத் தரவுகளாக அமைகின்றன. இவ்வகையான பட்டியல்களின் பட்டியல் ஒன்றை பேரா. கமில் சுவலபில் கொடுத்துள்ளார். (Tamil Literature Leiden / Kölh. 1975: 18-20) இதில் 22 பட்டியல் நூல்கள் தொடர்பான குறிப்புகள் உள்ளன. இந்த நூலில் உருவாக்கப்பட்டுள்ள பட்டியல், நூலின் இரண்டாம் பகுதியாக அமைந்துள்ளது. பன்னிரு திருமுறை 85, சைவ சித்தாந்த நூல்கள் 113, புராண நூல்கள் 170, பிரபந்த வகைமை நூல்கள் 73, திரட்டுகள் 43, பிற சைவ நூல்கள் 137, கையடக்கப் பதிப்புகள் 165, பையடக்கப் பதிப்புகள் 39, சிறு வெளியீடுகள் 155 ஆகியவை பட்டியலில் இடம் பெற்றுள்ளவை. மொத்தம் 980 சைவ நூல்கள் குறித்த அனைத்து விவரணங்களும் பட்டியலாக உருவாக்கப்பட்டுள்ளன.

பதினாறாம் நூற்றாண்டு தொடக்கம் பதினெட்டாம் நூற்றாண்டு வரை தமிழில் அச்சிடப்பட்ட நூல்களை அறிய, அச்சிட்ட தமிழ் நூல் பட்டியல்களே உதவுகின்றன. இதன் மூலம் தமிழ் அச்சுப் பண்பாட்டு வரலாற்றை அறிய முடியும். (பார்க்க. வீ. அரசு. தமிழ் அச்சுப் பண்பாட்டு வரலாறு. 'உங்கள் நூலகம்' இதழ் தொடர் கட்டுரைகள் 2010,1-10) இந்த வகையில் 1800 - 1950 ஆண்டுகளில் வெளிவந்த சைவ நூல்கள் (980) அனைத்தையும் இந்நூல் அட்டவணைப்படுத்தியுள்ளது. இதன் மூலம் சைவ அச்சுப் பண்பாடு குறித்த அடிப்படையான தரவுகள் இந்நூலில் ஆவணமாக்கப்பட்டுள்ளன. இந்த ஆவணம் சார்ந்தே சைவ அச்சுப் பண்பாட்டு வரலாற்றை இந்நூல் பேசுகிறது. இத்தன்மை இந்நூலின் விதந்து பேசத்தக்க ஒன்று. சைவ அச்சுப் பண்பாடு, துல்லியமான தரவுகள் வழி ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை இந்நூலின் பெறுமதியாக அமைகிறது.

●●●

தமிழகத்தில் உள்ள பல்வேறு சைவ மடங்கள் (குறிப்பாக திருவாவடுதுறை மடம்), மறைமலை அடிகள் நூலகம், ரோஜா முத்தையா நூலகம், பிரெஞ்சிந்திய ஆய்வு நூலகம் ஆகியவற்றில் பல ஆண்டுகள் தொடர்ந்து உழைத்து, அதன் வழிப் பெறப்பட்ட தரவுகளை ஆவணப்படுத்தி, தமது அச்சுப் பண்பாடு குறித்த முனைவர் பட்ட ஆய்வை திரு. கு. கலைவாணன் முடித்தார். அந்த ஆய்வு இப்போது நூல் வடிவம் பெறுகிறது. சைவ புலமைப் பாரம்பரியம் குறித்த அரிய ஆவணமாக இந்நூல் அமைகிறது. வரலாற்றில் இவ்வாய்வு பேசப்படும். தமிழ்ப் பண்பாட்டு வரலாறு, தமிழ்ச் சமூக வரலாறு, தமிழக சமயங்களின் வரலாறு, தமிழ்த் தத்துவ மரபுகளின் வரலாறு எனப் பல்வேறு துறை சார்ந்த தேடலில் ஈடுபடுவோருக்கு இந்நூல் அரிய ஆவணமாக அமையும். கலைவாணனின் உழைப்பு முறைமையை நான் அறிவேன். அவரது உழைப்பு வளமாகவே வெளிப்பட்டுள்ளது. தமிழ்ச் சைவப் புலமை மரபை எம்போன்றோர் அறிவதற்கு கலைவாணன் நூல் அடிப்படையாக அமைகிறது.

●


# நியூ செஞ்சுரியின்
# விற்பனை சாதனைத் தொகுப்பு நூல்கள்

## மார்க்ஸ்-எங்கெல்ஸ்

**தேர்வுநூல்கள் மற்றும் வாழ்க்கை வரலாறுகள்**

**20 தொகுதிகள்**

பதிப்பாசிரியர்: **ந.முத்துமோகன்**




**₹ 5000/-**


## நான் சொன்னால் உனக்கு ஏன் கோபம் வர வேண்டும்?

மொழி, கலை, பண்பாடு, இலக்கியம், தத்துவம் பற்றிய தொகுப்பு

**பெரியார் ஈ.வெ.ராமசாமி**

**5 தொகுதிகள்**

தொகுப்பாசிரியர்: **பசு.கவுதமன்**




**₹ 4800/-**

### நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050

☎ 044-26251968, 26258410, 48601884 | Email: info@ncbh.in | www.ncbhpublisher.in

**கிளைகள்**

அம்பத்தூர் 044 - 2635 9906, ஸ்பென்ஸர் பிளாசா 044-28490027, மதுரை 0452 - 2344106, 4374106, திருநெல்வேலி 0462 - 2323990, 4210990, திண்டுக்கல் 0451-2432172, கோயம்புத்தூர் 0422 2380554, சேலம் 0427-2450817, ஈரோடு 0424-2256667, கிருஷ்ணகிரி 04343-234387, ஓசூர் 04344 - 245726, ஊட்டி 0423 - 2441743 திருச்சி 0431 - 2700885, தஞ்சாவூர் 04362-231371, புதுக்கோட்டை 04322-227773, விழுப்புரம் 04146-227800, பாண்டிச்சேரி 0413 2280101, வேலூர் 0416-2234495, நாகர்கோவில் 04652 -234990.

கட்டுரை

# வெண்கல் அமிர்தம்



ஆ.கார்த்திகேயன்

**1)சமஸ்கிருத சிறப்பொலி ருகரம்:**

சமஸ்கிருத மொழியில் ருகரம் என்றொரு உயிரெழுத்து உள்ளது.தமிழில் அத்தகைய ஓர் ஒலி இல்லை. அதனை ஆங்கில *(R)* என்ற எழுத்தால் இங்கு குறிப்பிடுவோம். இவ்வொலியை ரிஷப,ரிஷி,ரிது,ரிண,மிருது அமிர்த,மிருக,ஹ்ருதய போன்ற சமஸ்கிருத சொற்களில் காணலாம். இதற்கு நெருக்கமாக இருக்கும் தமிழ் ஒலி ரகரமாகும்.அதனால் சமஸ்கிருத உயிர் *(R)* வரும் இடங்களில் தமிழ் ரகரம் இட்டு எழுதுகிறோம். ஆனால் பழந்தமிழில் 'இழ்' என்றோ உகரமாகவோ, ழகரமாகவோ, 'இரு' என்றோ தமிழாக்கப்பட்டது.இது ஏனென்று ஆராயத் தக்கது.மேலும் பிராகிருத மொழியிலும் இவ் சமஸ்கிருத உயிரெழுத்து இல்லை.அவ்வகையில் தமிழும் பிராகிருதமும் ஒற்றுமை கொண்டுள்ளன. முதலில் அமுதம் என்ற சொல்லைக் காண்போம்.பாற்கடலைக் கடையும் போது அமிர்தம் தோன்றிற்று என்ற வடமொழித் தொன்மம் ஒருபுறமிருக்க தமிழர் கடலில் விளையும் உப்பினை அமிழ்தம் என்று கூறியுள்ளனர்.

**2) அமிர்த் › அமுதம், அமிழ்தம்:**

சங்கத் தமிழில் அமிர்த் என்ற சொல் அமிழ்தம் என்று தமிழ்ப்படுத்தப் பட்டுள்ளது.'இந்திரர் அமிழ்தம் இயைவதாயினும்'(புறம்-182) என்ற கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி படைத்த பாடலில் இது வருகிறது.தமிழரின் விருந்தோம்பல் பண்பிற்கு எடுத்துக் காட்டாக இப்பாடல்

சுட்டப்படுகிறது. இந்திரர் உலகத்து அமிழ்தம் கிடைத்தாலும் தனியாக உண்ணுவதில்லை;பிறருடன் பகிர்ந்து உண்பர் என்ற சூழலில் அமிழ்தம் வந்துள்ளது.மேலும்,

"அரும் பெறல் அமிழ்தம் அன்ன கரும்பு இவண் தந்தோன் பெரும் பிறங்கடையே" என்று ஔவையார் பாடல் வரியிலும் (புறம்-392) அமிழ்தம் வருகிறது.அமிழ்தம் போன்று சுவை தரும் கரும்பை இந் நாட்டிற்குக் கொண்டு வந்தான்."அமிழ்து பொதி செந்நா" என்று குறுந்தொகையில் காதல் இன்பம் சார்ந்து இனிமையான என்ற பொருளில் வந்தது.இன்னொரு குறுந்தொகைபாடலில் "அரும் பெறல் அமிழ்தம் ஆர்பதம் ஆக"என்று வருகிறது.தேவர்களின் உணவு அமிழ்தம் என்ற கருத்து பட இங்கு எடுத்தாளப்படுகிறது. மதுரைக்காஞ் சியிலும் "உயர்நிலை உலகம் அமிழ்தொடு பெறினும்" என்று வருமிடத்தில் பாண்டியனின் பெருமை கூற வந்த மாங்குடி மருதனார் அமிழ்து என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார்.

திருக்குறளில் வான் சிறப்பு அதிகாரத்தில் "தான் அமிழ்தம் என்று உணரற் பாற்று" என்ற குறள் வரியிலும் அமிழ்தம் என்ற சொல்லாட்சி வருகிறது.'அமிழ்தம் உண்டார் சாவாது நிலைபெறுவார்' என்று பரிமேலழகர் கூறுகிறார்.மழை இவ்வுலகை நிலைபெறச் செய்வதால் அமிழ்தம் எனப்பட்டது.நாலடியார் பாடல் வரிகளில் அமிழ்தம் என்ற வடிவம் எடுத்தாளப் பெற்றுள்ளது."நனி விரும்பு தாளாண்மை நீராயினும் அமிழ்தாய் விடும்"(200).

அமிழ்தம் என்ற வடிவம் சங்கப் பாடல்களில் நற்றிணையிலும் சற்று வித்தியாசமான பொருளில் காணமுடிகிறது."கடல் விளை அமிழ்தம் பெயற்கு ஏற்றாங்கு/உருகி உகுதல் அஞ்சுவல் உதுக்காண்" (நற்றிணை 88;1-5)

அமிழ்தம் என்ற சொல்லுக்கு விலை மதிப்பற்ற பொருள் (உப்பு) என்ற (Meaning change) அர்த்தம் மாற்றம் அடைந்தது.இன்னொரு அகநானூற்றுப் பாடலிலும் உப்பைக் குறிக்க அமிழ்தம் என்ற சொல் பயன்படுத்தப்பட்டது."அணங்குடை முந்நீர் பரந்த செறுவின்/ உணங்குதிறம் பெயர்த்த வெண்கல் அமிழ்தம்/குடபுல மருங்கின் உய்ம்மார்"(அகம்.207:1-6)

என்று வரும் பாடல் வரிகளில் உப்பளங்களில் விளைந்த அமுதமாகிய உப்பு மேற்றிசை நாடுகளுக்கு அனுப்பப்பட்டது என்ற செய்தி தெரிகிறது.தமிழர் உழைப்பில் விளைந்த உப்பை அமிழ்தம் என்று கொண்டது சிறப்புடைத்து.

பரிபாடலில் அமிர்த என்ற வடிவம் கிடைக்கிறது."வாயடை அமிர்த நின் மனத்தகத்து அடைதர" என்ற வரியில் இவ்வடிவம் வருகிறது. அமிர்தம் தேவர்களுடைய உணவு என்றும் அது மூப்பின்மையையும் ஒழியாத

வலிமையும் சாவா மரபைத் தரும் என்பதையும் இங்கு அறிகிறோம்.

சிலம்பில் அமுதம் என்ற வடிவம் கிடைக்கிறது. கொலைக் களக் காதையில் கண்ணகி கோவலனுக்கு தலை வாழையில் உணவு பரிமாறிவிட்டு "அமுதம் உண்க அடிகள்" என்று அழைக்கிறாள்.அமுதம் இங்கு உணவைக் குறித்தது. அமுதத்திற்குப் புதிய பொருள் வருவதைக் காணமுடிகிறது.

**2.1) இடைக்காலம்:**

அமுது, அமுதுசெய், அமுதுபடி

இடைக்காலப் பக்திப் பனுவல்களில்

இச்சொல் திரும்பத் திரும்ப வருகிறது.

"ஆரா அமுதே ஆசைப்பட்டேன்" (திருவா-ஆசைப்பத்து) என்று வரும் திருவாசகத்தில் அமிழ்தம் 'அமுது' ஆனது.அமுது என்ற சொல்லுக்கு அருமருந்து என்று பொருள் சொல்லப்படுகிறது.'ஆராவமுதே அளவிலாப் பெம்மானே' என்றும் வருகிறது. இவ்விடத்தில் உண்ண உண்ண தெவிட்டாத இன்னமுதம் போன்றவனே என்று பொருள் சொல்லப் படுகிறது."கடலமுதே கரும்பே விரும்படியார்"(திருவா-திருப்பள்ளியெழுச்சி)என்று வருமிடத்தில் திருப்பாற்கடல் அமுதம் போன்ற வனே என்று இறைவனை வர்ணிக்கிறார் மணிவாசகர்."கண்ணார் அமுதமுமாய் நின்றான்" (திருவா-திருவெம்பாவை) என்ற இடத்தில் பெருமை மிக்க அமுதம் என்று பொருள் தரப் படுகிறது .

நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில்'என் அமுதினை' என்றும் "அமுதூறும் என் நாவுக்கே"

என்றும் திருமால் வர்ணிக்கப் படுகிறார்.

இவ்வாறு சிறுசிறு பொருள் வேறுபாட்டுடன் இச்சொல் வருவதைக் காணலாம். கல்வெட்டுகளில் அமுது படி என்பது அரிசியைக் குறித்து நின்றது. அமுது செய்தல் என்பது உணவு உண்ணுதலைக் குறித்தது.

அமிர்தம் (amRtam) என்ற சமஸ்கிருதச் சொல்லுக்கு வரலாறு இருப்பது போலவே தமிழிலும் நெடிய வரலாறு உள்ளது.

சமஸ்கிருத உயிரொலி (R) தமிழில் சங்க காலத்தில்- இழ்- என்று மாறியது. அமிழ்தம் என்பதில் இதனைக் காணலாம்.(R) என்பது-உகரமாகவும் மாறிற்று. அமுதம் என்ற வடிவத்தில் இதனைக் காணலாம். (R) தமிழில் ரகரமாகவும் மாறுகிறது. அமிர்தம் என்பதைக் காண்க. அமுதம் என்பதில் -அம் கெட்டு அமுது என்றும் வழங்குகிறது.

பிராகிருத மொழியில் 'அமிய' என்றும் 'அமய'என்றும் மாற்றும் அடையும். பல் அடைப்பொலி தகரம் கெடுகிறது. தமிழில் தகரம் கெடவில்லை.

**3) ரிஷப ›இடபம்**

காளை அல்லது எருது என்று பொருள் படும் தமிழ்ச் சொல்லை சமஸ்கிருத மொழியில் ரிஷப (Rshabha) என்ற சொல்லால் குறிப்பர். (R) என்பது சமஸ்கிருத மொழியில் உயிரெழுத்து என்று

குறிப்பிட்டோம். sha என்பது நாமடி சகரவொலி.இச் சொல் இடபம் என்று தமிழில் வழங்கும்.நாமடி(sh) சகர ஒலி தமிழில் டகரமாக மாறும்.

(R) என்ற சமஸ்கிருத உயிர் இகரமாக மாறி இடபம் என்றாகிறது.திருவாசகத்தில் திருச்சாழல் பதிகத்தில்"இடபம் உகந்து ஏறியவாறு எனக்கறிய இயம்பேடி" (பாடல்-4) என்ற இவ்வரியில் ரிஷபம்>இடபம் என்று

வந்துள்ளது.சிலப்பதிகார அடியார்க்கு நல்லார் உரையில் இடபம் ராசிகளில் ஒன்றாகக்

குறிப்பிடப்படுகிறது.முன்பாக, பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் கைந்நிலை என்ற நூலில் "தங்கார் வருவர் / இடபம் எனக் கொண்டு தாம்" என்ற பாடல் வரிகளில் இடபம் என்ற சொல் பயின்று வருகின்றனது.தம்மைக் காளை என்று கொண்டு தலைவன் வந்து விடுவான் என்று தோழி தலைவியைத் தேற்றுகிறாள்.

ரிஷப என்ற சமஸ்கிருத சொல் உஸஹ (usaha) என்று பிராகிருத மொழியில் மாறுகிறது.

பாலியில் உஸப (usabha) என்று மாறுகிறது.தமிழ் இடபம் வேறுபடுகிறது.

**4) ரிஷி › இருடி**

ரிஷி என்னும் சமஸ்கிருத சொல் பழந்தமிழில் 'இருடி' என்றாகிறது.

இங்கு ரி (R) சமஸ்கிருத உயிர் தமிழில் இரு என்று மாறுவதைக் காண்கிறோம்.ஷகர நாமடி ஒலி டகரமாக மாறும்.நமது மரபிலக்கண ஆசிரியர்கள் இதற்கு விதி தந்துள்ளனர்.வளையாபதி காவியத்தில்"நிக்கந்த வேடத்து இருடி கணங்களை"என்ற வரியில்

இருடி என்ற சொல் வந்துள்ளது. திருவாசகத்திலும்

"ஏகாசமிட்ட இருடிகள் போகாமல்

ஆகாசங் காவலென் றுந்தீ பற" என்ற பாடல் வரிகளில் இருடி என்பது வானத்திலே போர்வையிட்டுச் செல்லும் ஒருவகை முனிவர்களைக் குறித்து வந்துள்ளது.நாலாயிரதிவ்விய பிரபந்தத்தில் திருப்பல்லாண்டு "இருடி கேசன் தனக்கு"(பாடல்-5)

என்று வருகிறது. ரிஷிகேசன் என்பதே இருடி கேசன் என்று தமிழ்ப்படுத்தப்பட்டுள்ளது. .இச்சொல்லுக்கு முனிவர்களின் தலைவன் என்பது பொருள்.ரிஷி என்ற சொல் இஸி (isi) பாலியிலும் பிற பிராகிருத கிளை மொழியிலும் மாறுகிறது.

**5) ரிக் (வேதம்) › இருக்கு**

ரிக் (Rg) என்பது நான்கு வேதங்களில் ஒன்று; முதலாவது வருவது.தமிழில் 'இருக்கு' என்று வருகிறது. "இருக்கு எசுச் சாம வேத நாண்மலர் கொண்டு உன் பாதம் நண்ணா நாள் "எனத் திவ்வியப் பிரபந்தத்தில் வருகிறது.இங்கு (R)

என்னும் சமஸ்கிருத உயிர் ஒலி

'இரு' என்று தமிழ்ப் படுத்த படுகிறது. திருவாசகத்தில்"இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்"(திருப்பள்ளியெழுச்சி-4).

என்று வரும் வரிகளில் இருக்கு வந்துள்ளது. இங்கும் இச்சொல் ரிக் வேதத்தையே குறித்தது. ரிக்வேதம்

என்று அழைப்பது அண்மைக்கால வழக்கு. இருக்கு(வேதம்) என்பது பழைய வழக்கு.

**6) nRtya › நித்தம், நிருத்த**

ந்ருத்ய (nRtya) என்ற சமஸ்கிருதச் சொல் நடனம், நாட்டியம், என்று பொருள்படும். இச்சொல் பிராகிருத மொழியில் நச்ச என்று மாற்றம் அடையும் என்று ஒரு கட்டுரையில் குறிப்பிட்டுள்ளேன். தமிழில் பழந்தமிழில் நித்தம் என்றும் பிற்காலத்தில்

நிருத்த என்றும் மாறிற்று.இடைக்காலத்தில் நிருத்தனே என்று சிவனை அழைப்பதைக் காணலாம். அதாவது சமஸ்கிருத உயிர் (R) தமிழில்

இரு என்றும் இகரமாகவும் மாறுவதைக் காண்கிறோம்.

**7) mRga > விருகம், மிருகம்.**

mRga என்ற சமஸ்கிருதச் சொல்லிலும் 'ரு'என்ற உயிரெழுத்து வந்துள்ளது.இது தமிழில்'இரு' என்றே மாறுகிறது.

மிருகம் (mirukam) என்றும் விருகம் என்றும் மாற்றம் அடைந்தது.விருகம் என்பது திருவாசகத்தில் 'பல் விருகமாகி பறவையாய்'என்று வருகிறது. பொதுவாக விலங்கு என்ற பொருளில் தமிழில் வழங்க சமஸ்கிருதத்தில் மான் என்ற பொருளில் வழங்கிற்று.பிராகிருத மொழியில் 'மிஅ,மய' என்று மாற்றம் பெறுகிறது.

**8) ஹ்ருதய › இதயம்,இருதயம்**

ஹ்ருதய *(hRdaya)*

இச்சொல்லில் வரும் தொண்டை உரசொலி *(h)* கெட்டு ருகரம் இகரமாக மாறுகிறது. *(R>இ)*. இவ்வாறு தமிழில் இதயம் வந்தது.

இடைக்காலத்தில் இதயம் வந்துவிடக் காண்கிறோம்.பிராகிருத மொழியில் *(hiaa)*என்று வரும்.

**9) மிருது** (mrdu) › **மெது**

மெது' என்ற சொல் மென்மையைக்குறிக்கும். இச்சொல் மிருது என்ற சமஸ்கிருதச் சொல்லிலிருந்து வந்தது.மெதுவடை போன்ற தற்கால தமிழ்ச் சொற்களிலும் இதனைக் காணலாம்.மிருதுவில் வருகிற *(R)* தமிழில் எகரமாக மாறுவதைக் காண்கிறோம்.

**10) ரிது** (Ritu) › **இருது**

ரிது என்ற என்ற சொல் இருது என்று மணிமேகலையில் வருகிறது."இருது வேனிலில் எரி கதிர் இடபத்து"(மணி-11/40)என்பது

அந்த செய்யுள் வரி.'இரு மாதங்களுக்கு உட்படும் பருவத்தை' இச்சொல் குறித்தது.

*(season of two months)*.ரிதுவாதல் என்பது அனைவரும் தெரிந்ததே.

கிராமப்புறங்களில் ருசுவாதல் என்று கூறுவதை இன்றும் காணலாம்.பிராகிருத மொழியில்

'உஉ'என்று வழங்குகிறது.

**11) முடிவுரை:**

மொழிகள் சொற்களையும் பிற இலக்கணக்கூறுகளையும் கொடுத்தும் கொண்டும் வளர்கின்றன. தம் மொழியின் சொற்கட்டமைப்புக்கு ஏற்ப பிறமொழிச் சொற்களை மாற்றிஏற்றுக் கொள்கின்றன.

அமிர்தம் என்ற சமஸ்கிருதச் சொல் தமிழில் விரிவாகக் காலந்தோறும் பயன்பட்டது; கையாளப்பட்டுள்ளது.இச்சொல்லின் சொற்பொருளில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.கடல் நீரில் உற்பத்தியாகும் உப்பைப் பழந்தமிழர் 'வெண்கல் அமிழ்தம்' என்றும் 'கடல்விளை அமுதம்' என்றும் புதிய பொருளில் அழைத்தனர்.இனிமை,சுவை,உணவு போல பல சொற்பொருளை இச் சொல் குறித்தது.

சமஸ்கிருத உயிரெழுத்து ரு *(R)* பிராகிருத மொழியில் இகரமாகவோ உகரமாகவோ அகரமாகவோ,ரகரமாகவோ மாறுகிறது.தமிழில் இரு,இழ்,உகரம்,இகரம்,ரகரம் ஆகிய ஒலிகளாக மாற்றம் அடைகிறது.தமிழிலும் பிராகிருதத்திலும் இவ்வொலி இல்லை.



10-11-2021 முதல் 21-11-2021 தேதி வரை செங்கோட்டை நூலக வாசகர் வட்டமும் நேஷனல் புக் டிரஸ்ட் இந்தியா மற்றும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் உடன் இணைந்து நூலகத்தில் நடத்திய புத்தகக் கண்காட்சியை மாவட்ட கல்வி அலுவலர் முனைவர்.சுடலை அவர்கள் தொடங்கி வைத்தார். செங்கோட்டை அரசு மருத்துவமனை தலைமை மருத்துவர் டாக்டர் ராஜேஷ் கண்ணா முதல் விற்பனையை தொடங்கி வைத்தார். செங்கோட்டை வட்டார கல்வி அலுவலர் மேரிகிரேஸ் ஜெபராணி, செங்கோட்டை எஸ்எஸ்.ஏ திட்ட மேற்பார்வையாளர் ராஜேந்திரன், சேக் ராஜா, ரோட்டரி கிளப் ஆஃப் கேலக்ஸி தலைவர் பொன்னுத்துரை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் மதுரை மண்டல மேலாளர் கிருஷ்ணமூர்த்தி, திருநெல்வேலி கிளை மேலாளர் மகேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கட்டுரை



# பாம்புபட இடிக்கும்

பொ. சிவசங்கரன், இ.ஆ.ப.,

முதுபெரும் சங்கப்புலவர் ஔவையாரால் எழுதப்பெற்று குறுந்தொகையில் 158வது பாடலாகத் தொகுக்கப்பட்ட பாடலின் முதல் அடியே மேற்கண்ட தலைப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளது. தொகை நூல்களில் ஒன்றான குறுந்தொகை நூல் அழகிய இலக்கிய நயம் கொண்டது. புலவர் பெருமக்கள் பலர் தனித்தனியே பாடி இயற்றிய அகப்பொருள் செய்யுட்களைக் கொண்டு தொகுக்கப் பெற்றது.

காட்சிப் பொருளையும் கருத்துப் பொருளையும் ஒருங்கே அமைத்து ஔவையார் இப்பாடலைப் பாடியுள்ளார். ஒரு பெருமழைக்கால இரவு நேரத்தில் அளாவளாவ வந்த தலைவனைக் கண்டு அஞ்சிய தலைவி, தலைவன் கேட்க மழையை நோக்கிப் பாடுவதாக இப்பாடலை ஔவையார் அமைத்துள்ளார்.

"நெடுவரை மருங்கிற் பாம்புபட விடிக்கும்
கடுவிசை யுருமின் கழறுகுர லளைஇக்
காலொடு வந்த கமஞ்சூழ் மாமழை
ஆரளி யிலையே நீயே பேரிசை
இமயந் துளக்கும் பண்பினை
துணையில ரளியர் பெண்டிறிஃ

தலைவன் இடர் மிகுந்த காட்டினிடையே ஆறுகள் பலவற்றைக் கடந்து வருவதாலும் பெருமழைக் காலங்களில் ஆறுகளில் வெள்ளம் பெருகி ஆபத்து மிகும் என்பதாலும் விரைந்து மணம் புரிந்து கொள்ளவேண்டும் என்றும் அஃது தாமதமானால் இடர்மிகக்

கொள்ள நேரிடும் என்றம் பொருள்பட இப்பாடல் அமைந்துள்ளது.

சங்க இலக்கியங்களில் இதுபோன்ற கருத்துக்கள் அமைந்த பல பாடல்கள் பல புலவர்களால் பாடப்பட்டுள்ளதை அனைவரும் அறிவோம். ஆனாலும் இந்த குறுந்தொகைப் பாடலில் ஒரு அருமையான உட்கருத்து மிக அழகாகப் பதியப்பட்டுள்ளது. இப்பாடலில் முதல் வரியை நீங்கள் படிக்கும் போது என்ன தோன்றுகிறது என்றால் மழைக்காலங்களில் இடியுடன் கூடிய பெருமழை பொழியும். அம்மழையின் இடியோசை கேட்டு பாம்புகள் இறந்துபடும் என்பதாகும். இக்குறுந்தொகை நூலைப் பதிப்பித்த டாக்டர். உ.வே.சாமிநாத அய்யர் அவர்கள் பாடலுக்குப் பொருள் விளக்கம் கொடுக்கும்போது, "பாம்பு பட இடிக்கும்" - என்பதற்குப் பாம்புகள் இறந்து படும்படி இடி இடிக்கும் எனப்பொருள் கொள்கிறார். ஆனால் பாம்புகளுக்கு செவிப்பறை கிடையாது என்பதும் உணர்தலால் வருகின்ற அறிவினைக் கொண்டே பாம்புகள் அறிந்து நடந்து கொள்கின்றன எனவும் அறிவியல் நமக்கு உணர்த்துகிறது.

மழைக்காலங்களில் கனமழை காரணமாக மலைகளில் நிலச்சரிவுகள் ஏற்பட்டு வெள்ள நீரானது அனைத்தையும் புரட்டி இழுத்துச் செல்லும்பொழுது கூட உயிர் பிழைக்க வேண்டி வெள்ள நீரில் மிதந்தபடி மற்ற உயிரினங்களைப் போலவே பாம்புகளும் தப்பிச்செல்வதை நாம் பார்த்திருக்கிறோம். பாடலில் கூறுவது போல மழைக்காலத்தில் பாம்புகள் இடியால் இறக்க நேரிட்டால் இந்நேரம் உலகத்தில் பாம்புகளே இல்லாமல் போயிருக்கும். அப்படியானால் இடியோசை கேட்ட பாம்பு இறப்பது எப்படி? சங்க காலப் புலவர்கள் இயற்கை நிகழ்வுகளைப் பதிவு செய்பவர்கள். செய்யுட்களில் பொய் புனைந்து எழுதமாட்டார்கள். அப்படி என்றால் அவ்வையின் இக்கருத்துக்கு என்னதான் பொருள்?

இருக்குவேதம் இதற்கான விடையைக் கூறுகிறது. இருக்கு வேதகால ரிஷிகள் மழைக்கடவுளான இந்திரனைப் புகழ்ந்து பாடியிருக்கும் பல பாடல்களில் இப்பொருளுக்கான விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. இருக்குவேதகால ரிஷிகள் பாடிய துதிப்பாடல்கள் பலவற்றில், "இந்திரன் தன் வச்சிராயுதத்தால் பாம்பைக் கொன்று நீரை விடுவித்தான்" என பாடியுள்ளனர். அஹி எனப்படும் தென்பாம்பு மழை நீரினைத் தேக்கி வைத்துக் கொண்டு விடுவிக்காமல் இருந்ததாகவும், இதனால் ஏற்படும் வறட்சியால், ஆறுகள், குளங்கள் வறண்டு விடுவதாகவும், கால்நடைகள், உயிரினங்கள் நீரின்றித் துயரடைகின்றன எனவும் ரிஷிகள் இந்திரனைத் துதித்துவேண்ட, அவன் (இந்திரன்) தன்னுடைய வச்சிராயுதத்தால் அஹியை (பாம்பு)க் கொன்று நீரை விடுவித்தான் என்று பாடல்கள் இயற்றியுள்ளனர்.

இருக்குவேதம் மண்டலம் - II, *52:*வது பாடலில் ரிஷி சவ்ய ஆங்கிரசன் இந்திரனை நோக்கி இவ்வாறு கூறுகிறார்.

"இந்திரனே! நீரை தடைசெய்த, வானின் மேல் மண்டலத்திலே சயனித்திருந்த பரந்து விரிந்தவனான விருத்திரனுடைய தாடையை நீ உன் வஜ்ராயுதத்தால் வீழ்த்தினாய்!"

இருக்குவேதம் மண்டலம் - I, *32:3*இல் "மகவான் தன் ஆயுதமான வஜ்ராயுதத்தை எடுத்தான். அதனால், அவன் மேகங்களின் நடுவில் தோன்றிய அகியைக் கொன்றான்." என்று வருகிறது.

மேலும் ரிஷி ஹிரண்யஸ்தூபன் இந்திரனை நோக்கிக் கூறுவதாக இருக்கு வேதம் - I, *32: 12*வது பாடலில் இப்படிக் கூறப்பட்டுள்ளது. இந்திரனும் விருத்திரனும் போர் செய்யுங்கால், விருத்திரனால் ஏவப்பட்ட மின்னலும், முழக்கமும் சொரியப்பட்ட மழையும் இடியேறும் அவனை - இந்திரனைத் துன்புறுத்தவில்லை.

அகி-என்பது பழங்காலத்தில் இருந்ததாகக் கூறப்படும் ஒரு வகை மிருகம். இங்கு பாம்பு என்று பொருள் கொள்கிறார். ரிக்வேதத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த கிரிபித் அவர்கள். இந்திரன் கொன்றொழித்த அடிமைகளிலும் (தாசர்களிலும்) அசுரர்களிலும், விரித்திரனும் அகியும் இருவேறு உருவங்கள் என்றும் விரித்திரனும் அகியும் பின்னர் ஒன்றென மயங்கின எனவும் அறிஞர் குணா தன்னுடைய வள்ளுவத்தின் வீழ்ச்சி என்ற நூலில் தெளிவுபடுத்தியுள்ளார்.

தென்கோளரைக்குள் (Southern Hemisphere) காணும் தென்பாம்பு (Hydra) என்னும் உடுவின் உருவகமே அகி என்னும் உடுக்கூட்டம். ஞாயிறு வேனில் முடங்கலில் இருக்கையில், மழைநாளில் தொடுவானத்திற்கு மேலே எழுகின்ற உடுக்கூட்டமே தென்பாம்பு. விரித்திரனும் அதே உடுவின் இன்னோர் உருவகமாகும். இதன் நடுப்பகுதிக்கு மேலே வேனில் முடங்கல் இருந்ததையும், சுருண்டு கிடந்த பாம்பையொத்த அம் மீனின் ஊடே வான்நடுவரை சென்றதையுமே விரித்திரனைப் பற்றிய அக்கதை சுட்டுவதாக அறிஞர் குணா கூறுவார். சூன் *21* அன்று ஞாயிறு வேனில் முங்கலுக்கு வருகையில், தென்மேற்குப் பருவக்காற்றால் மழைக்காலம் ஆரம்பிக்கும். இத் தென்மேற்குப் பருவமழை சூன் *1* அன்று கேரளத்தில் தொடங்கும். இடியுடன் கூடிய மழைக்காலம் தொடங்கும் இக்கார்காலத்திலேயே பெருமழையின் போது இடியானது பாம்பு பட இடிக்கும் என ஔவையார் தனது பாடலில் வைத்துப் பாடியுள்ளது விளங்கும். கார்காலம் தொடங்கி விட்டதை அறிந்து தலைவன் வரும் பாதை இடையூறு

மிக்கதாக இருக்கும் என்று எண்ணி திருமணம் விரைவாக நடக்க வேண்டி தலைவி வருந்துவதாக பாடலை அமைத்துள்ளார்.

சங்க இலக்கியங்களில் மேற்கண்ட கருத்திலமைந்த பல ஒப்புமைப்பாடல் வரிகளை நாம் காணலாம்.

"நாகத் தணங்குடை யருத்தலை யுடலி வலனேர்,
பார்கலி நல்லேறு திருதரும்,"

"ஈர்ங்குரல ருமினார்கலி நல்லேறு, பாம்பு
கவினளிக்கும்,"

"கேழ்கிள ருத்தி யரவுத்தலை பனிப்பப் படுமழை
யுருமி னுரற்றுகுரல்"

என்ற நற்றிணை பாடல்களாலும், அறியலாம்.

மழையானது பாம்பை வருத்தி மலையைத் துளக்குதல் "யாங்குச் செங்வாங்கொறோழி யோங்குகமைக் காம்புடை விடரகஞ் சிலம்பப் பாம்புடன், றோங்குவரை மிளிர வாட்டி வீங்கு செலற் கடுங்குர லேற்றோடு கனைதுளி தலைஇப் பெயலானதே வானம்" என்று மழை பாம்பை வருத்தி மலையைத் துளக்கும் நிகழ்வு நற்றிணை 51-வது பாடல் வரிகளிலும் வருகிறது. இதேபோன்று பரிபாடல் முழுவதிலும் வானியல் கருத்துக்கள் நிரம்ப உள்ளதை நாம் படித்து உணரலாம்.

தொல் தமிழகத்தில் வழக்கத்தில் இருந்த தமிழ் நான்மறையின் பெரும் பகுதி வான் இயற்பாடுகளையும் அரிய வான் நிகழ்வுகளையும் பற்றியதாயிருந்தது. நாள் மீன்களையும், கோள் மீன்களையும் அவற்றைப் பற்றிய கணக்குகளையும் தமிழ் மறை அறிந்த சங்கப்புலவர்கள் அக்கருத்துக்களையே உள்ளுறையாக வைத்துப் பாடல்கள் இயற்றியுள்ளனர். செய்யுளில் வரும் கடவுளர்கள் அனைவரும் வானியல் நிகழ்வைக் குறிக்கும் மறை பொருள் குறியீடுகள் என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். காலப்போக்கில் தமிழ் நான்மறையானது மக்களின் அறிவுத் தளத்திலிருந்து மறக்கடிக்கப்பட்டு காணாமலே போய்விட்டது. இருந்தாலும் தமிழ் மூல மறையின் வானியல் கருத்துக்கள் வேத நூல்களில் குறிப்பாக இருக்கு வேதத்தின் பல பாடல்களில் தொகுக்கப்பட்டுள்ளதை உணர்ந்து அதனை மீட்டெடுக்க முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும்.


**துணை நூல்கள்:**


1. குறுந்தொகை (மூலமும் உரையும்) - டாக்டல். உ.வே.சாமிநாதர் அய்யர் பதிவு
2. வள்ளுவத்தின் வீழ்ச்சி - அறிஞர் குணா
3. சக்கரவாளக்கோட்டம் - அறிஞர் குணா
4. ரிக்வேதம் - அலைகள் வெளியீட்டகம், சென்னை
5. மதுரை தமிழ் பேரகராதி - சந்தியா பதிப்பகம்





29.10.2021 அன்று சேலம் மாவட்ட மைய நூலக வளாகத்தில் 75 நாட்கள் தேசிய புத்தகக் கண்காட்சியை சேலம் வருவாய் கோட்டாட்சியர் எஸ்.விஷ்ணுவர்த்தினி அவர்கள் திறந்துவைத்தார். இதில் எம்.ஏ.இளங்கோவன், எம்.ஜெயபிரகாஷ், மாவட்டநூலக அலுவலர் அர.கோகிலவாணி, கே.இளவரசன், ஜே.ஓ.அரிநாராயணன், இரா.சக்திவேல் மற்றும் என்சிபிஎச் மண்டல மேலாளர் ஆர்.ரங்கராஜன், கிளை மேலாளர் டி.சத்தியசீலன் ஆகியோர் கலந்துகொண்டனர்.


# நியூ செஞ்சுரியின் விற்பனை சாதனை நூல்கள்





**டிராகன் தேசம்**
சாய்ஜுன் - இளந்தமிழ்
₹ 275/-




**இந்திய ரயில் போக்குவரத்தின் சுவையான வரலாறு**
பேராசிரியர் பொ.முத்துக்குமரன்
பேராசிரியர் ம.சாலமன் பெர்னாட்ஷா
₹ 275/-





**தற்காலத் தமிழ்நாட்டு வரலாறு**
பேராசிரியர் அ.இராமசாமி
₹ 395/-






**மூளைக்குள் சுற்றுலா**
வெ.இறையன்பு
₹ 1500/-

கட்டுரை

# மொழிவழி மாநிலம்
## ஏன் இந்தக் குழப்பம்?







**உதயை மு. வீரையன்**

மொழிவழி மாநிலம் பிறந்த நவம்பர் முதல் நாளை இந்தியாவில் பல மாநிலங்கள் கோலாகலமாகக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றன. இந்நிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட அறிக்கை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. மொழிவழி மாநிலம் பிரிந்த நவம்பர் முதல் நாளுக்குப் பதிலாக ஜூலை 18 அன்று 'தமிழ்நாடு நாள்' கொண்டாடப்படும் என்று அறிவித்துள்ளனர்.

இந்தியா விடுதலை பெற்ற பிறகு 1956ஆம் ஆண்டு நவம்பர் 1ஆம் நாள் நாடு முழுவதும் மொழி வழி மாநிலங்கள் பிரிக்கப்பட்டன. அப்போதைய மெட்ராஸ் மாகாணத்திலிருந்து ஆந்திரா, கர்நாடகா மற்றும் கேரளாவின் சில பகுதிகள் பிரிந்து சென்றன.

அவ்வாறு பிரிந்தபோது தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிகள் மீண்டும் தமிழகத்துடன் இணைக்க நடந்த போராட்டங்களில் பலர் ஈடுபட்டு உயிர்நீத்தும், சிறை சென்றும் தியாகம் செய்துள்ளனர். போராட்டங்களில் ஈடுபட்டு, தியாகம் செய்தவர்களை நினைவுகூரும் வகையில் மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட நவம்பர் முதல் நாளை எல்லைப் போராட்ட தியாகிகள் நாளாக தமிழக அரசு அனுசரிக்கிறது.

இது அரசியல்வாதிகளிடமும், தமிழ் உணர்வாளர்களிடமும் முரண்பட்ட விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது. மொழிவழி மாநிலம் அமைந்த நவம்பர் முதல்நாள் தமிழகப் பெருவிழாவாகக் கொண்டாட வேண்டும். 'தமிழ்நாடு' பெயர் மாற்றப்பட்ட ஜூலை 18 'தமிழ்நாடு நாளாக'க் கொண்டாடலாம். தமிழுக்கும், தமிழ்நாட்டுக்கும் எத்தனை நாள் கொண்டாடினாலும் தகும். தமிழ் உணர்வையும், எழுச்சியையும் உருவாக்கும்.

தமிழ்நாடு மொழிவழி மாநிலமாகப் பிரிந்து 65 ஆண்டுகள் ஆகிவிட்டன. 2006ஆம் ஆண்டு தமிழக அரசின் சார்பில் இதன் 'பொன்விழா' கொண்டாடப்பட்டது. இதுவரை சென்னை மாகாணத்திலிருந்து பிரிந்து சென்ற ஏனைய மாநிலங்கள் இந்த நாளை 'உதய தின'மாகக்

கொண்டாடிக் கொண்டிருக்கின்றன. எனவே தமிழ்நாடும் இதில் பங்கேற்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

இந்தியா பல மொழிகள் பேசும் ஒரு துணைக்கண்டம். ஆங்கிலேயரிடம் இருந்து விடுதலை பெறுவதற்காக தங்கள் மொழி, இன வேறுபாடுகளை மறந்து தேசியத் தலைவர்களை நம்பியே போராடினர். மிதவாதிகள் மகாத்மா காந்தியடிகள் தலைமையிலும், தீவிரவாதிகள் திலகர் தலைமையிலும் போராடினர் இரண்டாம் உலகப்போர் வந்ததும், ஆங்கிலேயர் தங்கள் காலனி நாடுகளை விட்டு வெளியேற வேண்டிய நெருக்கடி ஏற்பட்டது.

இந்திய விடுதலைப் போராட்டம் வெற்றியை நெருங்கிக் கொண்டிருந்த போது, மாநிலங்களின் பிரிவினைக்கான குரல்களும் எழுந்தன. தேசம் விடுதலை பெற்றதும் மொழிவழி மாநிலங்கள் பிரிக்கப்பட வேண்டும் என்பதற்கான கிளர்ச்சிகளும் வெடித்துக் கிளம்பின. முதல் பிரதமர் பண்டித நேரு இதனைத் திசை திருப்பவும், அடக்கவும், அமைதிப்படுத்தவும் கருதி, இந்தியா முழுவதையும் ஐந்து மண்டலங்களாகப் பிரிக்கும் திட்டத்தை அறிவித்தார்.

தட்சிணப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், மேற்குப் பிரதேசம், கிழக்குப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் என்பனவாகும். இதில் 'தட்சிணப் பிரதேசம்' என்பது தமிழ்நாடு, கன்னடம், கேரளா, ஆந்திரம் ஆகிய நான்கு மாநிலங்கள் அடங்கியதாகும்.

இதனை ராஜாஜி மட்டுமே வரவேற்றார்; பெரியார் கடுமையாக எதிர்த்தார்; அண்ணாவும் கண்டனம் தெரிவித்தார். தமிழரசுக் கழகத் தலைவர் ம.பொ.சியின் பெருமுயற்சியால் தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள் கூட்டணியமைத்துக் கொண்டு போராடின. நேருவும் வேறு வழியில்லாமல் இத்திட்டத்தினைக் கைவிட நேர்ந்தது.

*1953*ஆம் ஆண்டுவரை தமிழ்நாடு சென்னை மாகாணத்தின் ஓர் அங்கமாகவே விளங்கியது. இந்தப் பலமொழிக் கூட்டில் சிக்கிக் கிடந்தவர்கள், தனியாக 'விசால ஆந்திரம்' வேண்டுமெனவும், 'ஐக்கிய கேரளம்' வேண்டுமெனவும் கோரிக்கை எழுப்பினர். இதற்காக ஆந்திர மகாசபை, கேரள சமாஜம் என அமைப்புகளை உருவாக்கி கட்சி சார்பின்றி ஒன்றுபட்டுக் குரல் கொடுத்தனர்.

இதன் பிறகுதான் காங்கிரஸ் கட்சியிலிருந்த சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம் முதன் முதலாக 'தமிழ் அரசு' அடைய வேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பினார். மொழி வழியாக மாநிலங்கள் பிரிக்கப்படும்போது 'வட வேங்கடம் முதல் குமரி வரையுள்ள தமிழகம்' அமைக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

சுதந்திர இந்தியாவில் ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் தன்னாட்சி உரிமை வழங்கப்பட வேண்டும். அதன் அடிப்படையில் புதிய தமிழகம் அமைக்கப்பட வேண்டும். இதனை வலியுறுத்தும் வகையில் தை முதல் நாளை தமிழர் திருநாளாகக் கொண்டாட வேண்டும் என விரும்பிய ம.பொ.சி., தமிழகத்தின் அனைத்துக் கட்சித் தலைவர்களின் ஆதரவைப் பெற்று அறிக்கையும் வெளியிட்டார்.

*1948*ஆம் ஆண்டு ஒன்றுபட்ட சென்னை மாகாண சட்டமன்றத்தில் மொழிவழி மாநிலப் பிரிவினையை வலியுறுத்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மொழிவழி மாநிலப் பிரிவினை பற்றி ஆராய்ந்து அறிக்கை அளிப்பதற்காக அமைக்கப்பட்ட 'தார் குழு' *1948* செப்டம்பர் *13* அன்று சென்னைக்கு வந்தபோது தமிழகத்தைச் சேர்ந்த அனைத்துக் கட்சியினரும் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

'தமிழக எல்லை மாநாடு' தமிழரசுக் கழகத் தலைவர் ம.பொ.சி. *1949*இல் சென்னையில் நடத்தினார். மத்திய அரசின் நிதியமைச்சராக இருந்து, பதவியைத் துறந்த டாக்டர் ஆர்.கே.சண்முகம் செட்டியார் தலைமை. சென்னை மாநில முதலமைச்சர் பி.எஸ்.குமாரசாமி ராஜாவும் இம்மாநாட்டில் கலந்து கொண்டு பேசினார். 'வட வேங்கடம் முதல் தென்கமரி வரையுள்ள தமிழகத்தை அமைக்க வேண்டும்' என்ற தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

*1953* ஆந்திர மாநிலம் அமைக்கப்பட வேண்டும் என்பதற்காக பொட்டி ஸ்ரீராமுலு உண்ணாவிரதம் இருந்து உயிர் துறந்தார். இதன் பிறகு நேருவின் மனம் மாறியது. நாடாளுமன்றத்தில் 'ஆந்திர மாநிலம்' அமைவதற்கான வாக்குறுதியை வழங்கினார்.

இருப்பினும், 'சென்னை யாருக்கு?' என்ற பிரச்சினை எழுந்தது. 'தமிழகத்துக்கே உரியது' என்பதை முடிவு செய்ய அப்போதைய முதலமைச்சர் ராஜாஜி, காங்கிரஸ் தலைவர் காமராசர், சென்னை மேயர் செங்கல்வராயன், முன்னாள் மேயர் எம்.இராதாகிருஷ்ணபிள்ளை, தமிழலசு கழகத் தலைவர் ம.பொ.சி. முதலியவர்கள் கடுமையாகப் பாடுபட்டனர். அன்று மத்திய உள்துறையமைச்சராக இருந்த லால்பகதூர் சாஸ்திரியையும், பிரதமர் நேருவையும் சம்மதிக்க வைப்பதற்கும் பெரும்பாடு பட்டனர்.

*25-3-1953* அன்று நாடாளுமன்றத்தில் பிரதமர் நேரு ஆந்திர மாநில அமைப்பு பற்றிய அதிகாரப் பூர்வமான பிரகடனம் ஒன்றை வெளியிட்டார். இதில் ஆந்திராவின் தலைநகரம் ஆந்திர எல்லைக்குள்ளேயே அமையும் என அறிவித்தார். அதன் பிறகே தமிழகத்தின் கவலைக்குரிய கேள்விக்கு விடைகிடைத்தது. இல்லாவிட்டால் என்றென்றும் தீர்வு காண முடியாத பிரச்சினைகளுள் இதுவும் ஒன்றாகியிருக்கும்.

இந்த மொழிவழி மாநிலப் போராட்டத்தில் தமிழகத்தைப் பொருத்தவரை தென் எல்லை மீட்புப் போராட்டமும், வட எல்லை மீட்புப் போராட்டமும் வரலாற்றில் இடம்பெற்றவை. தென் எல்லைப் போராட்டம் திருவிதாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த தமிழர்களால் நடத்தப்பட்டது. இந்த வீரஞ்செறிந்த போராட்டத்தின் விளைவாகவே தெற்கு எல்லை 'கன்னியாகுமரி'யாகவே நீடிக்கிறது. இதில் மார்ஷல் நேசமணியின் பங்கு மிகப் பெரியது.

வட எல்லைப் பாதுகாப்புக்குழு ம.பொ.சி. தலைமையில் அமைக்கப்பட்டது. கே.விநாயகம் செயலாளர். மக்களை அணிதிரட்ட உதவியர் மங்கலங்கிழார். கடுமையான போராட்டத்திற்குப் பிறகு மத்திய சட்டத்துறை அமைச்சர் ஹெச்.வி.படாஸ்கரை விசாரனைக் குழுத்தலைவராக இந்திய அரசு நியமித்தது.

படாஸ்கர் பரிந்துரைப்படி திருத்தணி தாலூகா முழுவதும் (ஒரே ஒரு கிராமம் நீங்கலாக), சித்தூர் தாலூகாவில் 20 கிராமங்கள், புத்தூர் தாலூகாவில் ஒரு கிராமம் ஆக 322 கிராமங்கள் ஆந்திராவில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டு தமிழகத்துடன் சேர்க்கப்பட்டன. இந்தக் கிராமங்களின் மக்கள் தொகை: 2,39,502 பேர். அதேபோல தமிழ்நாட்டிலுள்ள திருவள்ளூர், பொன்னேரி தாலூகாக்களிலிருந்து சில கிராமங்கள் ஆந்திராவில் சேர்க்கப்பட்டன.

இந்தப் பெரும் போராட்டத்தில் தங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட தியாக மறவர்கள் ஏராளம். இதன் உச்சகட்டமாக ஆந்திர மாநிலம் அமைக்கக் கோரி போராடி 1953இல் பொட்டி ஸ்ரீராமுலு உயிர்நீத்ததையும், 1956 அக்டோபர் 13 அன்று 'தமிழ்நாடு' பெயர் கோரி சங்கரலிங்கநாடார் உண்ணாவிரதம் இருந்து உயிர்துறந்ததையும் தவிர்த்திருக்க வேண்டும்.

எனினும் மாநில முதல்வர் பொறுப்பிலிருந்த ராஜாஜி மற்றும் அப்போது காங்கிரஸ் தலைவராக இருந்த காமராசர் பங்கு குறிப்பிடத்தக்கது. தலைநகர் சென்னை ஆந்திரர்களின் பிடிவாதமான கோரிக்கையாக இருந்தபோது ராஜாஜி பத்திரிகையாளரிடம் கூறினார். "சென்னைப் பட்டினத்தை ஆந்திரரிடம் தருவது என மத்திய அரசு முடிவு எடுக்குமானால் அதை அமல்படுத்தும் சக்தி எனக்கு இல்லை. இந்த நிலையில் வேறு முதலமைச்சரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள் என்ற பிரமரிடம் கூறிவிட்டேன்..."

பிரதமர் மனம்மாற இதுவும் ஒரு காரணம். அத்துடன் நேருவின் திட்டமான 'தெட்சிணப் பிரதேச' அறிவிப்பின்போது தமிழகத்தின் ஒட்டு மொத்த எதிர்ப்பினை எடுத்துக் கூறி கைவிடச் செய்த பெருமை அப்போதைய முதலமைச்சர் காமராசரையே சேரும். இதற்கெல்லாம் மேலாக எந்தப் பொறுப்பிலும் இல்லாத ம.பொ.சியின் பணியை மறக்க முடியாது.

மக்கள் விரும்பிய மாநிலம் அமைத்ததா? மாநிலப் பிரிவினை குறித்து எல்லா மாநிலங்களுக்கும் மனக்குறைகள் இருக்கின்றன. வட எல்லையான வேங்கடத்தை இழந்தது தமிழகத்திற்கு ஓர் ஊனமாகவே கருதப்படுகிறது. கருநாடக மாநிலத்தில் சேர்க்கப்பட்டுள்ள மராட்டியப் பகுதியான பெல்காம் மாவட்டத்தைத் திரும்பப் பெற 'மாராட்டிய சமிதி' தொடர்ந்து போராடி வருகிறது. இவ்வாறே இன்னும் ஏராளம் உள்ளன.

இந்தச் சிக்கல்கள் தீர்க்கப்பட வேண்டியதுதான். ஆனால் சில அரசியல்வாதிகள் சிக்கல்களுக்குத் தீர்வு ஏற்பட்டு விடாமல் பார்த்துக் கொள்ளுவதிலேயே கவனமாக இருக்கின்றனர். மத்திய அரசு, எப்போதும் எதைப் பற்றியும் கவலைப்படுவதில்லை; மக்களின் மறதிக்கு மட்டுமே மதிப்பளிக்கிறது.

மொழிவழியான இந்தப் பிரிவினை மாநிலங்களுக்கான பிரிவினையே தவிர மக்களுக்கானது அல்ல. மொழி என்பது பிரச்சினைகளுக்கு முடிவாக இருக்க வேண்டுமே தவிர தொடர்கதையாக இருக்கக் கூடாது. 'மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி' என்ற முழக்கம் மத்திய, மாநில அரசுகளின் இணக்கமாக இருக்க வேண்டும்.

தமிழ் இலக்கியங்களில் தமிழ்நாட்டின் எல்லைகள் பற்றிய குறிப்புகள் எங்கும் காணப்படுகின்றன. செம்மொழித் தமிழின் பழம்பெரும் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திற்கு பாயிரம் பாடிய பனம்பாரனார்,

"வடவேங்கம் தென்குமரி ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து"

எனத் தமிழ்நாட்டு எல்லையை வரையறை செய்துள்ளார்.


எனினும் மொழிவழி மாநிலம் பிரிந்தபோது தமிழகப் பகுதிகளில் சில அண்டை மாநிலங்களில் அகப்பட்டுக் கொண்டன. பறிபோன அந்தப் பகுதிகளை மீட்டெடுக்கப் போராட வேண்டிய தமிழ்நாட்டுத் தலைவர்கள், தமிழ்நாட்டையே இரண்டாகவும், மூன்றாகவும் பிரிக்க வேண்டும் என்றும், 'கொங்கு நாடு', உருவாக்க வேண்டும் என்று பிரச்சினையைத் திசை திருப்புகின்றனர்.

இந்தியா பல மொழி, பல இனமக்கள் கூடிவாழும் கூட்டாட்சி என்பதை மொழிவழி மாநிலப் பிரிவு உறுதிசெய்கிறது. இதனை மத்தியில் ஆளுவோர் அடிக்கடி மறந்து விடுகின்றனர். இந்தியையும், சமஸ்கிருதத்தையும் மாநிலங்களின் மீது தொடர்ந்து திணித்துக் கொண்டிருக்கின்றனர்.


இந்திய அரசியல் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் இடம் பெற்றுள்ள 22 மாநில மொழிகளையும் ஆட்சிமொழி ஆக்க வேண்டும். மாநிலப்பட்டியலில் இருந்த கல்வித்துறையை எடுத்துக் கொண்டதுபோல, மாநிலத் தன்னாட்சி அதிகாரங்களை எடுத்துக் கொள்ளும் போக்கை மத்திய அரசு நிறுத்திக் கொள்ள வேண்டும்.

●

# நியூ செஞ்சுரியின் சுற்றுச்சூழல் நூல்கள்





**கவின்மிகு கானகம்**
(கட்டற்ற காட்டுயிர்க் களஞ்சியம்)
மோகன ரூபன்
₹ 175/-




**வேட்டையாடிகள்**
(பறவைகளின் உலகம்)
சுப்ரபாரதிமணியன்
₹ 65.00




**சூழலியல் மேலாண்மை**
முனைவர் எம்.விக்டர் லூயிஸ் அந்துவான்
தமிழில்: முனைவர் அ.அந்தோணி குருசு
₹ 100/-




**புவியினைப் புரிந்துகொள்!**
(சுற்றுச்சூழல் விழிப்புணர்வு கட்டுரைகள்)
முனைவர் பா.ராம்மனோகர்
₹ 125/-




# கொள்ளை போன ஒரு பேரரசு

வேலு.ராஜகோபால்

(இது நூல்குறித்த பதிவு அல்ல - இந்த நூலைப் படித்தபின் மனதில் ஏற்பட்ட எண்ணங்களின் தொகுப்பு)

நாம் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஆங்கிலேயரின் ஆட்சிபற்றி இந்தியர்களின் பார்வையில் படித்திருக்கிறோம். அதைத் தவிர, கிழக்கிந்தியக் கம்பெனியின் தோற்றம், இந்தியாவிற்குள் எப்படி அது வணிகம் செய்ய நுழைந்தது, எப்படி இந்தியத் துணைக்கண்டத்தை ஆளும் சக்தியாக மாறியது என்பது குறித்து நான் படித்த முதல் புத்தகம் இதுதான்.

நூற்றுக் கணக்கான குறுநிலமன்னர்கள் ஆண்ட (இப்போது நாம் இந்தியா என்று அழைக்கிற) ஒரு பெரும் நிலப்பரப்பின் அரசியல் சூழலை இன்று கற்பனை செய்வது கடினம். இருபது முப்பது மன்னர்கள் ஆண்ட அரசுகள், ஒன்றிரண்டு பெருமன்னர்கள் ஆண்ட அரசுகள், இருந்தன. இந்தத் துணைக்கண்டத்தின் பெரும்பகுதி ஒரு மாபெரும் பேரரசின் ஆட்சியின் கீழ் இருந்தது. ஒவ்வொரு பகுதியை ஆண்ட ஒவ்வொரு மன்னனும் தன் ஆட்சிப் பரப்பை எந்த வழியிலாவது அதிகரிக்க வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டிருந்தானர். படை பலம், பொருளாதார வளர்ச்சி, தனது கீழிருக்கும் பெருநிலக்கிழார்கள். உழுகுடிகள், தொழிலாளர்கள், பொதுமக்கள் துணையுடன் பெற்ற அரசியல் ஆதரவு, இவற்றின் அடிப்படையில் தான் அரசுகள் நிலைபெற்றிருந்தன.

தந்தையரிடமிருந்தும், சகோதரனிடமிருந்தும், மற்றவர்களிடமிருந்தும் பதவியை ஆட்சியைப் பறிக்க வன்முறையும் சூழ்ச்சியும் தான் பயன்படுத்தப்பட்டன. மன்னருக்குத்தான் விசுவாசமாக இருக்கவேண்டும் என்று குடிமக்கள் நிர்ப்பந்திக்கப்பட்டனர். ஆட்சியிலிருந்தவருக்கு விசுவாசமாக இல்லையென்றால் குடிமக்களுக்கு மரணதண்டனை, அல்லது வேறு தண்டனை, ஆட்சி செய்கிறவன் விருப்பப்படி வழங்கப்பட்டது. தேசம், தேசத் துரோகி என்ற நவீனக் கருத்துக்கள் அப்போது இல்லை . ஏனெனில் அரசரிடம் தான் விசுவாசம் காட்ட வேண்டிய அவசியம் இருந்தது. குடிமக்கள், (சிடிசன்) என்ற கருத்தாக்கத்தின் அடிப்படையில் அரசுகள்! தேசங்கள் அமைந்திருக்கவில்லை . ஆள்பவர்களின் நேரடியான ஆதிக்கம் எதுவரை இருந்ததோ அதுவே அதிகாரத்தின் எல்லைகளைத் தீர்மானித்தது. நேரடி ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்கான ஒரே வழி வன்முறை, அதாவது, அழிவைச் சந்திக்க நேரும் என்ற பயம்தான். அது முற்றிலும் வேறான உலகம். தேசம், குடியுரிமை, பண்பாட்டு ஒருமை அல்லது வேறுபாடு என்ற நமது இன்றைய கருத்துக்களை அந்தக் கால நிலமைக்குப் பொருத்திப்பார்க்க முடியாது. ஒரே 'நாடு' என்ற நவீன கருத்தாக்கம் தோன்றுவதற்கான அனைத்து அரசியல் சூழல்களும் இருந்தன என்பது உண்மைதான். ஆனால் பதினைந்து-பதினாறாம் நூற்றாண்டுகளில் அது குறித்து யாரும் (இந்தியாவில்) கருதவில்லை . முதல் சுதந்திரப் போர் என்று நாம் குறிப்பிடும் சண்டையின் (நவீன கருத்தாக்கத்தின் படி, உண்மையில் அது சுதந்திரப் போர் அல்ல) குறிக்கோள் முகலாயப் பேரரசரை மீண்டும் ஆட்சிக்கட்டிலில் அமர்த்த வேண்டும் என்பதே. அதற்கு மேல் எதுவும் இல்லை.

அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற நாடுகளில் இருந்த அரசியல் நிறுவனங்களின், சாயலில் பிரித்தானிய மன்னராட்சி முறைக்கு மாற்றாக, நமது விடுதலைப் போராட்டத்தில் விடுதலைப் போராளிகள் ஒரு அரசியல் அமைப்பைக் கற்பனை செய்தார்கள். அந்தக் காலத்தின் வரலாற்றைப் பயில்வதற்கு முன்னால் இதை நினைவில் கொள்ள வேண்டும். சுருக்கமாகச் சொன்னால், 'அகண்ட பாரதம்' என்ற கற்பனை, அரசியல் ரீதியாகவோ பண்பாட்டு வகையிலோ இருந்ததில்லை.

ஓர் அரசன் இன்னொரு அரசனைத் தோற்கடித்தால், தோற்ற அரசனில் ஆட்சி நடந்த இடம் முழுவதும் அல்லது அதன் ஒரு பகுதி வென்றவனிடம் சேரும். இப்படி அடிக்கடி அரசுகளின் எல்லைகள் மாறிக் கொண்டே இருந்தன. அவுரங்கசிப் பேரரசராக இருந்த போது, முகலாயப் பேரரசு காபூலில் இருந்து கர்னாடிக் வரை பரவியிருந்தது. மற்றக் காலங்களில் அரசர்களும் பேரரசர்களும் ஆண்ட நிலப்பரப்புகள் வெவ்வேறாக இருந்தன.

கிழக்கிந்தியக் கம்பெனி நூறு பங்குதாரர்களுடன் தொடங்கப்பட்டது. 'கிழக்கு இந்தியாவிலும் இன்னும் பல தீவுகளிலும் அதையொட்டிய இடங்களிலும்' வணிகம் செய்து கொள்ள இங்கிலாந்தின் அரசியிடம் இருந்து அனுமதி பெற்றுக் கொண்டது.

*“At that time England was a relatively impoverished, largely agricultural country, which had spent almost a century at war with itself over the most divisive subject of the time: Religion', and 'cut themselves off from the most powerful institution of Europe. (The author refers to the Pope and Catholic Christianity. England had rejected the power of pope in religious and political matters). English were in search of global markets and commercial openings. "This they did with piratical enthusiasm'. They raided Spanish mule trains, attacked and looted ships. Some of these pirates were founding fathers of East India Company.*

அந்தக் காலத்தில், இங்கிலாந்து ஏழ்மையான நாடாக, விவசாயத்தை மட்டுமே நம்பியிருந்த நாடாக இருந்தது. ஒரு நூற்றாண்டுக் காலமாக, பிரிவினைகளை உருவாக்கும், மதம் என்ற நிறுவனத்துக்காக உள்நாட்டுப் போரில் ஈடுபட்டிருந்தது. (நூலாசிரியர் போப்பையும், கத்தோலிக்கக் கிறித்தவத்தையும் இங்கே குறிப்பிடுகிறார். இங்கிலாந்து மத மற்றும் அரசியல் விவகாரங்களில் போப்பின் அதிகாரத்தை நிராகரித்தது. இங்கிலாந்து அந்த நேரத்தில் உலக அளவில் சந்தைகளை, வணிகம் செய்யும் வாய்ப்புக்களை 'கடற்கொள்ளையர்களுக்கிருக்கும் பேராசையுடன்' தேடிக் கொண்டிருந்தது. அவர்கள் ஸ்பானிய சரக்குகளை ஏற்றிச் செல்லும் கழுதைக் கூட்டங்களை கொள்ளையடித்தார்கள், கப்பல்களைத் தாக்கிக் கொள்ளையடித்தார்கள். இவர்களில் சிலர் கிழக்கிந்தியக் கம்பெனியை உருவாக்கிய பங்குதாரர்களாக இருந்தனர்

முகலாயப் பேரரசு, அவுரங்கசீப்பின் ஆட்சியில் அதுவரை இல்லாத பேரெல்லைகளை எட்டியிருந்தது என நூலாசிரியர் குறிப்பிடுகிறார். இந்தத் துணைக்கண்டத்தின் தெற்குப் பகுதிகள் முழுவதையும் தன் ஆட்சியின் கீழ் கொண்டுவரவேண்டும் என்ற பேராசையில் நிகழ்த்திய படையெடுப்புகளில் பெரும் பொருளாதார, ராணுவச் செலவுகளை செய்திருந்தார். அவருக்குப் பின் ஆண்டவர்களால் பெரும் தொலைவிலும் பேரரசின் விளிம்புகளிலும் இருந்த பகுதிகளை நிர்வகிக்க இயலவில்லை. அவ்வப்பகுதிகளில் இருந்த மன்னர்களும், முகலாய ஆளுனர்களும் அரசியல். ராணுவ பலம்பெற்று தன்னிச்சையாகச் செயல்படத் தொடங்கினர். பெயருக்கு மொகலாயப் பேரரசின் கீழ் ஆட்சி புரிந்தனர். இவ்வாறாக, பேரரசின் மையம் மெல்ல மெல்லச் சிதைவடையத் தொடங்கியிருந்தது.

நாதிர்ஷா பாரசீகத்தின் மன்னராக இருக்கும் போது முகலாயப் பேரரசின் செல்வங்கள் மீது கண்வைத்திருந்தார். 1732ஆம் ஆண்டில் ராணுவப் புரட்சி மூலம் அவர் ஆட்சியைப் பிடித்தார். ஆப்கானிஸ்தான் மீது படையெடுத்து முகலாயர்கள் வசமிருந்த காபூலைப் பிடித்துக் கொண்டார். அதற்கடுத்த மூன்றே மாதங்களில் டில்லியிலிருந்து 100 கி.மீ தூரமே உள்ள கர்னால் நகரை வந்தடைந்து விட்டார். நாதிர் ஷாவின் பலத்தையும் தனது பலமின்மையையும் உணர்ந்து கொண்ட முகலாயப் பேரரசர் அவருடன் பேச்சுவார்த்தை நடத்தச் சென்ற போது நாதிர்ஷா அவரைச் சிறைவைத்து விட்டார். ஸ்வைவல் என்றழைக்கப்படும் சிறிய ரகக் குண்டுவீசிகள் நாதிர்ஷாவிடம் ஏராளமாக இருந்தன. நாதிர்ஷாவுக்கும் முகலாயர்களின் படைகளுக்கும் நடந்த ஒவ்வொரு மோதலின் வெற்றியையும் அவை தீர்மானித்தன. முகலாயர்களிடமும் மற்றவர்களிடமும் சண்டையிட கைவாள்கள் மட்டுமே இருந்தன.

நாதிர்ஷாவின் படைகள் டெல்லியைச் சூறையாடின. ஒரு லட்சம் பேர் கொல்லப்பட்டனர். மயிலாசனம் உட்பட முகலாயர்கள் சேர்த்துவைத்திருந்த அத்தனை செல்வங்களையும் நாதிர்ஷா எடுத்துச் சென்றுவிட்டார். 700 யானைகள், 4000 ஒட்டகங்கள், 12000 குதிரை வண்டிகளில் தங்கமும், வெள்ளியும், விலையுயர்ந்த கற்களும் அவற்றில் அடக்கம். ஏறக்குறைய முகலாயர்களின் பொன் மற்றும் பொருட்கள் அனைத்தும் டெல்லியிலிருந்து ஈரான் போய்விட்டன. தனது படைகளின் அட்டகாசத்தை நிறுத்த வேண்டும் என்று முகலாயப் பேரரசர் நாதிர்ஷாவிடம் மண்டியிட்டு மன்றாடினார். ஒருவகையில் இந்தப் படையெடுப்பு முகலாயப் பேரரசின் முடிவுரையை எழுதிவிட்டது. தங்களது வலிமை, முகலாயர்களின் பெருமை நம்பகத்தன்மை அனைத்தும் இத்துடன் ஒரேயடியாக மறைந்துவிட்டன.

நாதிர்ஷா மட்டும்தான் இவ்வளவு கொடுமையாக நடந்து கொண்டார் என்பதில்லை. எல்லாப் போர்களிலும் எல்லாக் காலங்களிலும் இது நிகழ்ந்தது. கலிங்கத்தின் மீது படையெடுத்த சோழர்களின்போர் இதைவிட எந்த விதத்திலும் குறைந்ததல்ல. தமிழில் கலிங்கத்துப் பரணி அப்போது நிகழ்ந்த வன்முறையைக் கொடுமைகளை விவரிக்கின்றது. மிகைப்படுத்திச் சொல்லப்பட்டாலும் வெற்றி பெற்றபின்னர் நிகழும் கொடுமைகளும் கொண்டாட்டங்களையும் இது தொட்டுக் காட்டுகிறது. கலிங்கத்தின் மீது படையெடுத்து அசோகப் பேரரசு பெற்ற வெற்றியை இன்னொரு உதாரணமாகச் சொல்லலாம். அது அசோகரின் வாழ்க்கையையே மாற்றிவிட்டது. போரின் காட்டுமிராண்டித்தனத்தை அது விளக்குகிறது.

முகலாயப் பேரரசரிடமிருந்து வணிகம் செய்ய அனுமதி பெற்ற கிழக்கிந்தியக் கம்பெனி காலம் கனியட்டும் என்று காத்திருந்தது. முதலில் வங்காளத்தில் தொடங்கி மெல்ல மெல்ல தங்கள் காய்களை நகர்த்தினர். திட்டமிட்டு செயல்பட்டு, ஒவ்வொரு அரசருக்கும், முகலாய ஆளுனருக்கும் எதிராக உள்ளவர்களுடன் கைகோர்த்துக் கொண்டு தங்களுடைய செல்வாக்கையும் பலத்தையும் அந்தக் கம்பெனி வளர்ந்து வந்தது. ஒவ்வொருவராக முகலாய ஆளுனர்களை தங்களின் கீழ் கொண்டுவந்தது. பிறகு திப்பு சுல்தானை 1799இலும் அதன்பிறகு மராட்டியப் பகுதிகள் முழுவதையும் கைப்பற்றிக் கொண்டது.

இதற்காக எல்லா விதமான தந்திரங்களையும் கம்பெனி கையாண்டது. கையூட்டு, கட்சிமாறுதல், துரோகம் இவையெல்லாம் அவற்றில் சில. ஆனால் இவற்றுக்கெல்லாம் கிழக்கிந்தியக் கம்பெனியை மட்டும் குறைசொல்ல முடியாது. ஒவ்வொரு அரசனும், கவர்னரும் பதவியையும், பலத்தையும் தன்னிடம் தக்கவைத்துக் கொள்ள செய்யவேண்டியதை மட்டும் செய்தனர். குறுகிய நோக்கத்தில் மற்றவர்களுக்கு உதவ முன்வரவில்லை. ஒரே ஒரு மராட்டியத் தளபதி மட்டும் மற்ற அனைவரையும் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு எதிராகத் திரட்ட வேண்டும் என்று கருதினார். ஆனால் மற்ற அரசர்கள் அவரது சூழ்ச்சியாக இருக்கக்கூடும் என்று சந்தேகித்தனர். மராட்டிய ஆளுனர்களுக்குள்ளேயே கருத்து வேறுபாடுகள் இருந்தன. புனேவிலிருந்த ஆளுனர் மற்றவர்களுடன் ஒன்றுபடவில்லை . இவ்வாறாக, ஒவ்வொரு அரசும் கிழக்கிந்தியக் கம்பெனியுடன் தனியே போரிட்டு தங்கள் நிலங்களை இழந்தனர். கிழக்கிந்தியக் கம்பெனியிடம் வலுவான அடிப்படைக் கட்டமைப்பும், துப்பாக்கிகளும், ஒழுக்கம் விசுவாசம் மிகுந்த படைகளும் இருந்தன. படையணிகளுக்கும் அவர்கள் காலந் தவறாமல் ஊதியம் அளித்தனர்.


இன்றைய அரசியல் சூழலில், அரசியல் ஆதாயம் தேடுவதற்காக முகலாய அரசப் படைகள் நிகழ்த்திய கொடுமைகளை 'முஸ்லிம்கள் நிகழ்த்தியதாக' விவரிப்பது நாகரீகமாகி வருகிறது. அரசர்களும் ஆளுனர்களும் அந்தக் காலத்தில் எவ்வளவு பெரிய நிலப்பரப்பை தங்களின் கீழ் கொண்டுவர முடியுமோ அவ்வளவு பகுதிகளையும் அடைய விரும்பினர். அப்படித் தங்களின் கீழ் கொண்டுவர படையெடுத்தல் என்ற ஒரே வழிதான் இருந்தது. அது வன்முறைதான். அது மன்னர்களுக்கும் படையணிகளுக்கும் எதிராக மட்டுமல்ல சாதாரணக் குடிமக்கள் மீதும் நிகழ்த்தப்பட்டது. பலம்பெறவும் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரவும் வன்முறை உறுதியாக உதவியது. அந்தக் கொடுமைகளை அவர்கள் நிகழ்த்துவதற்குக் காரணம் அவர்கள் ஆட்சியாளர்கள் என்பதுதான். அரசர்கள் முஸ்லிம்களாக அல்லது இந்துக்களாக

இருந்தது காரணம் அல்ல .

போர்க்காலங்களில் எந்த அளவு வன்முறை சாதாரண மக்கள் மீது ஏவிவிடப்பட்டது என்பதற்கு இந்நூலில் சான்றுகள் உள்ளன. உதாரணமாக, 1740களில் மராட்டியப் பெரும்படைகள் வங்காளத்தின் மீது போர் தொடுத்த போது தாங்கொணாத வன்முறை நிகழ்ந்தது. 4 லட்சம் குடிமக்கள் கொல்லப்பட்டனர். பாஸ்கர பண்டிட் என்ற மராட்டிய ஆளுனரின் படைத்தலைவரான போன்ஸ்லே 20000 காலாட்படைகளுடன் போர்தொடுத்தார்.

பர்த்வான் பகுதியின் மன்னரிடம் வேலைபார்த்த வானேஷ்வர் வித்யாலங்கார் என்ற பண்டிட் இவ்வாறு பதிவு செய்திருக்கிறார்; மராட்டியர்கள் கொஞ்சம் கூடக் கருணை இல்லாதவர்கள், கருவுற்ற பெண்கள், குழந்தைகள், பிராமணர்கள் ஏழைகளைக் கொல்கிறவர்கள், முரட்டுத்தனமான மனமும் குணமும் கொண்டவர்கள், எல்லோருடைய சொத்துக்களையும் கொள்ளையடிப்பதில், ஒவ்வொரு பாவத்தையும் செய்வதில் வல்லவர்கள், பெரும் அழிவுகளைக் கொண்டுவரும் வால் நட்சத்திரங்களைப் போல, மாபெரும் அழிவுகளை ஏற்படுத்தி எல்லாவற்றையும் ஒன்றுகூட மீதமில்லாமல் வங்காளத்தின் கிராமங்களை முற்றிலும் அழித்தவர்கள்' கங்காராம் என்ற வங்காளக் கவிஞர், தன்னுடைய மஹாராஷ்டிரப் புராணத்தில் இவ்வாறு குறிப்பிட்டார்; பர்கீஸ் (மராட்டியர்கள்) என்ற பெயரைக் கேட்டதுமே கிராமத்தில் இருந்த அனைவரும் ஊரைவிட்டு ஓடிவிட்டனர். தெருக்களில் ஒருபோதும் கால்களை வைத்தறியாத மரியாதைக்குரிய குடும்பங்களைச் சேர்ந்த பெண்மணிகள் தலைகளில் கூடைகளை வைத்துக் கொண்டு ஓடினர். தங்கள் வாளின் பலத்தில் நில உடமையாளர்களாக மாறிய ராஜபுத்திரர்கள் தங்கள் வாட்களைத் தூர எறிந்துவிட்டு ஓடிவிட்டனர். தங்கள் உழுகருவிகளை தோளில் சுமந்து கொண்டு, அடுத்த வருட விதைப்புக்கான விதைகளை மாடுகளின் மீது பாரம் ஏற்றிக் கொண்டு விவசாயிகளும் வெளியேறினர். நடக்க முடியாமல் நடந்த கருவுற்ற பெண்கள் ரோடுகளின் மீதே குழந்தைகளை பெற்றெடுத்தனர்.

மராட்டியர்கள் வந்தபோது "தங்கம் வெள்ளி இவற்றைப் பறித்துக் கொண்டனர். மற்றப் பொருட்களை ஒதுக்கிவிட்டனர். சிலருடைய கையை வெட்டிவிட்டனர், சிலரது மூக்கை வெட்டிவிட்டனர்; சிலரை கொன்றுவிட்டனர். ஓட முயன்ற மிக அழகான பெண்களை இழுத்துச் சென்றனர். அவர்களது கழுத்திலும் விரல்களிலும் கயிற்றைக் கட்டிவைத்தனர். ஒருவன் ஒரு பெண்ணை முடித்ததும் அவள் அலறிக் கொண்டே இருக்கும்போதே அவளை இன்னொருவன் எடுத்துக் கொண்டான். பார்கிஸ் (மராட்டியர்) மோசமான, மிருகத்தனமான பாவச்செயல்களைச் செய்துமுடித்து அந்தப் பெண்களை போகவிட்டனர்.




**அனார்க்கி (அராஜகம்)**
கிழக்கிந்தியக் கம்பெனி, கார்ப்போரேட்களின் வன்முறைகள், கொள்ளை போன ஒரு பேரரசு
வில்லியம் டால்ரிம்பிள்

விளைநிலங்களைக் கொள்ளையடித்த பிறகு கிராமங்களில் நுழைந்தனர். வீடுகளுக்குத் தீவைத்துக் கொளுத்தினர். சிறியதோ பெரியதோ பங்களாக்கள் குடிசை வீடுகள், கோயில்கள் எல்லாவற்றையும் கொளுத்திவிட்டனர். ஒரேயடியாக கிராமங்களை அழித்தனர். எல்லாத் திசைகளிலும் சுற்றிச் சுற்றி கொள்ளையடித்தனர்". இது இப்படித் தொடர்கிறது. கருணையற்ற வன்முறைதான் அரசியலைத் தீர்மானித்தது. இப்போது கூட, போர் கடைசி வழியாக இருந்தாலும், அது தொடங்கிவிட்டால், வன்முறையும், கொடூரங்களும், பெரும் எண்ணிக்கையில் சாதாரண மனிதர்கள் கொல்லப்படுவதும் தவிர்க்க முடியாதவையாகிவிட்டன. சதாம் உசைனுக்கும் கர்னல் கடாஃபிக்கும் நடந்தது விதிவிலக்கு அல்ல. வரலாறு முழுவதிலும் இது நடந்து வந்திருக்கிறது. போர் நடக்கும் போதும் அது முடிந்த பின்னரும் நிகழும் காட்டுமிராண்டித்தனத்தில் 16ஆம் நூற்றாண்டுக்கும் 21ஆம் நூற்றாண்டுக்கும் பெரிய வேறுபாடுகள் இல்லை.

மராட்டியர்கள் ஆங்கிலேய அல்லது ஐரோப்பிய வாழிடங்களை மிகக் கவனமாகத் தவிர்த்தனர். ''ஏனெனில் அவர்கள் பீரங்கிகள், துப்பாக்கிகளை பயன்படுத்துவதில் திறமையானவர்கள்''. மராட்டியர்கள் தான் வங்காளிகளை ஆங்கிலேயர்களுக்கு ஆதரவாகத் திருப்பியவர்கள் என்று தோன்றுகிறது. அவர்களது ஆதிக்கம் முகலாயர்களை விட சிறந்திருந்தது. ஒருவகையான சமூக ஒழுங்கை நிலைநாட்டினர். சுஷ்தாரி என்ற இன்னொருவர் இவ்வாறு எழுதினார்: ஆங்கிலேயர்கள் யாரையும் மனம்போனபடி வேலையிலிருந்து விலக்குவதில்லை. திறமையான ஒவ்வொருவரும் அவராக வேலை வேண்டாம் என்றோ ஓய்வடைய விரும்புகிறேன் என்று சொல்லும் வரை வேலை பார்க்கலாம். குறிப்பிடப்படவேண்டிய இன்னொன்று என்னவெனில் அவர்கள் இந்துக்கள், முஸ்லிம்கள் அனைவருடைய விழாக்களில் பங்கெடுத்துக் கொண்டார்கள் எல்லோருடனும் கலந்து பழகினார்கள். எந்த இனத்தைச் சேர்ந்த அறிஞர் என்றாலும் பெரும் மரியாதையுடன் நடந்து கொண்டார்கள்''.

'கிழக்கிந்தியக் கம்பெனி என்ற வணிக நிறுவனம் அரசைப் போல ஆட்சி நடத்தியது' என்று நூலாசிரியர் கூறுகிறார். பிரிட்டிஷ் படைகளை எதிர்த்துப் போர்புரிந்து தோற்கடித்த அமெரிக்கத் தேசபக்தர் கூறுவதை இவ்வாறு நினைவுகூர்கிறார்: "கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியாவைக் கொள்ளையடித்துவிட்டு, அமெரிக்கா என்ற புதிய களத்தில் கொள்ளையடிப்பதில், ஒடுக்குவதில் கொடுமைகள் இழைப்பதில் தனக்கிருந்த திறமைகளை நிகழ்த்தத் திட்டமிட்டது. வங்காளத்தில் இணையற்ற காட்டுமிராண்டித் தனத்தை, மிரட்டிப்பறிப்பதை, ஏகபோகத்தை நடத்திச் சீரழித்த கிழக்கிந்தியக் கம்பெனி அமெரிக்காவிலும் அதையே நடத்த விரும்பியது. நாம் (இந்தியச்) சிப்பாய்களோ மராட்டியர்களோ அல்ல. அதற்காக கடவுளுக்கு நன்றி சொல்ல வேண்டும்'.

மிகவும் அரசியல் பலமுள்ள வணிகர்கள் வங்காளத்தில் அன்று இருந்தனர். ஜகத் சேட் என்ற வட்டிக் கடைக்காரர்கள் வங்காளத்தை ஆள்கிறவர்களுக்கு நிதி ஆதாரம் அளிப்பவர்களாக, ஆள்கிறவர்களைக் கட்டுப்படுத்துகிறவர்களாக இருந்தனர். 1740இல் அலி வர்தி கான் அன்றைய ஆட்சியைக் கவிழ்த்துப் பதவிக்கு வருவதற்குப் பின் அவர்களே இருந்தனர். அதற்கு நிதியும் அளித்தனர்.

கிழக்கிந்தியக் கம்பெனி தனது அதிகாரிகள் இந்தியாவைக் கொள்ளை அடிக்கவும் அதனால் அவர்களுக்கு குறையேதும் நேராமலும் பார்த்துக் கொண்டது. ஒரு எழுத்தராக இருந்த ராபர்ட் கிளைவ் தான் சம்பாதித்த பணத்தைக் கொண்டு பிரித்தானிய பாராளுமன்றத்தில் உறுப்பினரானது நூலில் குறிப்பிடப்படுகின்றது. கிழக்கிந்தியக் கம்பெனி கொள்ளையடித்த லாபமனைத்தையும் இங்கிலாந்துக்கு அனுப்பியது. அதன் மூலம் பாராளுமன்றத்தில் செல்வாக்குப் பெற்று அதைவைத்து மேலும் லாபம் அடைந்தது. இன்றைய பன்னாட்டு நிறுவனங்கள் தங்கள் விருப்பப்படி ஆட்சியாளர்களை மாற்றுவதைப் போன்ற நிலை அன்றும் இருந்தது. வணிகத்தின் மூலம் அரசியலைக் கட்டுப்படுத்தும் முதல் நிறுவனமாக கிழக்கிந்தியக் கம்பெனி திகழ்ந்தது. கிழக்கிந்தியக் கம்பெனியே கூட நினைத்திராத அளவுக்கு அதன் திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேறின. கிழக்கிந்தியக் கம்பெனி கடந்த காலத்தில் ஓர் அரசனுக்கு எதிராக இன்னொருவனை நிறுத்தி இருவரிடமிருந்தும் அதிகச் சலுகைகளை எப்படிப் பெற்றதோ அது போலவே இன்றைய பன்னாட்டு நிறுவனங்கள் தங்கள் பணபலத்தின் மூலம் தமது வருமானம், பலம், கௌரவம் இவற்றுக்கு ஏற்ற வகையில் அரசுகளின் கொள்கைகளை மாற்றும்படி செய்கின்றன. இந்தப் புத்தகத்தில் போர்கள் அதனடிப்படையில் நிகழ்வுகள் குறித்துக் கால வரிசைப்படி தகவல்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. இந்திய அரசர்கள் சிறந்த நிர்வாகிகளாக, மிகச்சிறந்த படைத்தளபதிகளாக இருந்த போதிலும் குறுகிய பார்வையுடன் செயல் பட்டதை இந்நூல் பதிவு செய்கிறது. பிரித்தானிய இந்தியப் படைபலம் பல போர்களில் வெற்றியைத் தீர்மானித்தது என்பதை மறுக்க முடியாது. அமைப்புரீதியாகச் சிறப்பாகத் திரட்டப்பட்ட நிறுவனத்துக்கு, வெளிநாட்டு ஆக்கிரமிப்புக்கு எதிராக ஒன்று சேர்ந்து போரிட முடியாத நிலையில் இந்திய மன்னர்கள் இருந்தனர்.

இந்தியா என்ற அரசியல் கருத்துருவம் விடுதலைக்காகப் போரிட்டவர்களின் புனைவாக இருந்தது என்ற எனது புரிதல் இந்த நூலைப் படித்தது உறுதிப்பட்டது. அதற்கு முன்னரும் பண்பாட்டு ஒற்றுமை இருந்தது என்று நாம் வாதிடலாம். இந்தப் புனைவை நாம் நம்ப விரும்புகிறோம். இந்தப் புனைவு நாம் உற்சாகத்துடன் போராட்டக் களத்தில் இறங்க வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்டது. இதன்படி பார்த்தால் கூட, தமிழகத்துக்கும் கர்னாடகாவுக்கும் பண்பாட்டுத் தொடர்பு இருந்தால் அது மஹாராஷ்டிராவுக்கு அப்பால் தொடர்ச்சியாக இல்லை. ஆனால் கர்னாடகத்துக்கும் மஹாராஷ்டிராவுக்கும் பண்பாட்டுப் பொதுமைகள் உண்டு. இதை எண்களின் மூலம் விளக்க முயற்சிக்கிறேன். ஒன்று என்ற எண்ணுக்கும் 2 என்ற எண்ணுக்கும் தொடர்பு தொடர்ச்சியும் உண்டு. அதுபோலவே 2 க்கும் 3க்கும் தொடர்பு உண்டு. அதுபோலவே அடுத்தடுத்த எண்களுக்கும் தொடர்ச்சி உண்டு. இந்த வாதத்தின்படி பார்த்தால் 1க்கும் 10க்கும் தொடர்பு உண்டு. ஆனால் அது 1க்கும் 2க்கும் உள்ள நெருங்கிய தொடர்பு போன்றது அல்ல. இந்த

வகையில் பார்த்தால் உலகம் முழுவதும் பண்பாட்டால் ஒன்றுபட்டது என்றும் சொல்லலாம். வேற்றுமைகளை மட்டும் பார்த்தால் வேறுபட்டது என்றும் சொல்லலாம்.

ஈரானியத் திரைப்படங்களை நான் பார்த்தால் அவர்களுடைய பண்பாட்டுக்கும் வட இந்தியப் பண்பாட்டுக்கும் ஒற்றுமைகள் தெரிகின்றன. குறிப்பாக பஞ்சாபிகளின் முகவடிவங்கள் கூட ஈரானிய முகங்களை ஒத்திருக்கின்றன. தமிழ்நாடும், பஞ் சாபும் இந்தியநாட்டின் பகுதிகளாக இருப்பதால் அதே காரணத்தை வைத்து, தமிழ்நாட்டுக்கும் ஈரானுக்கும் பண்பாட்டு ஒற்றுமைகள் இருக்கின்றன என்று வாதிட முடியாது. அதுபோலவே இந்தியாவின் வடகிழக்குப் பகுதிகளில் இருப்பவர்களுக்கும் பர்மிய மக்களுக்கும் பண்பாட்டுத் தொடர்புகளும் தொடர்ச்சிகளும் உண்டு. தென்னிந்தியாவைப் பொறுத்தவரை தமிழ்நாடு, கேரளா, இலங்கை இவற்றுக்கிடையே பண்பாட்டுத் தொடர்பும் தொடர்ச்சியும் உண்டு. இந்தப் பண்பாட்டு ஒற்றுமைகளின் அடிப்படையில் பர்மா இந்தியா என்றோ அல்லது இலங்கையும் இந்தியா என்றோ வாதிட முடியாது.

இதற்கு நேர் மாறாக பாகிஸ்தானை எடுத்துக் கொண்டால், இந்திய பாகிஸ்தானிய மக்களின் பண்பாடுகள் மிகவும் நெருங்கியவை. சொல்லப் போனால் மதம் தவிர இரண்டும் ஒன்றேதான். நாம் ஒரே நாடாகத்தான் இருந்தோம் என்று சொல்வதில் பொருளில்லை. நாம் ஒரே நாட்டின் பகுதிகளாக இருந்ததில்லை . முன்பு இருந்த பல பேரரசுகளின் பகுதிகளாக இருந்தோம். தேசம் நாடு என்ற கருதுகோள்கள் விடுதலை அடைந்த நேரத்தில் உருவானவை.. அதனால், பண்பாட்டு ஒற்றுமை மட்டும் ஒரு தேசம் அமைவதற்கு அடிப்படையாக முடியாது.

நேரடி அரசியல் அனுபவங்கள், அரசியல் புனைவுகள் தேசங்களை வரையறுப்பதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இது நாம் பிரித்தானியர்களால் தங்கள் ஆட்சிக்காகப் பிரிக்கப்படவில்லை என்பதில் முடிகிறது. நாம் பிரிந்தே தான் இருந்தோம். பேரரசுகளின் கீழ் ஒன்று சேர்க்கப்பட்டிருந்தோமே தவிர ஒன்றாக இருந்ததில்லை. இந்தியா என்ற தேசம் பல்லாயிரம் வருடங்களாக இருந்தது என்று நாம் கற்பனை செய்து கொண்டால் அது உண்மையல்ல. நிலப்பரப்பு இருந்தது, மக்கள் இருந்தனர். அரசியல் ஒருமைப்பாடு இப்போது இருந்தது போல் இருந்ததில்லை. அதனால்தான் இந்திய தேசம் என்பது ஞானிகளான நமது விடுதலைப் போராட்ட வீரர்களால் உருவகிக்கப்பட்டது.

பெரும் விடுதலைப் போராட்டத்தின் விளைவாக ஒன்றிணைந்த நாம் ஒற்றுமையாக இருக்க அரசியல் காரணங்களும் மற்ற காரணங்களும் இருக்கின்றன. பன்னாட்டு நிறுவனங்கள் உலகமயமாக்கல், கட்டுப்பாடுகளற்ற சந்தை என்ற பெயர்களில் நமது அரசியலில் செல்வாக்கு செலுத்த முனைகின்றன. தேசம் என்ற கருதுகோள் தொடர்ந்து கேள்விக்கு உள்ளாக்கப்படுகிறது. மனிதர்கள் ஒரு நாட்டில் பிறக்கிறார்கள், இன்னொரு நாட்டில் கல்வி பெறுகிறார்கள், வேறொரு நாட்டில் வேலைக்குச் செல்கிறார்கள் இப்படி நாடு விட்டு நாடு மாறிக் கொண்டிருக்கிறார்கள். கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு என்பதைப்போல், தனித்திறமைகள் உள்ளவர்களுக்கு எல்லா நாடுகளிலும் வரவேற்பு இருக்கிறது. தங்களது திறமை எங்கெல்லாம் மதிக்கப்படுகின்றதோ அங்கெல்லாம் அவர்கள் செல்வார்கள். தேசியவாதம் என்றும் தேசபக்தன் என்றும், தேசத் துரோகி என்றும் இந்தக் காலத்தில் பேசுவது கடந்த காலக் கதைகளாகவே இருக்கும். அடக்குமுறையைப் பின்பற்றும் அரசுகளுக்கும் ஆள்வோருக்கும் மட்டுமே அது பயன்தரும். படைபலத்தின் மூலம் ஆதிக்கம் செலுத்த வேண்டும் அல்லது உலகின் முதற்பெரும் வல்லரசு என்ற அளவில் பலம் பெற வேண்டும் என்று வாதிடுகிறவர்களுக்கே அது பயன்படும். ஆப்பிரிக்காவில் தோன்றி உலகெங்கும் பரவிய மானிட இனம் போலவே, தேசங்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும், இன்றைய மனிதர்களும் உலகமெங்கும் சுற்றிவரும் சுதந்திரம் பெறவேண்டும். ஏனெனில் நாம் அனைவரும் அடிப்படையில் ஒரே மானிட இனம். நிர்வாக வசதிக்காக தேசங்கள் அரசுகள் என்று பிரிந்திருக்கிறோம். குடியுரிமை, அடிப்படை உரிமைகள், பல்வேறு இன மக்களுடன் நாம் செய்து கொண்ட சமரசங்கள் இவற்றின் காரணமாகவே இந்தியா என்ற அரசியல் கருதுகோளை நிதர்சனமாக்கி இருக்கிறோம். இவற்றின் அடிப்படையில்தான் நாம் தேசம் அரசு என்பதை அணுகவேண்டும்.

இந்த அரசியல் யதார்த்தம் நமது இன்றைய, எதிர்கால அரசியல் தேவைகளுடன் பொருந்தியிருக்க வேண்டும். அது நாம் கற்பனை செய்து கொள்ளும் கடந்த காலத்தின் அடிப்படையிலோ அல்லது அதன் பெருமையிலோ புதைந்து இருக்க முடியாது. தேசியவாதத்திற்கான இந்த நவீன அணுகுமுறைதான் வேற்றுமைகள் இருந்தாலும் நாம் தொடர்ந்து ஒன்றிணைந்திருக்க வழிவகுக்கும்.

இறுதியாக 'அராஜகம்' (அனார்க்கி) அன்று நம்மை ஆண்ட மன்னர்களால் உருவாகவில்லை . அதுதான் நமது அரசியல் யதார்த்தமாக இருந்தது. ஒவ்வொரு அரசனுக்கும் இன்னொரு அரசனுக்கும் உள்ள பேராசை, குறிக்கோள் இவற்றின் மோதல் இந்தப் பெரும் நிலப்பரப்பின் யதார்த்தமாக இருந்தது. அவை 1947இல் மூன்று நாடுகளாக உருவாயின.

நமது கடந்தகாலம் பற்றிய பல கனவுகளை மிகச்சிறந்த இந்நூல் மாற்றிவிடுகிறது. இன்னும் சிறந்த வகையில் நமது தேசியத்தை புனைந்து கொள்வது எவ்வாறு என்று தேடுகிற ஆவலைத் தூண்டுகிறது. ●